## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

# 2013

# ஆண்டறிக்கை

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நோக்கும் பணியும் | 1 |
| நிறுவனத் தகவல்கள் | 2 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 3 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 4 |
| தவிசாளரின் மீளாய்வு | 12 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று | 21 |
| சிறப்புக் கூறுகள் | 22 |
| இடர் முகாமைத்துவம் | 23 |
| நிறுவன ஆளுகை | 26 |
| நிதியியல் கூற்றுக்கள் | 31 |
| விரிவான வருமானக் கூற்று | 32 |
| நிதியியல் நிலைக் கூற்று | 33 |
| பங்குமூலதன மாற்றக் கூற்று | 34 |
| காசுப்பாய்சல் கூற்று | 35 |
| முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் | 36 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புக்கள் | 51 |
| தணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 61 |
| பத்து வருட சராம்சம் | 88 |
| நிதியியல் கலைச் சொற்கள் | 90 |
| சுருக்கப் பதங்கள் | 91 |

**எமது நோக்கு**

தேசத்தின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்து பிராந்தியத்தில் பெற்றோலியம் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் விரும்பத்தகு, நம்பகத்தகு, சூழல் நட்புமிகு தொழில்முயற்சியில் முதன்மை பெற்று விளங்குதல்.

**எமது பணி**

ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் பற்றிய மிகுந்த கரிசனையுடனும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதுடனும் கூடிய அனைத்து செயற்பாடுகளிலும் தொழிலாளர் பங்களிப்பினை ஈடுபடுத்தல், புதுமை படைத்தல் மற்றும் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை பேணுதல் ஊடாக தொழில்முயற்சியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற அதேவேளை விசுவாசமும் வினைத்திறனுமிக்க விநியோகத்தர் வலைப்பின்னலொன்றினூடாக வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களையும் விஞ்சுகின்ற அனைத்து தீர்வுகளையும் சேவைகளையும் வழங்குவதனூடாக உயர்தரமிக்க பெற்றோலிய சுத்திகரிப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் தலைசிறந்த தரத்தினை அடையப் பெறல்.

# நிறுவனத் தகவல்கள்

### நிறுவன்தின் பெயர்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### சட்ட வடிவம்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனம்.

## பணிப்பாளர்கள் சபை

### தவிசாளர்

திலக் கொள்ளுரே (2012.08.10 தொடக்கம் 2013.07.31)
திரு எஸ். அமரசேகர (பதில்) 2013.08.01 தொடக்கம்

### முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு. எல் ஈ. சுசந்த சில்வா

### பணிப்பாளர்கள்

திருவதி. சந்தயா விஜேய பண்டார
கலாநிதி. ஹன்ஸா விஜேயசூரிய
திரு. எச் .டி .பி. சமன்குமார
திருவதி. எம்.வி.ஐ.வி. அமரசேகர (2013.02.21 தொடக்கம்)
திரு. கே. எச். ரி நாமல் சுமனரத்ன (2013.04.24 தொடக்கம்)
திருவதி எஸ். புஷ்பா வெல்லபில்லி (2013.02.07 அன்று பதவி விலகினார்)

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### பதிவு செய்யப்பட்ட காரியாலயம்

இல. 609 கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு - 09

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 5455455 |
| தந்தி | : | “லங்கா ஓயில்” |
| கேபிள்கள் | : | சிபெற்கோ |
| டெலெக்ஸ் | : | 21235 – சீபெற்கோ- சீஈ |
| தொலைநகல் | : | 5455-400 |
| மின்னஞ்சல் | : | cpcsec@ceypetco.gov.lk |
| இணையத்தளம் | : | www.ceypetco.gov.lk |

### வங்கிகள்

மக்கள் வங்கி
இலங்கை வங்கி
கொமர்ஷல் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி லிமிடட்
நேஷன் ட்ரஷ்ட் வங்கி

# சிரேஷ்ட முகாமைத்துவம்

**திரு எஸ். அமரசேகர**
பதில் தவிசாளர்

திரு. எல் ஈ. சுசந்த சில்வா

**முகாமைத்துவப் பணிப்பாளர்**

**திரு. என். ஆர்.ஜயசேகர**
சுத்திகரிப்பு முகாமையாளர்

**திரு. எஸ். டபிள்யூ. கமகே**
பதில் பிரதிப்பொது முகாமையாளர்
(மனிதவளமும் நிர்வாகமும்)

**திரு டபிள்யூ. சரத் பெரேரா**
பதில் பிரதிப் பொது முகாமையாளர்
(நிதி)

**திரு. என் ஆர். அமரசிங்க**
பிரதி சுத்தகரிப்பு முகாமையாளர்
(தயாரித்தலும் தொழிற்படுத்தலும்)

**திருமதி ஆர் ரி. ஏ. தாபரே**
நிதி முகாமையாளாா்

**சீ. பீ. சமரவீர**
வணிக முகாமையாளர்

**மேஜர். எம். ஆர். எஸ். பீ. சமரசிங்ஹ**
முகாமையாளர் (பாதுகாப்பு)

**திருமதி. எம் எஸ். கே. பர்னாந்து**
முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

**எஸ். டி. எஸ். ராஜபக்ஷ**
முகாமையாளர் (வழங்கல்)

**ஜி. பி. கே விஜேகோன்**
முகாமையாளர் (பொறியியல் மற்றும் வளாகம்)

**ஏ. டி. டப். கே. அபேசேகர**
பிரதி தொழிற்படுத்தல் முகாமையாளர்
(சபுகஸ்கந்த முனையம்)

**திரு. ஏ. ஆ. ஏபெல்**
பிரதிப் பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)

**ஜி. ஏ. ஏஸ். பி குணவர்த்தன**
பிரதிப் பொது முகாமையாளர்
(திட்டமிடலும் அபிவிருத்தியும்)

திரு. எல். ஜி. எம். ஆர. பெரேரா
பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (மின் மற்றும் உபகரணம்)

**பி. எச். ரி குலசேகர**
பிரதி சுத்தகரிப்பு முகாமையாளர்
( பாராமரித்தலும் கருத்திட்டங்களும்)

**திருமதி ஆர். ஏ. கே. சி. ஆரியரத்ன**
பிரதான சட்ட அலுவலர்

**திரு. சமந்த புஸ்பலால் விதான**
முகாமையாளர் (மனித வளங்கள்)

**எம் கே. கருசிங்ஹ**
முகாமையாளர் ( அபிவிருத்தி)

**திரு. எஸ். எம். சீ. பி. சமரகோன்**
சந்தைப்படுத்தல் முகாமையாளர்
(சில்லறை)

**எம் ஏ. டி. மல்லிகாராச்சி**
தொழிற்படுத்தல் முகாமையாளர்
(விமானத் துறை)

**டப். எம். கே. ஆர். பி. விக்ரமசிங்க**
முகாமையாளர் (விவசாய இரசாயனங்கள்)

# பணிப்பாளர்களின் அறிக்கை

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கமைய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் 2013 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டிற்கான தமது ஆண்டறிக்கையினை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.

### பிரதான செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள், இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல் என்பனவாகும்.

### துணைக் கம்பனி

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் (CPSTL) துணைக் கம்பனியின் செயற்பாடுகள், எரிபொருள் சேமிப்பு கொள்கலன் வசதி வழங்குதல், விநியோக வசதிகள் மற்றும் தகவல் தொழிநுட்ப சேவை என்பனவாகும். இதில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பங்கு மூலதனத்தின் 2/3 இனை முதலீடு செய்துள்ளது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் 09 பணிப்பாளர்களில் 03 பணிப்பாளர்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

### ஆண்டின் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

ஆண்டிற்கான கூட்டுத்தாபனச் செயலாற்றுகை பற்றி பக்கம் 12 தொடக்கம் 20 வரை காணப்படும் தவிசாளரின் மீளாய்வு குறிப்படுகின்றது.

### இடர்களும் உள்ளகக் கட்டுப்பாடுகளும்

இடர்களை முகாமை செய்வதற்கான ஒட்டு மொத்த பொறுப்பினையும் பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது. இந் நோக்கத்திற்காக பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தில் செயல்திறன் மிக்க மற்றும் அனைத்தும் அடங்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளது. உள்ளக கட்டுப்பாட்டுமுறைமைகள், கூட்டுத்தாபனம் ஆட்படுத்துகின்ற இடர்களைத் தணிப்பதற்கும் முக்கிய தவறுக்கூற்றுக்கள் அல்லது இழப்புகளுக்கெதிரான நியாயமான ஆனால் முற்றிலுமல்லாத உத்தரவாதத்தினை வழங்குவதற்கும் மீளாய்வு செய்யப்பட்டு மீள்வடிவமைக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன, கொடுக்கல் வாங்கல்கள் அங்கீகரிக்கப்பட்டு முறையாக பதியப்பட்டுள்ளன அத்துடன் முக்கிய தவறுகள் மற்றும் முறைகேடுகள் பற்றி நியாயமான, குறைந்த காலப்பகுதியொன்றினுள் தடுப்பதற்கோ அல்லது கண்டுபிடிப்பதற்கான நியாயமான உத்தரவாதத்தினை பணிப்பாளர்களக்கு வழங்குகின்றது. பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தினுள் வலுவான கட்டுப்பாட்டு சூழலொன்று நிலவுகின்றது என்றும் கூட்டுத்தாபன சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகள் செயல்திறன் மிக்கவை என்றும் திருப்தியடைகின்றது.

### நிறுவன ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது செயல்திறன்மிக்க நிறுவன ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைப்படுத்தலொன்றினை பேணுகின்ற பொறுப்பினைக் கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் நிதியில் தொழிற்பாட்டு மற்றும் இணங்கியொழுகுதல் செயற்பாடுகள் நிறுவன ஆளுகை நடைமுறையினுள் பணிக்கப்பட்டு செயல்திறன் மிக்கவாறு கட்டுபடுத்தப்படுகின்றன. பல்வேறு ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குகின்ற நடவடிக்கைமுறைகள் மற்றும் நடைமுறைகள் இவ் அறிக்கையின் 26 தொடக்கம் 30 ஆம் பக்கங்களில் காணப்படுகின்ற நிறுவன ஆளுகை அறிக்கையில் விவரிவிதிக்கப்பட்டுள்ளன.

**மனித வளங்கள்**

கூட்டுத்தாபமானது தொழில் பணி மற்றும் நோக்கு என்பவற்றை மெய்ப்பிப்பதற்கு இட்டுச் செல்கின்ற பெறுமதி மிக்க மனிதவள பங்களிப்புக்களை அடையாளப்படுத்தியுள்ளது. இந் நோக்கத்தினை எய்துவதற்கு நிறுவன இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதனை நோக்கிய அவர்களின் பங்களிப்பினை உச்சப்படுத்தும் பொருட்டு மிகவும் பெறுமதி மிக்க மனித மூலதனத்தினை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது மனிதவளக் கொள்கைகளானது கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அவர்களின் உச்ச பங்களிப்பினை உறுதி செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் உட்பட அனைத்து வகையான ஊழியர்களுக்கும் புதிய வாய்ப்புக்களை வழங்குவதனை வழியுறுத்துகின்றது. பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன கூட்டுத்தாபனத்தின் மனிதவளத்திற்கு திறன் மற்றும் தகைமைகளை வழங்குவதற்கு தொழிநுட்ப மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை பெற்றுக் கொள்வதற்கான மனித அபிவிருத்தியில் மிக முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளன.

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழு மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன், கணக்காய்வுக் குழுத் தவிசளார் உட்பட அனைவரும் நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்களாகும். இக் குழு 2000 மார்ச் 15 ஆம் திகதிய பி/எப்/பீஈ 7 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட தெளிவாக வரையறுக்கப்பட்ட விசாரணை நியதிகளின் கீழ் தொழிற்படுகின்றது.

**உப குழுக்கள்**

பணிப்பாளர்கள் சபைக்கு அதன் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதற்காக சிரேஸ்ட முகாமைத்துவக் குழு, கணக்காய்வுக் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, கொள்வனவுக் குழு மற்றும் வாராந்த கையிருப்பு மீளாய்வுக் குழு ஆகிய ஐந்து உப குழுக்கள் உதவியளிக்கின்றன. உப குழுக்கள் பற்றிய விபரங்கள் இவ்வறிக் கையின் 26 தொடக்கம் 30 வரையான பக்கங்களில் காணப்படுகின்ற நிறுவன ஆளுகை அறிக்கையில் விபரிக்கப்படுள்ளன.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இவ்வறிக்கையின் 36 தொடக்கம் 50 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் இல்லை.

**நிதியியல் செயலாற்றுகை**


இவ் அறிக்கையில் காணப்படும் நிதிக்கூற்றுகள், 2013 டிசம்பர 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றுகையினை எடுத்துரைக்கின்றது.


**வருமானம்**

கூட்டுத்தாபனத்தின் பிராதான வருமான மூலம் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள் போன்ற பெற்றோலியப் பொருட்களின் விற்பனை மூலம் ஈட்டப்படும் வருவாயாகும்.

துணைக் கம்பனியின் பிரதான வருமானம், பெற்றோலியப் பொருட்களினை வழங்கல் செய்வதற்கான செயல்வீதக் கட்டணங்களும் போக்குவரத்து கட்டணங்களும் ஆகும்.

ஆண்டிற்கான புரள்வு, 2012 ஆம் ஆண்டின் ரூபா 512,910 மில்லியன் இலிருந்து ரூபா 490,381 மில்லியன் ஆக குறைவடைந்தது. சக்தி பிறப்பாக்கத்திற்காக ஓட்டோ டீசல் மற்றும் உலை எண்ணெய் பயன்பாடு குறைவடைந்ததன் காரணமாக விற்பனை அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% வீழ்ச்சி கண்டிருந்தது. 14% விற்பனை வீழ்ச்சிக்கு மத்தியிலும் 2013 பெப்ரவரியில் மேல் நோக்கிய விலை மீளாய்வு 2012 இல் ஆக்கப்பட்ட வருவாயின் 96% அடைவொன்றினை தோற்றுவித்தது.





2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான புரள்வு கூட்டுத்தாபனத்தின் மொத்த புரள்வு, உள்நாட்டு விற்பனை 86.91%, நேரடியற்ற ஏற்றுமதிகள் 12.33%, கப்பல் எரிபொருள் வழங்கல் 0.76% போன்றவற்றிலிருந்து தருவிக்கப்பட்டிருந்தது. என்பவற்றினை உள்ளடக்குகின்றது உள்நாட்டு விற்பனையின் பிரதான கூறுகளாகும்.

**மொத்த இலாபம்**

இவ் ஆண்டின் போது எதிர்கொள்ளப்பட்ட அனைத்து சாவால்களையும் தாண்டி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது மொத்த இலாபமொன்றினை ஈட்டி கூட்டுத்தாபனம் பதிய திருப்பு முனையொன்றினை அடைந்தது. 2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த இலாபம், முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 60,781.737 மில். நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2012 இற்கு எதிராக ரூபா 83,525.296 மில் அதிகரிப்புபொன்றுடன் ரூபா 22,743.559 மில் ஆகவிருந்தது.




மின் பிறப்பாக்கத்திற்காக மானிய விலையில் விற்பனை செய்யப்பட்ட எரிபொருள் அளவில் குறைப்பு மொத்த இலாபத்தில் கணிசமான வளர்ச்சியொன்றுக்கு பங்களிப்புச் செய்திருந்தது.

இதற்கு மேலதிகமாக, விற்பனைச் செலவு 18% இனால் குறைந்தமையும் ஆரோக்கியமான மொத்த இலாப அதிகரிப்பிற்கு கணிசமான பங்களிப்பினை வழங்கியது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சர்வதேச எரிபொருள் சந்தையில் சிறியளவான விலை வீழ்ச்சி மற்றும் குறைந்த மற்றும் சாதகமான அந்நியச் செலாவணி மாற்று வீதம் என்பன விற்பனை வீழ்ச்சியினை விட உயர்வான வீதமொன்றில் விற்பனைச் செலவு குறைவடைவதற்கு காரணமாகவிருந்தது.

### ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

இவ்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 373.99 மில் ஆகவிருந்ததுடன் இது முன்னைய ஆண்டினை விட 31% அதிகரிப்பாகும். பணியாட்தொகுதியின் கடன் வட்டி அதிகரிப்பு, நிலையான சொத்துக்கள் விற்பனை இலாபம் மற்றும் பாவனையில் இருந்து ஒதுக்கிய பொருட்கள் விற்பனை என்பன இவ் அதிகரிப்பின் மீது கணிசமான தாக்கம் செலுத்தியிருந்தது.


### தேறிய நிதி வருமானமும் கட்டணங்களும்

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடத்தில் நிதிச் கட்டணங்களில் அதிக வேறுபாடுகாணப்படவில்லை. எனினும், நிதிவருமானம், 2012 ஆம் ஆண்டினை விட 58% இனால் குறைவடைந்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சில வெளிநாட்டு நாணயக் கடன்களை தீர்ப்பனவு செய்துள்ளதுடன் நாணயக் கடன்கள் மீது ரூபா 415 மில் செலவிட்டது. கூட்டுத்தாபனத்தின் பணியாற்று மூலதன தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு கணிசமான நிதியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. இது நிதிவருமானத்தில் வீழ்ச்சியொன்றினை தோற்றுவித்திருந்தது.

### இலாபம்/நட்டம்

முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த ரூபா 97,508.373 மில். நட்டத்துடன் ஒப்பிடுகையில் 91.79% மேம்பாட்டினை பிரதிபலித்து கூட்டுத்தானம் 2013 இல் ரூபா 7,948.225 மில் நட்டமொன்றினை அறிக்கையிட்டது. எனினும், பெற்றோலிய உற்பத்திகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு பொறிமுறை

இல்லாமையின் காரணத்தினால் கூட்டுத்தாபனமானது சா்வதேச எண்ணெய் விலை மாறுதல்களுக்கமைய பெற்றோலிய உற்பத்திகளின் செலவுப் பிரதிபலிப்பு விலை செய்யப்படாமையின் விளைவாக கூட்டுத்தாபனத்தின் நட்டம் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. கடந்த 5 வருடங்கிளின்போது ஏற்பட்ட நட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.




சா்வதேச சந்தையில் நிலவிய உயர்வான விலைகளின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலை 2013 இல் இரண்டு தடவைகள் மீளாயப்பட்டது. பெற்றோல், ஓட்டோ டீசல், சுப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் உள்நாட்டு சில்லறை விலை 2013 பெப்ரவரி 22 தொடக்கம் லீற்றரொன்றுக்கு முறையே ரூபா 3/= ரூபா 6/= ரூபா 3/ மற்றும் ரூபா 4/= இனால் அதிகரிக்கப்பட்டது. 2013 அம் ஆண்டுக்கான மொத்த பிரிவுசார் நட்டத்துடன் ஒப்பிடுகையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட பாரிய நட்டத்திற்கான காரணம் சக்தி பிறப்பாக்கத்திற்காக அதிக மானிய விலையில் ஒட்டோ டீசல், எரிபொருள் எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் விற்பனை செய்யப்பட்டமையாகும். இதற்கு மேலதிகமாக, கூட்டுத்தாபனத்தின் நட்டத்தின் மீது ஏற்றுமதித் துறையும் குறிப்பிடத்தக்க தாக்கதினை செலுத்தியது.

மேலும், இரண்டு வகையான உலை எண்ணெய் வகைகளினதும் (குறைந்த சல்பர் மற்றும் உயர் சல்பர்) உள்நாட்டு சில்லறை விலைகள் 2013.04.01 தொடக்கம் லீற்றர் ஒன்றுக்கு ரூபா. 25.00 இனால் அதிகரித்தது. எனினும், 2013 அம் ஆண்டின் ஏப்ரல் மற்றும் அதனைத் தொடர்ந்த மாதங்களில் பெய்த கனத்த மழையின் காரணமாக சக்தி பிறபாக்க நோக்கங்களுக்காக பெற்றோலியப் பொருட்களை பயன்படுத்தல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புச் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 121.21 மெ.தொ. மற்றும் 52.42 மெ.தொ. அளவுடைய முறையே உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் மிகை ஏற்றுமதி செய்யப்பட்டு 2013 இல் ரூபா. 12,324.79 மில் வருவாய் ஈட்டப்பட்டது.

2013 ஆண்டின் பிரிவு ரீதியான நட்ட விபரம் கீழே தரப்பட்டள்ளது.

| பிரிவு | 2013 | 2012 |
|---|---|---|
| | நட்டம் - ரூபா மில்லியன் | |
| போக்குவரத்து- மானிய விலையில் டீசல் வழங்கள் | **6,235.000** | 32,507 |
| சக்தி பிறப்பாக்கம் - மானிய விலையில் படிக மற்றும் எரிபொருள் எண்ணெய் வழங்கல் | **3,505.000** | 53,757 |
| விமானத்துறை- ஜெட் ஏ-1 எரிபொருள் அதிக மானிய விலையில் வழங்கல் | **1,251.000** | 336 |
| கைத்தொழில் -எரிபொருள் எண்ணெய் மற்றும் கைத்தொழில் மண்ணெண்ணெய் வழங்கல் | **954.000** | 3,271 |
| வீட்டுத்துறை- சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கல் | **3,011.000** | 3,902 |
| விவசாய சமூகம் - விவசாய இரசாயனங்கள் வழங்கல். | **70.000** | 2 |
| ஏற்றுமதித்துறை – படிக மற்றும் எரிபொருள் வழங்கல். | **4,464.000** | 114 |

மேற் குறிப்பிட்ட காரணங்களினால் பாரிய நட்டம் உறப்பட்டமைக்கு மத்தியில் பெற்றோல், சுப்பர் டீசல், விமான எரிபொருள், தார், மற்றும் கரைசல்கள் விற்பனை ரூபா 8,129 மில் இலாப பங்களிப்புடன் சாதாகமான பங்களிப்புச் செய்திருந்தன. இது கிடைக்கப்பெற்ற ரூபா 3,629 மில் ஏனைய வருமானத்துடன் சேர்த்து ஆண்டின் போதான மொத்த நட்டத்தினை ரூபா 7,984 மில் ஆக மட்டுப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தை இயலச்செய்தது.

சர்வதேச மசகு எண்ணெய் விலைகள் 2013 இல் சிறிது குறைவடைந்தன. சராசரி மசகு எண்ணெய் விலை (ஓமான்/டுபாய்) 2012 உடன் ஒப்பிடுகையில் 3% வீழ்ச்சியொன்றினை பிரதிபலித்து 2013 இல் பீப்பாயொன்றுக்கு அ.டொ. 110 வரை வீழ்ச்சியடைந்தது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் அரசியல் இடைத்தடங்களினால் உருவான வழங்கல் ஸ்திரமின்மை சர்வதேச மசகு எண்ணெய் விலைகளின் உயர்வினை அழுத்தியது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யின் சராசரி செலவு மற்றும் கப்பற்செலவு விலை 4.3% இனால் வீழ்ச்சியடைந்து 2013 இல் பீப்பாய்யொன்று அ .டொ 110 ஆகவிருந்தது.

எனினும், சுத்திகரிப்புச் செயன் முறையில் இருந்து அதிக விளைச்சளினையும் சுத்திகரித்தல் இலாபத்தினையும் பெற்றுத்தருகின்ற ரீதியில் சுத்திகரிப்புச் சாலைகளில் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான ஈரானிய மென்ரக மசகு எண்ணெய் கிடைக்கப் பெறாமையினால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சுத்திகரிப்புச் சாலை பாரியளவிலான உற்பத்தி தடங்கல்கள் மற்றும் தொழிநுட்ப பிரச்சினைகளுக்கு உட்பட்டு வருகின்றது. தற்போது அமுலில் உள்ள அமெரிக்க தடையின் விளைவாக, ஓமான் எக்ஸ்போர்ட பிளன்ட், மர்பன், அரேபியன் லைட் போன்ற வேறு மசகு எண்ணெய் மூலங்களுக்கு மாறுதல் உள்ளநாட்டில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இலாபத்தில் பாதமான தாக்கமொன்றினை விளைவித்து சுத்திகரிப்பு இலாபத்தில் கணிசமான வீழ்ச்சியொன்றினை ஏற்படுத்தியது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அமைச்சு மூலம் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டமைக்கு மத்தியிலும் பொருத்தமான மசகு எண்ணெய் வழங்குநரை இனங்காண முடியாதிருந்தமையினால் ஈரானிய பொருளாரத்தடையினால் பல தடவைகள் சுத்திகரிப்புச் சாலை மூடப்படுவதற்கு இட்டுச் சென்றது.

2013இன் போது மின் பொறித் தொகுதிகளுக்கான வழங்கல் குறைந்தமையின் காரணமாக பெற்றோலியப் பொருட்களுக்களின் மொத்த நுகர்வு குறைவடைந்த போதிலும், போக்குவரத்து துறைக்காக பொதுமக்கள் பெற்றோலிய நுகர்வு அதிகரித்த கேள்வியினை பிரதிபலிதது அதிகரித்துக் காணப்பட்டது.

வரிக்கு முந்திய இலாப/ (நட்டம்) விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா மில் | |
| வருவாய் | **518,152** | 542,146 |
| கழி: விற்பனைச் வரிகள் (உற்பத்தி வரயும் தே.க.வரியும்) | **(27,771)** | (29,236) |
| தேறிய விற்பனை வருவாய் | **490,381** | 512,910 |
| விற்பனைச் செலவுகள் சுங்க வரி மற்றும் து. வி வரி நீங்கலாக | **(441,345)** | (547,932) |
| கழி: இறக்குமதி வரிகள் (சுங்க வரி மற்றும் து. வி வரி) | **(26,293)** | (25,760) |
| மொத்த இலாபம்/ (நட்டம்) | **22,743** | (60,782) |
| தொழிற்படு வருமானம் | **374** | 285 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | **(11,965)** | (12,633) |
| நிர்வாகச் செலவுகள் | **(3,600)** | (5,801) |
| நிதிக் கட்டணங்கள் | **(18,540)** | (18,360) |
| நிதி வருமானம் | **3,255** | 7,721 |
| ஹெட்ஜிங் செலவுகள் | **(214)** | (7612) |
| ஏனைய செலவுகள் | **(37)** | (127) |
| வரிக்கு முந்திய நட்டம) | **(7,984)** | (97,308 |

## தொழிற்படுத்தல் செலவுகள்

மொத்த தொழில்படுத்தல் செலவுகள், முன்னைய ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட ரூபா 36,793.511 மில் தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வின் கீழான ஆண்டின் போது ரூபா 34,105.251 மில் ஆக குறைவடைந்தது. குறைவடைந்த மின்சக்கி துறை நுகர்வுக்கு நேரொத்த முனையக் கட்டணங்களில் வீழ்ச்சி குறிப்பிடத்தக்க சாதகமான விளைவினை வழங்கியது. வங்கி தரகு குறைப்பு, பிற்போடப்பட்ட வரிச்சொத்துகளின் திருப்பம் என்பனவும் தொழில்படுத்தல் செலவுகள் குறைப்பிற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியது.

## மூலதனச் செலவினம்

ஆண்டுக்கான மொத்த மூலதனச் செலவினம் ரூபா 4,023.521 மில் ஆக இருக்கும் அதேவேளை இது 2012 இன் போது ரூபா 1,280.428 மில் ஆக பதிவாகியிருந்தது.

## ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

கூட்டுத்தாபனத்தின் ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் அதிகரிப்பிற்கு முன்னெடுக்கப்படும் மூலதனக் கருத்திட்ட அசைவுகள் கணிசமான அளவு பங்களித்தள்ளதுடன் அதன் அசைவுகள் 52 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 4 இல் தரப்பட்டுள்ளன.

## ஒதுக்குகளும் மொத்த பங்குமூலதனமும்

2013.12.31 அன்று உள்ளவாறு எதிர்மறை பங்கு மூலதனம் இவ்வாண்டின்போது ரூபா. 236,528.740 ஆக மேலும் சிதைவடைந்தது. 2013.12.31 அன்று உள்ளவாறான எதிர்மறை பங்குமூலதன நிலைமைக்கு 2008 தொடக்கம் இருந்துவரும் நட்டங்கள் காரணமாகவிருந்தன. பங்குமூலதன அசைவுகள் 34 ஆம் பக்கத்தில் உள்ள பங்குமூலதன மாற்றக் கூற்றில் தரப்பட்டுள்ளது.

## பங்களிக்கப்பட்ட மூலதனம்

2013 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கூட்டுத்தானத்தின் மொத்த பங்களிக்கப்பட்ட மூலதனம், துணைக்கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2500 மில் உட்பட ரூபா 3,500 மில் ஆகும்.

## அரசாங்கத்திற்கான பங்களிப்பு

ஒவ்வொரு வருடமும் இலங்கை அரசாங்கத்திற்கு பாரியளவு வரிசெலுத்துநராக இலங்கைப் பெற்றோலியக் குட்டுத்தாபனம் காணப்படுவதுடன் மீளாய்வு ஆண்டின்போதான வரிப்பங்களிப்பு பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பங்களிப்பின் வகை | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா மில் | |
| பெறுமதி சேர்க்கப்பட்ட விரிகள் | 1,685 | 1,538 |
| உற்பத்தி வரி | 25,149 | 26,089 |
| துறைமுக விமான அபிவருத்தி அறவீடு | 15,823 | 20,810 |
| சுங்க வரி | 10,187 | 9,735 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 2,652 | 3,147 |
| **மொத்தம்** | **55,496** | **61,319** |

**பணிப்பாளர்கள் சபை**

சபையானது தவிசாளர் உட்பட 07 பணிப்பாளர்களை கொண்டுள்ளது. மீளாய்வின் போதான ஆண்டின்போது கூட்டுத்தானத்தின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

திரு. திலக் கொள்ளுரே (தவிசாளர்) 2013.07.31 அன்று பதவிவிலகினார்
திரு. எஸ் அமரசேகர (பதில் தவிசாளர்) 2013.08.01 அன்று தொடக்கம்
திரு. எல் ஈ. சுசந்த சில்வா - முகாமைத்துவப் பணிப்பாளர்
திருமதி. சந்தயா விஜேய பண்டார
கலாநிதி. ஹன்ஸா விஜேயசூரிய
திரு. எச் .டி .பி. சமன்குமார
திரு. எம். ரி. ஐ.வி அமரசேகர 2013.02.21 அன்று தொடக்கம்
திரு. நாமல் சுமனரத்ன 2013.04.24 அன்று தொடக்கம்
திரு. நாமல் சுமனரத்ன 2013.04.24 அன்று தொடக்கம்
திருவதி எஸ். புஷ்பா வெல்லபில்லி 2013.02.07 அன்று தொடக்கம்

**ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்புடைய திறந்தவர் கொடுக்கல் வாங்கலில் பணிப்பாளர்களின் நலன்**

பங்கு மூலதன உரிமையின் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தானத்தின் பின்வரும் பணிப்பபளர்கள் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவன பணிப்பாளர்களாக செயற்பட்டனர்.

1. திரு. எல் ஈ. சுசந்த சில்வா
2. திருமதி. எஸ். விஜேபண்டார
3. திரு. எச் டி பி சமன்குமார

**நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கம் மற்றும் ஊழியர்களுடன் தொடர்புபட்ட அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவு நிலுவைகளும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது என பணிப்பாளர்கள் தங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் திருப்தியடைகின்றனர்.

**தொடர்தியங்கும் எண்ணக்கரு**

பணிப்பாளர்கள் சபை, எதிர் காலத்திற்கான வர்த்தகரீதியான நிலைத்திருத்தல் தன்மையின் வலுவூட்டலினை உறுதிசெய்யும் பொருட்டு கூட்டுத்தானத்தின் எதிர்கால வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் நிறுவன வியாபாரத் திட்டத்தை தயாரித்துள்ளது. அதற்கமைய, நிதியில் கூற்றுக்கள் தொடர்தியகும் எண்ணக்கருவனை அடிப்படையாக கொண்டு தாயரிக்கப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்களின் நியமனம்**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் அதிபதியாகும். அவர் இலங்கை சனநாயக சோசலீசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இல் உள்ள ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பணிப்பாளர்கள் சபை சார்பாக


எஸ். அமரசேகர
**பதில் தவிசாளர்**

## தவிசாளரின் மீளாய்வு

### அறிமுகம்

#### உலக மசகு எண்ணெய் விலைகள் பற்றிய போது நோக்கு

சர்வதேச ஓமான்/டுபாய் மசகு எண்ணெய் விலைகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3% வீழ்ச்சியொன்றினை பிரதிபலித்து 2013 இல் பீப்பாய் ஒன்னு அ.டொ. 105 ஆக வீழ்ச்சியடைந்தது. விலை மட்டம் சிறிதளவில் குறைவடைந்திருந்த போதிலும், மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஏற்பட்ட அரசியல் இடைத்தடங்களின் காரணத்தினால் வழங்கல் ஸ்திரமின்மை சர்வதேச மசகு எண்ணெய் விலைகளை உயரத்தளவிலேயே வைத்திருந்தது. இதற்கு மத்தியில், ஈரான் மீதான அமெரிக்கத் தடை, ஏனைய இறக்குமதியாளர்கள் திரவத்தன்மை பிரச்சினைகளை எதிர்கொள்வதனையும் வேறு பற்றாக்குறைகளையும் தோற்றுவித்தது. ஓமான்/டுபாய் மசகு எண்ணெய் சாரசரி விலைகளின் அசைவு கீழே காட்டப்பட்டுள்ளது.




#### இலங்கைப் பொருளதார நோக்கு

இலங்கையின் பொருளாதாரம் கவர்ச்சிகரமாக 7.3 வீத வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் 2013 ஆம் ஆண்டில் வலுவான வளரச்சியடைந்ததுடன் பணவீக்கம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக தனி இலக்கம் மட்டத்தில் இருந்து வந்தது. ஆண்டின் இறுதியளவில் மத்திம தனி இலக்கத்தினை அடைவதற்கு படிப்படியாக மேலும் குறைவடைந்தது. இது பொருளாதாரத்தில் ஊதிய அழுத்தங்களை குறைத்ததுடன் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் அதிகரித்தது. நாட்டின் அனைத்து பிராந்தியங்களுக்கும் அத்துடன் சனத்தொகையின் அனைத்து வகுப்பினருக்கும் வளர்ச்சி நலன்கள் கிடக்கச் செய்வதனை உறுதி செய்கின்ற அதேவேளை நிலையான பொருளாதா வளர்ச்சியினை அடைவதற்கான அரசாங்கத்தின் மூலோபாயத்தின் மிக முக்கிய பகுதியொன்றாக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்படுத்தல்கள் காணப்பட்டன. இவ்வாண்டின் போது தலா வருமானம் அ.டொ. 3,280 வரலாற்று ரீதியாக அதிக பெறுமதியினை அடைந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு, முக்கிய அரச கூட்டுத்தாபனங்களின் நிதி நிலையில் அதிகரிப்பு ஏற்பட்ட ஆண்டாகவிருந்தது. அதிகரித்த முதலீட்டின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தர காலத்தில் அதன் வளர்ச்சித் தூண்டுதல், அதிகரிக்கப்பட்ட நுண்பாக பொருளாதார நிலைபெறுத்தன்மை மற்றும் மேம்படுகின்ற உலகப் பொருளாதார நிலைமைகள் என்பவற்றின் காரணமாக எதிர்காலத்தினை நோக்கி இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி தொடர்ந்தும் வளர்ச்சி தூண்டலில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது (மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2013)

## இலங்கையின் பெற்றோலியக் கைத்தொழில்

இலங்கை, இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளில் முழுமையாக தங்கியிருக்கின்ற நடாகும். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் பெற்றோலிய உற்பத்திகள் பிரதான இடைநிலை உற்பத்திகளில் ஒன்றாவதுடன் பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக நாடு அ.டொ 4,308.20 மில். தொகையினை செலவு செய்துள்ளது. ஏனினும், ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் ஒப்பிடும் போது இறக்குமதியில் 14.6% வீழ்ச்சி காணப்படுகின்றது (மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்ககை – 2013).

## கூட்டுத்தாபனம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யின் சராசரி செலவு மற்றும் கப்பல் செலவு விலை 2013 இல் அ.டொ 110 ஆக 4% இனால் குறைவடைந்தது சர்வதேச சந்தையில் நிலவிய உயர்விலைகளின் காரணமாக 2013 இல் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகள் ஒரு தடவை மீளாயப்பட்டது. இது இவ் ஆண்டில் ஏற்பட்ட தேறிய நட்டத்தினை ரூபா 7,984 மில் ஆக மட்டுப்படுத்துவதற்கு உதவியது.

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுதாபத்தின் நிதியில் மற்றும் தொழிற்பாட்டு ஆரோக்கியத்தினை மேம்படுவதற்கு எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கைகள்

- போட்டி விலைமனு அடிப்படையில் விநியோகத்தர்களைக் நியமித்தல் - இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித வருமானமும் இன்றி விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விற்பனை நிலையங்களை தற்போது வாடகைக்கு வழங்குவதிலிருந்து கூட்டுத்தாபனம் கணிசமான வருமானத்தினை ஈட்டியது.
- 2013 ஆம் ஆண்டின் போது 47 புதிய விநியோகத்தர் உரிமையுடைய விநியோகத்தர் தொழிற்படுத்தும் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டதுடன் இவ் ஆண்டின் போது 03 விற்பனை நிலையங்கள் மீள் செயற்படுத்தப்பட்டன
- விநியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு விதிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன
- லங்கா பெற்றோல் 90 ஒக்டேன் முழுமையான நீக்கப்பட்டு லங்கா பெற்றோல் 92 ஒக்டேன் அறிமுகப்படுத்தப்பட்டது
- நடைமுறையில் உள்ள விற்பனை றிலையங்களுக்கான பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை வசதிகனை விஸ்தரித்தல், 21 விற்பனை நிலையங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களாக தரமுயர்த்தப்பட்டன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 11 விற்பனை நிலையங்களுக்கு லங்கா பெற்றோல் 95 ஒக்டேன் வசதியினையும் 17 விற்பனை நிலையங்களுக்கு லங்கா சுப்பர் டீசல் வசதிகளையும் வழங்கியது.

- இவ்வாண்டின் போது பெற்றோலியப் பொருட்களுக்கான விலையியல் அதிகரிப்பொன்று காணப்பட்டது, இவ் மீளாய்வு செய்யப்பட்டிருக்காவிடின், இவ் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 7,984 மில்லியன் நட்டத்தினை விட எமது நட்டம் அதிகமாகவிருந்திருக்கும். அரச உடமை திணைக்களங்கள் மற்றும் வர்த்தக முயற்சிகளிடமிருந்து கிடைக்கத்தக்க வர்த்தக கொடுகடன்களை அறிவிடுவதற்கு பொது திறைசேரி மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் தொழில் அமைச்சு என்பவற்றின் உதவியுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- அனைத்து வங்கிகளுடனும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கலந்துரையாடி வர்த்தக விகிதமொன்றில் அறவிடப்பட்ட மிகையான வட்டியினைக் குறைந்தது.

- கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதியில் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்காக தொழில்சார், தகுதிமிக்க முகாமையாளர்களை தொழிலுக்கமர்த்துவதன் மூலம் நிதி, சட்ட, நிருவாக மற்றும் சில்லறை சந்தைப்படுத்தல் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகாக எடுக்கப்பட்டது.

- மீளாய்வின் கீழான ஆண்டின் போது சுத்திகரிப்புச் சாலை ஆகக் குறைந்த பழுதடைவுகளுடன் தொழிற்பட்டதுடன் 3343 நாட்கள் திருப்திகாரமாக தொடர்ந்தும் செயலாற்றியது. பொறித் தொகுதிப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம், தாங்கிகளைச் சுத்தப்படுத்தல் மற்றும் ஏனைய அனைத்துச்

செயற்பாடுகளும் கொண்டுநடாத்தப்பட்டன. இது பெற்றோலிய உற்பத்திகளின் சேகரிப்புக் கொள்ளவினை மேம்படுத்துவதனை இயலச் செய்தது. இது ஆண்டின் போது நிலவிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தியின் உயர் இறக்குமதி விலையுடன் ஒப்பிடும்போது குறைந்த விலையில் எரிபொருள் விநியோகத்தினை தோற்றுவித்தது.

**இலங்கை, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய சுற்றுவட்டப்பகுதியினுள் விமான நிலைய எரிபொருள் குழாய் முறைமை மற்றும் விமான எரிபொருள் களஞ்சிய வசதி பொறியியல் வடிவமைப்பு மற்றும் விமான நிலைய சுற்று வட்டார எரிபொருள் குழாய் முறைமை மற்றும் அதனோடு இணைந்த வசதிகள் நிர்மாணத்தினை அமுல்படுத்தல்.**

சைனா ஹாபர் என்ஜினியரிங் கம்பனி லிமிடட் நிறுவனத்துடன் 2011 ஒக்டோபரில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மத்தள சர்வதேச விமான நிலையத்தின் எரிபொருள் பண்ணை, எரிபொருள் குழாய் முறைமை மற்றும் அதனோடிணைந்த வசதிகளின் பொறியியல் வடிவமைப்பு 2012இன் ஆரம்பத்தில் பூர்த்தியடைந்ததுடன் 2013 இன் முதலாம் அரைப்பகுதியின்போது மீதான மீதமாகவிருந்த மின்சார மற்றும் உபகரணங்கள் நிறுவுவதால் நிறைவு பெற்றன.

**இலங்கை, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய சுற்றுவட்டத்திற்கு வெளியில் விமான எரிபொருள் களஞ்சிய வசதி மற்றும் எரிபொருள்கள் குழாய் முறைமை நிர்மாணித்தல்**

ஒப்பந்தக்காரர் : அமானா பைப்லைன் கன்ஸ்ரக்ஸன் எல்.எல்.சீ ((ஏபீசீ)
ஓப்பந்த பெறுமதி : அ.டொ 31,251,584.02

அமனா பைப்லைன் எல்.எல்.சீ நிறுவனத்துடன் ஒப்பந்தம் 2012 ஜூன் மாதம் கைச்சாத்திடப்பட்டது.

- **சபுகஸ்கந்த சிறு முனையத்தின் தாங்கி மாற்றுதல் கருத்திட்ட செலாற்றுகை**

  இக்கருத்திட்டம், பொறியியல் வடிவமைத்தல் (தாங்கி திருத்தி அமைத்தல், பம்பி தெரிவு), விபரக் குறிப்புக்கள் தயாரித்தல் (தாங்கி திருத்தி அமைத்தல்) பம்பிகள் உள்க மிதவைக் கூரை, குழாய் அமைத்தல் பணி மற்றும் ஏனைய தொடர்புடைய உபகரணங்கள்) தாங்கி திருத்தியமைத்தலுக்கான பொறியியல் வரைபுகளை தயாரித்தல் மற்றும் உள்ளக மிதவை கூரை பொருத்துவதற்கான பொறியியல் உதவியினை வழங்குதல் போன்றவற்றுக்காக திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பங்களிப்புடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பொறியியலாளர் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டது. இக்கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட பெரும்பான்மையான பணிகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணியாற் தொகுதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

  6250 கன மீற்றர் கொள்ளவுடைய இரண்டு டீசல் தாங்கிகளை உள்ளக மிதவை கூரை பொருத்துதல் உள்ளடங்களாக பெற்றோல் தாங்கிகளாக மாற்றுதல் 2013 இல் நிறைவு செய்யப்பட்டது. நிலையத்தூண் உபகரணம் பொருத்துதல் மற்றும் கம்பிவடம் அமைத்தல் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

- **கட்டுநாயக்கா, பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட புதிய விமான நிலைய சுற்றுவட்ட பிரதேசத்தில் விமான எரிபொருள் குழாய் முறைமை மற்றும் விமான நிலைய எரிபொருள் முனைய வசதிகளை தரமுயர்த்தல்**

ஜேர்மனிய, ஹஸைாகன்சல்ட் எஞ்சினியருசெல் எம்பிஎச் நிறுவனத்தினால் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விரிவான வடிவமைப்பிற்காக ஜேர்மனின் ஹஸைாகன்சல்ட் எஞ்சினியருசெல் எம்பிஎச் நிறுவனத்திடமிருந்து பரிந்துரைக்கப்படாத விருப்பறிவிப்பொன்றினை (தொழில்நுட்ப மதிப்பீடு) அழைப்பதற்கான ஆய்வெல்லையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபர் இடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஏனினும், கருத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்குவதற்கு அமைச்சரவையின் தீர்மானம் கிடைக்கப்பெறும் வரை 2013.10.30 அன்று சில காலத்திற்கு இச்செயன்முறை நிறுத்திவைத்தது.

அதேவேளை இதனை, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் (JICA) நிதியளித்லினுள் கூட்டிணைப்பதற்கும் இலங்கை விமான நிலைய மற்றும் விமானத்துறை சேவைகள் ஒப்பந்தத்தினுள் கூட்டிணைப்பதற்கும் இலங்கை பெற்றோலியக் கருத்திட்டத்தினை முழு நோக்கெல்லையினையும் குறித்தொதுக்குவதற்கும் திறைசேரிக்கு அறிவிப்பதற்கு பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் மூலம் நிதியளிக்கப்பட்ட விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டத்தின் வசதிப்படுத்தலினை இயலச் செய்கின்ற தனியொருஒப்பந்ததாரர் மூலம் அமுலாக்கப்படுவதற்கு தனியானதொரு அளவைப் பட்டியல் (BOQ) ஆக இலங்கை விமான நிலைய விமான சேவைகள் நிறுவனத்தின் பிரதான ஒப்பந்தத்தின் விலைமனு ஆவணத்தினுள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணி நோக்கெல்லையினை உள்ளடக்குவதற்கு பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஏற்கனவே சிவில் விமானப் போக்கு வரத்து அமைச்சின் செயலாளரை வேண்டியுள்ளார்.

**இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் எரிபொருள் விபரக்கூறுகளை தரமுயர்த்தல்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 2012 மே 14 அன்று நிலையியல் தொழில்நுட்ப உற்பத்தி விபரக்குழு சீராமைக்கப்பட்டது. மீளாமைக்கப்பட்டதிலிருந்து குழு பின்வரும் உற்பத்திகளின் உற்பத்தி விபரங்களையும் பரிசோதனை முறைகளையும் சமகாலப்படுத்தியுள்ளது.

1. பெற்றோல் 90 ஆர்ஓஎன்
2. பெற்றோல் 95 ஆர்ஓஎன்
3. வாயு எண்ணெய் 0.25% அதிகூடிய கந்தகம்
4. வாயு எண்ணெய் 0.05% அதிகூடிய கந்தகம்
5. உயர் கந்தக உலை எண்ணெய் (உலை எண்ணெய் 1500)
6. குறைந்த கந்தக உலை எண்ணெய் (உலை எண்ணெய் 1500)
7. விசேடகொதிநிலை (எஸ்பிபீ) கரைசல்
8. விமான எரிபொருள்

மேலும் நவீன வாகனங்களுக்கு பொருத்தமானதும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுமான பின்வரும் உற்பத்திகளுக்கான உற்பத்தி விபரங்களையும் தயாரித்தது

1. ஈயுரோ III வழமையான பெற்றோல்
2. ஈயுரோ V-VI பெற்றோல்
3. பெற்றோல் 92 யுஎன்எல்

2014 ஜனவரி 01 தொடக்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல் 90 ஒக்டேன் உற்பத்திக்குப் பதிலாக பெற்றோல் 92 இனை மாற்றீடு செயயப்படடுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன ASTM உறுப்புரிமையினை பெற்றுள்ளதுடன் ASTM இன் தேர்ச்சி பரிசோதனையில் பங்கேற்பதற்கு தற்போது திட்டமிடுகின்றது இது சுத்திகரிப்புச்சாலை அதன் உபகரணங்கள் மற்றும் பரிசோதனை முறைகளை தரப்படுத்துவதன் ஊடாக அதன் நற்பெயரினை உயர்த்திக் கொள்வதற்கு சுத்திகரிப்புச்சாலை ஆய்வு கூடத்தினை இயலச் செய்யும்.

- **ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் என்பவற்றை இணைக்கின்ற குழாய் முறைமை**

ஹம்பாந்தோட்டை விமான எரிபொருள் முனையம் மற்றும் மத்தள விமான நிலையம் என்பவற்றினை இணைக்கின்ற முன் மொழியப்பட்ட குழாய் முறைமையினை நிர்மாணிப்பதற்கான இடைவழியொன்றினை ஒதுக்கித் தருவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் என்பவற்றுகிடையிலான முன்மொழியயப்பட்ட அதிவேகப்பாதைக்காக மேற்கொள்ளளப்பட்ட சாத்திய ஆய்வினுள் முன் மொழியப்பட்ட விமான எரிபொருள் குழாய் முறைமையினை கூட்டிணைப்பதற்கு சைனா ஹாபர் என்ஜினியரிங் கம்பனியினை வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கனவே குறித்தொக்கியுள்ளது.

- **முத்துராஜவெல மற்றும் கட்டுநாயக்கா விமான நிலைய முனையத்திற்கிடையிலான குழாய்**

தற்போது புகையிரத மற்றும் வீதிபோக்குவரத்து மூலம் வழங்கல் செய்யப்படுகின்ற கட்டுநாயக்க விமான நிலையத்திற்கான விமான எரிபொருளுக்காக அதிகரிக்கும் கேள்விக்கு வழங்கல் செய்வதற்காக இக் குழாய்முறைமையின் எதிர்கால தேவைப்பாட்டினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன இனங்கண்டுள்ளது. எதிர்காலத்தில் மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கதக்க காணி, அத்துடன் புகையிரத மற்றும் போக்குவரத்து நெருக்கடி என்பன அடுத்து வருகின்ற 3 அல்லது 4 வருடங்களினுள் இக் குழாயினை வசதியினை தேவைப்படுத்தும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் இயைபுடைய அரசாங்க அதிகார நிறுவனங்களின் அனுமதியினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கொள்கை அறிக்கையொன்று பிரதி பொது முகாமையாளரினால் (திட்டமிடலும் அபிவிருத்தியும்) தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- **மசகு எண்ணெய் தனிநிலை நங்கூர மிதவை (SPBM) ஒருங்கிணைப்பு மதிப்பீடு**

மிதவையினதும் அதனுடன் இணையப்பெற்ற வசதிகளினதும் நிலைமையினை நிர்ணயிக்கும் பொருட்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தகுதிவாய்ந்த ஆலோசனைக் கம்பனியொன்றின் ஊடாக மசகு எண்ணெய் தனிநிலை நங்கூர மிதவை பற்றி ஒருங்கிணைப்பு மதிப்பீட்டு ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இவ் ஆய்வு மிதவையின் பொருத்தப்பாடு மற்றும் தற்போது தாங்கி அளவுகள் மட்டுப்பாடுகள் காணப்படுவதனால் 135,000 மெ.தொ மற்றும் அதனை விட கூடிய கொள்ளளவுடைய கப்பற்சரக்கினை கொண்டு செல்லக் கூடிய மசகு எண்ணெய் தாங்கிப் கப்பல்களை தெரிவு செய்வதற்காக 180,000 அதிபளு கப்பல் பார அளவு (DWT) கொண்ட நங்கூர மிதவைகளுக்கு வேண்டப்பட்ட மிதவை மற்றும் மேம்பாடுகளை உள்ளடக்குகின்றது.

- **ஊராய்வு நீக்கி எண்ணெய்கள்**

இவ் ஆண்டின் போது உராய்வு நீக்கி எண்ணெய் வணிகத்தின் செயலாற்றுகை தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் புரள்வு முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 1,796 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 1,872 மில் ஆகவிருந்தது. இது இவ்வாண்டின் போது 5.8% அதிகரிப்பினை காண்பிக்கின்றது.

- **நிதியியல் செயலாற்றுகை**

இவ் ஆண்டின் போது நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகையில் கணிசமான முன்னேற்றத்தினை எய்துவதற்கு கூட்டுத்தாபனம் பல முயற்சிகளை எடுத்தது. முன்னைய ஆண்டின் போது தொடர்ந்து வந்த மொத்த நட்டங்களில் செயலாற்றியதன் பின்னர் நடைமுறையாண்டின்போது மொத்த இலாப மட்டமொன்றினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ளது.

இவ்வாண்டின் போது கூட்டுத்தாபனம் 7900 மில் நட்டமொன்றினை அனுபவித்தது. இது 2012 உடன் ஒப்பிடுகையில் 91% குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை காண்பிக்கின்றது. ஆண்டின் போது சர்வதேச எண்ணெய் விலைகளுக்கமைவாக விலைகள் சரி செய்யப்படாமை மானிய விலையில் இலங்கை மின்சார சபை மற்றும் சுயாதீன சக்தி உற்பத்தி செய்வோர் அத்துடன் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய்க்காக வழங்கப்பட்ட உதவி மானியம் என்பன இந்நிதியியல் நட்டத்திற்கு பிரதான காரணிகளான அமைந்தன.

சக்தி பிறப்பாக்கம் மற்றும் கைத்தொழில்களுக்காக உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் விற்பனை என்பன மூலம் உறப்பட்ட நட்டம் 3.5 பில் ஆகவிருந்தது. மண்ணெண்ணெய்க்காக பொது மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் மூலம் ஏற்பட்ட நட்டம் ரூபா 2400 மில். ஆகும்.

**நிறுவன ஆளுகை**

வலுவான சூழல் நட்பு செயன்முறையொன்றுடன் கூட்டுத்தாபனத்தின் மையக் குறிக்கோள்களை அடைவதற்கு இன்றியமையாதகவுள்ள அதன் தொழிற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புடைமை என்பவற்றை எய்துவதற்கும் தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுவதற்கும் நிறுவன ஆளுகையின் கோட்பாடுகளின் நடைமுறைகளை கூட்டுத்தாபனம்

உறுதிசெய்கின்றது. கூட்டுத்தாபனத்தின் மூலோபாய வியாபார தொழிற்பாடுகளின் சீரான தொழிற்பாட்டினை உறுதி செய்வதற்கு பணிப்பாளர் சபையினால் உபகுழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

மூன்று நிறைவேற்றல்லாத சபை உறுப்பினர்களைச் கொண்டுள்ள கணக்காய்வுக் குழுவொன்று உலகத் தரத்திற்கு கூட்டுத்தாபனத்தினை கொண்டுவரும் குறிக்கோளை எய்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் அனைத்து உபாய விடயங்களையும் கிரமமான கூட்டங்களில் சுயாதீனமாக மீளாய்வு செய்கின்றது. நிறுவன ஆளுகை செயன்முறைப்படுத்தலின் பகுதியொன்றாக உள்ளகக் கட்டுப்பாடுகள், நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு வெளிப்படைத் தன்மை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்ளக்கணக்காய்வு தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதனூடாக மேம்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகளை மீளாய்வு செய்கின்றது.

## நிறுவன சமூகப் பொறுப்பு

நிறுவன சமூகப் பொறுப்பானது முக்கிய கவனமையமானக இருந்து வந்ததுடன் வாடிக்கையாளர்களுக்கு இயலுமான வரை குறைந்த செலவில் முழு நாட்டினதும் தேவைகளை நிறைவு செய்வதற்குகான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எத்தடைகள் இருப்பினும் அரசாங்க நிறுவனங்களுக்கு தடங்களற்ற எரிபொருள் விநியோகத்தினை நாம் உறுதி செய்தோம்.

2013 ஆண்டின் போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தீர்வைகள் மற்றும் வரிகள் மூலம் அரசாங்க அலுவலகங்களுக்கு ரூபா 55,496 மில்லியன் கொண்ட பாரிய தொகையொன்றினை பங்களிப்புச் செய்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சக்திப் பிறப்பாக்கத்திற்கான எரிபொருளையும் போக்குவரத்து துறைக்கான டீசல் இனையும் மிகவும் குறைந்த மானிய விலையில் வழங்கியது. இது வெளிவாரி சர்வதேச எண்ணெய் விலைத் தளம்பல்களின் காரணமான அனைத்து பொருளாதார செயற்பாடுகளின் மீதான தாக்கத்தினையும் குறைப்பதற்கு இயலச் செய்தது.

## சுத்திகரிப்புச்சாலை

2013 ஆகஸ்ட் 07 அன்று சுத்திகரிப்புச்சாலை 44 வருடங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இவ் ஆண்டின் போது 343.38 தொடர் இயக்க நாட்கள் தொழிற்பாட்டு 1,643,218 மெ.தொ மசகு எண்ணெய்யினை செயன் முறைப்படுத்தியது. மசகு எண்ணெய் ஊக்குவிப்பு வீதம் 2012 உடன் ஒப்பிடுகையில் 2.49% அதிகரித்தது. எரிபொருள் எண்ணெய் மற்றும் எரிவாயு நுகர்வு அளவு ரீதியாக 4% இனாலும் பெறுமதி அடிப்டையில் 8% இனாலும் வீழ்ச்சியடைந்தது. சொந்தப் பாவனை, செயன்முறைப்படுத்தல் மற்றும் கையாளுகை இழப்புக்கள் 2012 இல் காணப்பட்ட 1.548% உடன் ஒப்பிடுகையில் 2013 இல் 1.04% ஆகவிருந்தது. இவ் அனைத்துக் காரணிகளுடனும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் வடிசாலை அலகின் தொழிற்பாட்டு நேர வினைத்திறனை 94% இனால் சுத்திகரிப்புச்சாலை அதிகரித்துள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிப்புச்சாலை செயலாற்றுகை மட்டத்திற்கு மேல் செயற்பட்ட போதிலும், சுத்திகரிப்புச் செயன் முறைகள் இருந்து பெறப்படும் விளைச்சள் மற்றும் சுத்திகரிப்பு இலாபம் என்ற நியதிகளின் அடிப்படையில் சுத்திகரிப்புச்சாலையில் பயன்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான ஈரானிய மென்வகை மசகு எண்ணெய் கிடைக்கப் பெறாமையின் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புச்சாலை பாரியளவிலான உற்பத்தி தடைகள் மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. தற்போது அமுலில் உள்ள ஐக்கிய அமெரிக்கா தடையின் விளைவாக ஓமான் எக்ஸ்டோர் பிளன்ட் முர்பன், அரேபியன் லைட் போன்ற வேறு மசகு எண்ணெய் மூலங்களுக்கு மாறுதல் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இலாபத்தின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி சுத்திகரித்தல் இலாபத்தில் கணிசமான குறைப்பினையும் தோற்றுவித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் / அமைச்சு மூலம் மேற்கொள்ளப்பட்ட பலமுயற்சிகளுக்கு மத்தியிலும் பொருத்தமான மசகு எண்ணெய் வழக்குநர் ஒருவர் கிடைக்கப்பெறாமையினால் சுத்திகரிப்புச்சாலை பல தடவைகள் மூடப்படுவதற்கு ஈரான் மீதான தடை வழிவகுத்தது.

**மசகு எண்ணெய் இறக்குமதியும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளும்**

கூட்டுத்தாபனம் ஐ அ டொ 1,414.811 மில் செலவு மற்றும் கப்பல் கூலி செலவிலல் 1.743 மி.மெ.தொ மசகு எண்ணெய்யினை இறக்குமதி செய்துள்ளது. மசகு எண்ணெய் சராசரி (செலவு மற்றும் கப்பல் கூலி) செலவு முன்னைய ஆண்டின் போது பீப்பாய் ஒன்றுக்கு ஐ அ டொ 115 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ அ டொ110 ஆகவிருந்தது. மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கான தாமதக் கப்பல் கட்டணங்கள் கடந்த வருடத்தினை விட கணிசமாக குறைவடைந்துள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட மொத்த உற்பத்திகள் இறக்குமதி 1.928 மில்லியன் மெற்றிக் தொன்களாக இருந்ததுடன் செலவு ஐ அ டொ 1, 851.355 மில்லியன் ஆக இருந்தது.

**சிலோன் பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனதின் சேவை**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன மீள்கட்டமைப்புடன் கொலன்னனாவ மற்றும் நாடு பூராகவும் அமையப் பெற்றுள்ள 12 பிராந்திய மொத்த சாலைகளின் தரவு செயன்முறைப்படுத்தல் மற்றும் விநியோகச் செயற்படுகள் சிலோன் பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

சிலோன் பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் லிமிடட், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நாட்டின் கேள்வியினை நிறைவு செய்வதற்காக உற்பத்திகள் கிடைக்கப் பெறுகின்ற தன்மையினை கண்காணிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் கம்பனிகளுடன் கிரமமான கையிருப்பு மீளாய்வு கூட்டங்களை நாடத்துகின்றது. சேமிப்பு, வழங்கல் மற்றும் தொழிற்படுத்தல் சேவைக்காக அது முனையக் கட்டணமொன்றையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான விநியோக மற்றும் தரவு செயற்முறைப்படுத்தல் சேவைகளுக்காக குறித்த கட்டணங்களையும் அறவீடு செய்கின்றது.

**விவசாய இரசாயனங்கள்**

பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் பெருந்தோட்டங்களினால் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனங்களுக்காக நியாயமான விலைகளை பேணும் அதன் விலையிடல் கொள்கையினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் கடைப்பிடித்தது. இதனூடாக குறைந்த உற்பத்திச் செலவினை நோக்கிய பயன்மிக்க பங்களிப்பொன்றின் மூலம் ஒட்டுமொத்த விவசாய துறை மேம்படுத்தப்படுகின்றது.

நடைமுறையில் உள்ள ''சிபெற்கோ'' விவசாய உற்பத்தி வகையில் 5 களை கொள்ளிகள், 4 பங்கசுக் கொள்ளிகள் மற்றும் 7 பீடை கொள்ளி வகைகளை உள்ளடக்குகின்றது. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின்போது எமது பிரதான விவசாய இரசாயனங்களில் 5 வகைகளுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமையினால் 2013 ஆம் ஆண்டு சாவால் மிக்க ஆண்டாகவிருந்தது. மேற்குறித்த நிலைமையினைத் தவிர்ப்பதற்கு எமது விவசாய இரசாயன உற்பத்திகளில் கார்போபியுரோனுக்கு பதிலாக ''டயசிநொன்'' என்ற புதிய பீடைநாசினியினையும் கெப்டன் 50% பங்கசு நாசினியினையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இச் சவால்களை தாண்டி இவ் ஆண்டின்போது ரூபா 177.6 மில் புரள்வொன்றினை நாம் எய்தக்கூடியாதாகவிருந்தது.

எதிர்காலத்தில் விவசாயத்தினை அடிப்படையாக கொண்ட ஏனைய துறைகளையும் உள்ளடக்குவதற்கும் நெல் உற்பத்திக்காக புதிய பீடைகொள்ளிகள் மற்றும் முறைமைசார் பங்கசுகொள்ளிகள் அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் தாபிக்கப்படவுள்ள சிபெற்கோ விவசாய இரசாயன விநியோகத்தர் விற்பனை நிலையங்கள் ஊடாக சிபெற்கோ விற்பனைகளை ஊக்குவிப்பதற்கும் நாம் திட்டமிடுகின்றோம். விற்பனை அளவினை அதிகரிப்பதற்கும் எமது ஆறு நிலையங்களிலுமுள்ள களஞ்சிய கொள்ளளவினை விஸ்தரிப்பதற்கும் மாவட்ட வலையமைப்பினை விரிவாக்குவதற்கும் தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கழிவு வழங்குவதற்கும் நாம் திட்டமிடுகின்றோம்.

## மனிதவள அபிவிருத்தியும் நலனோம்புகையும்

2013 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஊழியர் எண்ணிக்கை 2,574 (2012 இல் 2,637) நிரந்தர பதவி பதவியணியாகவும் 83 (2012 இல் 21) அமைய அடிப்படை பதவியணியாகவும் காணப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் சிக்கன சங்கத்தின் மூலம் முகாமை செய்யப்பட்ட மருத்துவ உதவித் திட்டமொன்றினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது. கூட்டுத்தாபனமானது ஊழியர்களுக்கு சேவையாற்றுவதற்கு முழு நேர அடிப்படையில் 2 மருத்துவர்களை சேவையில் அமர்த்தியுள்ளது. மீளாய்வின் கீழான ஆண்டின் போது வைத்தியசாலைச் செலவுகளும் உள்ளகச் சிகிச்சை செலவுகளும் ரூபா 30 மில் ஆக இருந்தது. வெளி மருத்துவச் சிகிச்சைக்காக அனைத்து ஊழியர்களுக்கும் மாதாந்த கொடுப்பனவொன்றாக ரூபா 250 வழங்கப்படுகின்றது.

ஓவ்வொரு வருட சேவைக்காகவும் ½ மாதக் கொடுப்பனவுக்கு சமமான பணிக்கொடையொன்று பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதுடன் மேலதிக ஓய்வு மற்றும் இறப்பு நலன்கள் சிக்கன சங்க நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுகின்றன. ஊழியயொருவரின் இறப்பிற்காக இறப்புப் பணிக்கொடையொன்றும் கொடுப்பனவு செய்யப்படுகிள்றது. விளையாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் விளையாட்டுக்காக கூட்டுத்தாபனமானது நிதியியல் உதவிகளையும் வழங்கியது. பிரத்தியேகமாக ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்படுத்துவதற்காக 4 சுற்றுலா விடுதிகளையும் கூட்டுத்தாபனம் பராமரித்து வருகின்றது. ஊழியர்களின் பல தேவைகளை நிறைவு செய்வதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் பல கடன் வசதிகளும் காணப்படுகின்றன.

ஊழியர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்றுவிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். பட்டப்பின் படிப்பு டிப்ளோமா/பட்டங்களுக்கு ஊழியர்களை அனுப்புதன் ஊடாக அவர்கள் பணியாற்றும் சூழலினை தயார்படுத்திக் கொள்வதற்காக மொழியறிவு மற்றும் கணனி அறிவினை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஆண்டின் போது ரூபா 691,741 செலவிடப்பட்டுள்ளது.
தங்களது சேவைகயினை திருப்திகரமாக பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு விருது வழங்கும் நடைமுறை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 20 வருடங்கள் | - | ரூபா 10,000/= |
| 25 வருடங்கள் | - | 2.5 பவுன் தங்க நாணயம் |
| 30 வருடங்கள் | - | ரூபா 20,000/= |
| 35 வருடங்கள் | - | ரூபா 25,000/= |
| 40 வருடங்கள் | - | ரூபா 40,000/= |

இவ் ஆண்டின் போது 105 ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு தெரிவுசெய்ப்பட்ட ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கூட்டுத்தாபனத்தின் மூலம் நலனோம்புகை செயற்பாடொன்றாக 21 புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

## சுற்றாடல் பாதுகாப்பு

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நாட்டில் பெற்றோலியப் பொருட்கள் சந்தையில் முன்னோடியாகவும் நாட்டின் உள்ள ஒரேயொரு உள்நாட்டு சுத்திகரிப்பு ஆலையாகவும் சுற்றாடல் மாசுபடுத்தலினை குறைப்பதற்கான அதன் கடப்பாடுகளில் முழுமையான வழிப்புணர்வினைக் கொண்டுள்ளதுடன் பெற்றோலிய பொருட்களை கையாளுதல் மற்றும் பயன்படுத்துவதில் உள்ள சுற்றாடல் பற்றிய அக்கறை கொண்டுள்ளது.

## பாராட்டுக்கள்

இக்காலத்தின் போது அனைத்து சவால்களுக்கும் முகங்கொடுக்க என்னோடு இணைந்திருக்கின்ற இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபன அணியான அனைத்து உறுப்பினர்களுக்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கௌரவ பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர், அவரது அலுவலர்கள், திறைசேரி, மத்திய வங்கி, எமது பங்காளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது ஒத்துழைப்பு மற்றும் உதவிகளுக்காக எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

எஸ். அமரசேகர
பதில் தவிசாளர்

# பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று

| ரூபா மில்லியன் | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| புரள்வு | 518,177 | | 542,146 | |
| கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் | (448,066) | | (556,393) | |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | 70,111 | | (14,247) | |
| | | | | |
| **பின்வரும் வழிமுறை பிரயோகிக்கப்பட்டது** | % | | % | |
| | | | | |
| **ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு** | | | | |
| வேதனாதிகளும் ஏனைய அனுகூலங்களும் | 3,572 | 5.09 | 2,865 | (20.10) |
| **மூலதன வழங்குநர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு** | | | | |
| கடன்கள் மீதான வட்டி | 18,540 | 26.44 | 18,360 | (128.87) |
| | | | | |
| **சொத்துக்களை பராமரித்தல் மற்றும் விரிவாக்கத்திற்கு வழங்குவதற்கு** | | | | |
| தேய்மானம் | 487 | 0.70 | 517 | (3.63) |
| பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | (7,984) | (11.38) | (97,308) | 683.00 |
| | | | | |
| அரசாங்கத்திற்கு கொடுப்பனவு செய்வதற்கு | | | | |
| வரிகள், தீர்வைகள், முத்திரை தீர்வைகள் மற்றும் | 55,496 | 79.15 | 61,319 | (430.40) |
| பொதுத் திறைசேரிக்கான பங்களிப்பு | | | | |
| | | | | |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | 70,111 | 100.00 | (14,247) | 100.00 |

# சிறப்புக் கூறுகள்

| நிதியியல் | அலகு | 2013 | 2012 |
|---|---|---|---|
| மொத்த வருவாய் | ரூபா மில் | **490,381.492** | 512,918.308 |
| மொத்த இலாபம் /(நட்டம் ) | ரூபா மில் | **22,743.559** | (60,781.737) |
| தொழிற்படுத்தல் இலாபம் /(நட்டம்) | ரூபா மில் | **7,552.148** | (78,930.266) |
| | | | |
| நிதிக் கட்டணங்கள் | ரூபா மில் | **18,539.848** | 18,359.677 |
| வரிக்கு முன்னர் இலாபம் /(நட்டம்) | ரூபா மில் | **(7,732.818)** | (89,569.175) |
| வரிக்கு பின்னர் இலாபம் /(நட்டம்) | ரூபா மில் | **(7,947.309)** | (89,569.175) |
| மூலதனமும் ஒதுக்குகளும் | ரூபா மில் | **(236,528.740)** | (228,544.515) |
| நீ. கா. கடன் பெறல் | ரூபா மில் | **1,350.850** | 1,998.218 |
| மூலதனச் செலவினம் | ரூபா மில் | **4,023.521** | 1,280.428 |
| | | | |
| **இறக்குமதி** | | | |
| மசகு எண்ணெய் இறக்குமதிகள் | மெ.தொ | **1,743,489** | 1,626,074 |
| சுத்திகரிக்கப்பட்ட மொத்த உற்பத்திகள் இறக்குமதிகள் | மெ.தொ | **1,928,652** | 2,778,654 |
| செலவு மற்றும் கப்பல் கூலி பெறுமதி | ரூபா மில் | **460,351.806** | 516,153.897 |
| | | | |
| **தொழிற்பாடுகள்** | | | |
| விற்பனைகள் | மெ.தொ | **3,692,023** | 4,405.503 |
| சுத்திகரிக்கப்பட்டவை | மெ.தொ | **1,643.923** | 1,596.918 |
| | | | |
| **சந்தைப்படுத்தல்** | | | |
| இ.பெ.கூ சொந்தமானது | எண்ணிக்கை | **249** | 248 |
| விநியோகத்தர்களுக்கு சொந்தமானது | எண்ணிக்கை | **844** | 795 |
| விநியோகத்தர் கட்டுப்பாட்டிற்குட்பட்டவை | எண்ணிக்கை | **44** | 47 |
| | | | |
| **ஊழியர்கள்** | | | |
| ஆண்டின் இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை | **2,657** | 2,658 |
| ஆண்டிற்கான மொத்த வேதனங்கள் | ரூபா மில். | **3,520.253** | 3,182.921 |
| ஊழியயொருவருக்கு சேர்க்கப்பட்ட பெறுமதி | ரூபா | **1,324,897** | 1,197.407 |

# இடர் முகாமைத்துவம்

இடர் என்பது ஏதேனும் வியாபார குழுமம் மற்றும் ஏதேனும் நிறுவனம் அல்லது கைத்தொழிலில் பல்வேறு இடர்களுக்கு ஆட்படுகின்ற முக்கிய பகுதி ஒன்றாகும். எதிர்கொள்ளப்படும் இடர்களின் வகை கைத்தொழிலுக்கு கைத்தொழில் அதே போன்று நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடலாம். எனவே, நிறுவனத்தினையும் கைத்தொழில் கொண்டுள்ள இடரினையும் அதேபோன்று அவை நிகழக்கூடிய தன்மையினையும் இனங்காண்பது முக்கிய கருமம் ஒன்றாக காணப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாடுகள், தொடர்புடைய இடர்களைக் கண்டுபிடிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் அத்துடன் தடுப்பதபற்கும் இயலச் செய்கின்ற அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குகின்றது. தொழிற்பாடுகளை கையாள்வதற்கும் ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகளை துடப்பதற்கும் 1961இன் 28ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், நிதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் நடைறைகள் என்பன மூலம் தாபிக்கப்பட்ட செயற்றிறன்மிக்க முறைமைகள் மற்றும் நடைமுறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**உள்ளக மற்றும் புற கணக்காய்வு**

உள்ளக மற்றும் புற கணக்காய்வுத் தொழிற்பாடுகள் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளில் நுண்ணாய்வுமிக்கவை. உள்ளக மற்றும் புற கணக்காய்வாளர்கள் அவர்கள் அடையாளங்காணுகின்ற ஏதேனும் இடரினை முகாமை செய்வதற்கு முன் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க நிதியியல் முறைமைகளையும் ஏனைய தொழிற்பாட்டு பிரிவுகளையும் பரிசோதித்து பரிகார நடவடிக்கைகளை பரிந்துரைக்கின்றனர். பணிப்பாளர்கள் சபையினால் தாபிக்கப்பட்ட குழு முக்கிய கணக்காய்வு காண்புகளை மீளாய்வு செய்யும்.

கூட்டுத்தாபனம் ஆட்பட்டுள்ள இடர்களின் சுருக்கமொன்றும் எடுக்கப்பட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**பொருளாதார இடர்**

நாட்டின் பொருளாதார நிபந்தனைகள் பெற்றோலிய உற்பத்திகளுக்கு உயர்ந்தளவிலான உணர்வு மிக்கவையாகும். சந்தையில் முன்னணி வகிக்கின்ற அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனம் ஒன்றாக கூட்டுத்தாபனம், இலாபத்தினை விட சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளுக்கு வசதியளிப்பதற்காக சில பெற்றோலிய உற்பத்திகளை அதிகலவிலான மானிய விலையில் வழங்கல் செய்கின்றது. உற்பத்தி விலை மட்டங்களில் காணப்படும் சிறிய மாற்றம் முழுப் பொருளாதாரத்தின் மீதும் உடனடியாக பாரிய தாக்கத்தினைக் கொண்டதாக இருக்கும். பொருளாதார இடரின் பாதகமான விளைவுகளை தடுப்பதற்காக நாம் அடிக்கடி வலிமையான செலவு முகாமைத்துவ முன்முயற்சிகளை பணிக்கமர்துகின்றோம். இதனால் பெற்றொலிய உற்பத்திகளை போட்டிமிக்க விலையில் விற்பனை செய்வதற்கு எமக்கு இயலக்கூடியதாக இருக்கும் இது இலாபத் தன்மை மற்றும் ஏனைய சமூகப் பொருளாதார நிலைமைகள் இரண்டினையும் சமப்படுத்தவதற்கு இயலச் செய்யும்.

**நிதி இடர்**

நிதி இடரானது கூட்டுத்தானத்தின் சீரான தொழிற்பாட்டிற்கான நிதி மூலவளங்கல் கிடைக்கக்கூடிய தன்மையுடன் தொடர்புபடுகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேறிய இலாபத்தின் மீதான சந்தைத் தளம்பல்களின் எதிர்மறையான தாக்கத்தினை கட்டுப்படுத்துகின்ற அதேவேளை செலவுச் செயற்றிறன் நிதியளித்தல் கிடைக்கப்பெறுகின்றது என்பதை உறுதி செய்கின்றது. பிரதான இடர் வெளிப்பாடுகள், வெளிநாட்டு நாணய மாற்று, திரவத் தன்மை மற்றும் வட்டி விகிதம் என்பனவாகும்.

**வெளிநாட்டு நாணயமாற்று இடர்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது மாதாந்தம் சுமார் ஐ.அ.டொ. 150-200 மில். வரை பிரதானமாக இரண்டு அரச வங்கிகளிலிருந்தும் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் வழங்குனர்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்கின்றது. அதன் விற்பனை வருவாய்கள் பிரதானமாக இலங்கை ரூபாயில் காணப்படுகின்றன. எனவே கூட்டுத்தாபனம் வெளிநாட்டு நாணயமாற்று இடருக்கு ஆட்படுகின்றது. இவ்விடரினை தணிப்பதற்கு அனைத்து வங்கிகளினதும் விலை

குறிக்கப்பட்ட நாணயமாற்று வீதங்கள் நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு டொலர் நாணயம் வங்கி விலை குறித்த விகிதத்திலன்றி சந்தை போக்குகளை கண்காணிப்பதன் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதன் விளைவாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தொழிற்பட்டிலிருந்து கணிசமான வருவாயினைப் பெற்றிருந்தது.

**திரவத் தன்மை இடர் முகாமைத்துவம்**

காசு வழங்குதல் அல்லது ஏனைய நிதியியல் சொத்துக்கள் மூலம் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற குறுகிய கால பொறுப்புக்களுடன் இணைந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் கூட்டுத்தாபனம் சந்திக்கின்ற இடராக திரவத் தன்மை இடர் வரையறை செய்யப்படுகின்றது. திரவத் தன்மை இடரானது கடப்பாடுகள் நிலுவையாகவுள்ளபோது அவற்றினை நிறைவேற்றுவதறகு கூட்டுத்தாபனத்திற்கு இயலாமல் இருக்கக் கூடிய சாத்தியமொன்று உள்ளபோது திரவத் தன்மை இடர் தோன்றுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மையினை வலுப்படுத்தவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டள்ளன. ஒரேநாள் ரெப்போக்கள் (கொள்வனவு உடன்படிக்கை), அழைப்பு வைப்புகள், கால வைப்புகள் வினியோகத்துடனான நெருங்கிய வியாபாரம் போன்றவற்றில் முதலிடுதல் திரவத் தன்மை முகாமைத்துவத்தின் பிரதான மூலோபாயங்களாகும். கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுடனும் சிறப்பான வியாபார உறவொன்றினைப் பேணுவதுடன் கணிசமான வங்கிச்சேவை வசதிகளையும் அனுபவிக்கின்றது.

முதிர்வு பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு திரவத் தன்மை இடர் மேலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இது கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மை நிலையினை நிர்ணயிப்பதற்கு குறித்த கால தொடர் ஒன்றின்மீது எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை கொண்டுள்ளதுடன் தொடர்ச்சியான எதிர்வுகூறல்கள் ஊடாக எதிர்கால தேவைப்பாடுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

**வட்டி விகித இடர் முகாமைத்துவம்**

திரவத் தன்மை மற்றும் தொழிற்படுத்தல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறுகிய கால மற்றும் நீண்டகால கடன்பெறுதல் வசதிகளுடன் தொழிற்படுகின்றது. கூட்டுத்தாபனம் வட்டி மற்றும் ஏனைய நிதிக் கட்டணங்களாக கணிசமான தொகை ஒன்றினை ஏற்கின்றது. தேறிய வருமானத்தில் பாதகமான தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டு வட்டி விகித இடரினை தடுப்பதற்காக ஒரே நாள் ரெப்போ, அழைப்பு வைப்புகள் மற்றும் கால வைப்புகளில் கூட்டுத்தாபனம் எப்போதும் முதலீடுகளை மேற்கொள்ளகின்றது. வழங்கப்படும் அனைத்து வசதிகளுக்காகவும் சீரான செயற்படு வட்டி விகிதத்தினை பேணுவதற்காக இரண்டு அரசாங்க வங்கிகள் மற்றும் பொதுத்திறைசேரி என்பவற்றுடன் வெற்றிகரமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**தொழிற்பாட்டு இடர்**

போதாத அல்லது வெற்றியளிக்காத உள்ளகச் செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது புற நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற இழப்பு இடர்களாக தொழிற்பாட்டு இடர்கள் வரையறை செய்யப்படுகின்றது. தொழிற்பாட்டு இடர் முக்கிய செயற்பாடுகளின் மீது போதாத அல்லது குறைவான கட்டுப்பாடு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெற்றியளிக்காத முறைமைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்றன. இவ் இடர்கள் தொழிலின் அனைத்து செயற்பாடகளிலும் நிகழக்கூடியதாக இருப்பதுடன் நிதியியல் மற்றும் நற்பெயர்சார் இழப்பு ஆகிய இரண்டிற்கும் இட்டுச் செல்லக்கூடியவையாக இருக்கலாம்.

பெற்றொலிய உற்பத்திகள் இலங்கை மக்களின் வாழ்வுடன் மிகவும் இரண்டறக் கலந்தவை. அத்துடன் சிறியளவிலான தொழிற்பாடின்மை பாரிய இடர் ஒன்றினை தோற்றுவிக்கும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொழிற்பாட்டு இடரினை தனித்துவமானதும் கட்டுப்படுத்ததக்க இடருமாக அடையாளப்படுத்தவதடுன் கட்டமைக்கப்பட்ட விதம் ஒன்றில் அதனை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. முறையான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கொள்கையொன்று தொழிற்பாட்டு இடரினை முகாமை செய்யும் பொருட்டு அமுல்படுத்தப்படுகின்றது. பெறுகைக்குழு மற்றும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு போன்ற சில குழுக்கள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு இடரை தடுப்பதற்கு செயற்படுகின்றன.

**வழங்குனர் இடர்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதன் அனைத்து பெற்றொலிய உற்பத்திகளுக்குமென சர்வதேச சந்தையிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்வதுடன் சாத்தியமான வழங்கல் தடைகள், குறைபாடுகள் மற்றும் தேவைப்பட்ட தொழினுட்ப தரத்திற்கு இணங்காத உற்பத்திகள் என்பன கூட்டுத்தாபனத்திற்கு வழங்கல் இடரினை தோற்றுவிக்கின்றன. கூட்டுத்தாபனமானது கையிருப்பு மீளாய்வுக் குழு, பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் போன்ற உப குழுக்களை தர உறுதிப்பாடு மற்றும் சீரான வழங்கல் சங்கிலி என்பவற்றினை உறுதி செய்யும்பொருட்டு தாபித்துள்ளது.

**தொழிலாளர் இடர்**

தொழிலாளர் இடர் பெற்றொலிய உற்பத்திகளின் தரத்தினையும் கூட்டுத்தாபனத்தின் நல்லெண்ணத்தினையும் பாதிக்கக்கூடியவை. ஏனைய விடயங்களுக்கு மத்தியில் தொழிலாளருடன் தொடர்புபட்ட வழக்காடல்கள் தகைமையுடைய வேலைப்படையொன்னை கட்டுவிப்பதற்க ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி என்பவற்றின் காலம் மற்றும் மூலவளங்கள் என்பவை தொடர்பில் இவை நிகழக்கூடியன. கூட்டுத்தாபனத்தின் பணியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தகின்ற தொழிற்சங்களுடனான கூட்டு ஒப்பந்தங்கள் ஊடாக கூட்டுத்தாபனம் அனைத்து வேலைகளிலும் வேலைப்படையினை ஊக்குவிப்பதனை உறுதி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. இவ்வொழுங்ககள் தொழில் தருனர் மற்றும் தொழிலாளர்களின் நலன்களுக்கிடையில் சமமான சமநிலையொன்றினை நிலைநிறுத்துகின்றது. எமது ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணியாளர் நலனோம்புகை மற்றும் ஏனைய நலன் திட்டங்கள் தொழிற்படையினரை ஆர்வமிக்கதாகவும் சக்திமிக்கதாகவும் பேணுவதற்கு முக்கியமானதொன்றாகும்.

# நிறுவன ஆளுகை

## நிறுவன ஆளுகை

நிறுவனமொன்றின் தொழிற்படுத்தல் செயற்பாடுகளை கொண்டுநடாத்துவதில் உள்ள நேர்மை, பொருன்மை, ஒருமைப்பாடு, வெளிப்படைத் தன்னை, ஒழுக்க நெறி என்வற்றினை நிறுவன ஆளுகை கோட்பாடு உள்ளடக்குகின்றது. பணிப்பாளர்கள் சபையானதும் வலுவானதுமான நிறுவன ஆளுகை நடைமுறையினைப் பொறுப்பேற்றுள்ளதுடன் அதனூடாக கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளில் உயர் தரத்தினை பேணுவதற்கு ஆளுகை நடைமுறைகளை திருத்தியமைக்கின்றது. நிலைத்திருக்கதக்க சக்தி கூட்டுத்தானபனமொன்றின் மையக் குறிக்கோள்களை வலுவான சுற்றாடல் நட்புமிக்க செயன்முறையுடன் அடையப்பெறல் மற்றும் தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றல் என்பவற்றுக்கு இன்றியமையாதவையான அதன் தொழிற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு, பொறுப்புக்கூறலை எய்துவதற்கு நிறுவன ஆளுகையின் கோடபாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை கூட்டுத்தாபனம் உறுதிசெய்கின்றது.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் 2003 இல் நிதி அமைச்சின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில் முயற்சி வழிகாட்டல்கள் நிறுவன ஆளுகை மீதான சிறந்த ஆளுகைக் கோவையின் தேவைப்படுத்தல்களை கூட்டுத்தானம் கடைப்பிடிக்கின்றது.

## பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர் சபை, ஆறு தவிசாளர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் உட்பட 7 அங்கத்தவர்களைக் கொண்டதாகும். இதில் தவிசாளர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர்கள் 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். அத்தகைய ஒரு பணிப்பாளர் திறைசேரி (நிதி திட்டமிடல் அமைச்சின்) பிரதிநிதி ஆவார். தவிசாளர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் தவிர்ந்த சகல பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களாகும்.

மீள் நியமனத்திற்கு உட்பட்டு, சபையில் பணிப்பாளர்கள் 3 வருட காலத்தினை விஞ்சாத ஆரம்ப பதவிக்கால மொன்றினை கொண்டிருப்பர் தீர்மானங்களை மேற்கொள்வதில் சபையானது, நிறுவன முகாமைத்துவத்திடமிருந்து தொடர்புடைய தகவல்களைக் பெற்றுக் கொள்கின்றது தேவைப்படுமிடத்து, புற தொழில்சார் நிபுணர்களிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றது.

## சபையின் பொறுப்புடமைகள்

பங்குதாரர்களின் நம்பிக்கை, தொழில் ஒருமைப்பாடு என்பவற்றை பேணுகின்ற அத்துடன் நியதிச் சட்டத் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்கின்ற வலுவான நிறுவன ஆளுகைக் கட்டமைப்பொன்றினுள் நிலைபெறத்தக்க பங்குதாரர் பெறுமதியினை தோற்றுவிப்பதும் கொண்டு சேர்ப்பதும் சபையின் பிரதான பொறுப்புடமையாகும். கொள்கைகளை உருவாக்கி அமுலாக்குவதன் ஊடாகவும் அவற்றின் செயல்திறன் மிக்க அமுலாக்கத்தினை உறுதி செய்வதன் ஊடகாகவும் கூட்டுத்தாபனத்தின் மீது செயற்றிறன் மிக்க கட்டுபாட்டினை பிரயோகிப்பதற்கு முயற்சிக்கின்றது. சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களில் பிரசன்னமாதல் மற்றும் சுற்றறிக்கை தீர்மானங்கள் என்பன மூலம் கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களுக்குகாக பணிப்பாளர்கள் தம்மை அர்பணித்துள்ளனர். சிறந்த ஆளுகை நடைமுறைக்கு உரிய முறையில் இணங்குவதனை உறுதிசெய்வதற்கும் கம்பனியின் செயலாற்றுகை மற்றும் வாய்ப்புகளின் பொருன்மை மதிப்பீடொன்றினை ஆக்குவதற்கும் சபை சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றது.

மேற்குறித்தவற்றக்கு மேலதிகமாக, வருடாந்த நிதியியல் கூற்றுக்கள், வருடாந்த பாதீடுகள், நிறுவனத் திட்டம், செயற்திட்டம் என்பவற்றிற்கு அனுமதி வழங்குதல், கிரமமான அடிப்படையொன்றில் நிதியியல் செயலாற்றுகையினை மீளாய்தல் என்பவற்றிக்கான பொறுப்புடைமையினையும் சபை கொண்டுள்ளது. முக்கிய நியமனங்கள், பதவியினருக்கான பதவியுயர்வுகள், பிரதான மூலதனச் செலவின முதலீடுகள்

மற்றும் கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கான கடன் வசதிபோன்றவை தொடர்பிலான அனுமதி வழங்கலினையும் சபை மேற்பார்வை செய்கின்றது.

**சபைக் கூட்டங்கள்**

சபைக் கூட்டங்கள் கிரமமாக மாதாந்தம் நடாத்தப்படுவதுடன் விசேட சபைக் கூட்டங்கள் தேவைப்படும் வேளையில் கூட்டப்படுகின்றன. அழைப்பின் பேரில் சிரேஸ்ட முகாமையாளர்களும் கூட்டங்களுக்கு வருகை தருகின்றனர்.

முறையான நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையில் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன் கூட்டங்களுக்கு முன்னர் பணிப்பாளர்களுக்கு நிறுவன முகாமைத்துவத்தினால் தொடர்புடைய விரிவான பின்னணித் தகவல்கள் வழங்கப்படுகின்றன. மீளாய்விற்குட்பட்ட ஆன்டின் போது 14 சபைக் கூட்டங்கள் இடம் பெற்றன.

**இணங்குவித்தலும் வெளிப்படைத் தன்மையும்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் சகல கொடுக்கல் வாங்கல்களிலும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்கு கடமைப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனம், பொறுப்புக்கூறலினை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் உரிய பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் செயற்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செயற்பாடுகளுடன் உள்ளக கட்டுபாடுகளின் இணங்குவித்தல் செயற்பாட்டு உறுதிப்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. நிதிச் சட்டம் மற்றும் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் புறக் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொள்கின்றார்.

**நிறுவன முகாமைத்துவம்**

காலத்திற்கு காலம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாய பணிப்புரை, கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் நாளாந்த விவகாரங்களை தவிசாளர்/ முகாமைத்துவப் பணிப்பாளர் முகாமை செய்கின்றார் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபான தொழிற்பாடு மற்றும் நிருவகித்தல், சுத்திகரிப்புச்சாலைச் செயற்பாடுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் உட்பட தலைமை அலுவலகச் செயற்பாடுகள் என்ற ரீதியில் இரண்டு பரந்தளவிலான பகுதிகளாக பிரிக்க கூடியது.

சுத்திகரிப்புச்சாலை செயற்படானது மின்சார, இரசாயன மற்றும் இயந்திரவியல் போன்ற வேறுபட்ட மைய தொழில்நுட்ப விடயங்களில் பிரதி சுத்திகரிப்புச்சாலை முகாமையாளர்களின் உதவியுடன் சுத்திகரிப்புச்சாலை முகாமையாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.

தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவும், கூட்டுத்தானத்தின் நாளாந்த தொழிற்பாடுகளில் தவிசாளர் / முகாமைத்துவப் பணிப்பாளருக்கு உதவுகின்ற பிரதி பொது முகாமையாளர் அல்லது முகாமையாளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. நிறவன முகாமையாளர்கள் சிறந்த கல்விசார் பட்டங்களையும் தமக்கு தொடர்புடைய தொழிற்பாட்டுப் பிரிவுகளில் தொடர்புடைய தொழில்சார் தகைமைகளையும் பெற்றுள்ளனர்.

**கணக்காய்வுக் குழு**

**கணக்காய்வுக் குழு உள்ளடக்கம்**

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் போது குழு உறுப்பினர்களாக பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளர்களுக்காக கூட்டுத்தாபனம் 5 கணக்காய்வு கூட்டங்களை நடாத்தியது. 58 ஆம் கணக்காய்வுக் குழு கூட்டத்தில் 03 நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர்கள், அதாவது கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்), திருமதி. சந்தயா விஜயபண்டார மற்றும் திருவதி எஸ்.பி. வெல்லப்பிலி ஆகியோர் குழு உறுப்பினர்களாக (உறுப்பினர்) செயற்பட்டனர்.

59 வது கணக்காய்வு குழு கூட்டம் ஆரம்பித்து 62 கணக்காய்வு குழு கூட்டங்கள் வரை 03 நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர்கள் அதாவது திரு. ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்), திருமதி. சந்தயா விஜயபண்டார மற்றும் செல்வி விசாகா அமரசேகர ஆகியோர் குழு உறுப்பிளர்களாக செயற்பட்டனர்.

குழுவின் கணக்காய்வுப் பட்டயம், அரசாங்க வர்த்தக தொழில் முயற்சியில் கணக்காய்வினை நடத்துவதுடன் தொடர்புடைய திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் தரப்பட்டுள்ள பொறுப்புக்களின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வு குழுவின் கடமைப் பொறுப்பு**

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் நேரப்படுத்தல், மற்றும் நிலைத்திருத்தல் அத்துடன் வியாபாரத் தொழிற்பாடுகள் நிதி அறிக்கையிடல் முறைமையின் வெளிப்படுத்தலின் போதுமை மீதான இணங்குவித்தல் என்பவற்றினை குழு மீளாய்கின்றது. நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றபடும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்/இலங்கை கணக்கீட்டு நியமங்கள் உட்பட நிதி அறிக்கையிடல் முறைமையுடனான இணங்குவித்தல், பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கைகள் பொருந்துகை என்பவற்றினையும் இது உறுதி செய்கின்றது. இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனம் ஆட்படுகின்ற இடர்கள், இடர்களை தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளும் மற்றும் அவற்றின் செய்திறன் என்பவற்றினை குழு மீளாய்கின்றது.

**கூட்டங்கள்**

மீளாய்வின் கீழான ஆண்டின்போது மேற்குறித்தவாறு பொறுப்பளிக்கப்பட்ட கடமைகளை கலந்துரையாடுவதற்கு 05 கணக்காய்வு குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின்போது கணக்காய்வு குழு கூட்டங்களில் பங்கேற்ற உறுப்பினர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளன:

| தொடர் இல: | திகதி | குழு உறுப்பினர்கள் எண்ணிகைகை | பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்கள் | உறுப்பினர்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 58 | 08.01.2013 | 03 | 03 | கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்)<br>திருமதி. சந்தயா விஜயபண்டார<br>செல்வி விசாகா அமரசேகர |
| 59 | 14.03.2013 | 03 | 03 | கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்) திருமதி<br>சந்தயா விஜயபண்டார<br>செல்வி விசாகா அமரசேகர |
| 60 | 02.07.3013 | 03 | 03 | கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்)<br>திருமதி சந்தயா விஜயபண்டார<br>செல்வி விசாகா அமரசேகர |
| 61 | 11.10.2013 | 03 | 03 | கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்)<br>திருமதி. சந்தயா விஜயபண்டார<br>செல்வி விசாகா அமரசேகர |
| 62 | 19.12.2013 | 03 | 03 | கலாநிதி ஹான்ஸா விஜேசூரிய (தலைவர்)<br>திருமதி. சந்தயா விஜயபண்டார<br>செல்வி. விசாகா அமரசேகர |

**கணக்காய்வுக் குழுவினால் செயலாற்றப்பட்ட பணிகள்**

பின்வரும் உபாய விடயங்கள் கணக்காய்வு கூட்டங்களில் கருத்திற் கொள்ளப்பட்டு கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் பணியாற்றத்தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்காக பணிப்பாளர்கள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

- கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை மூலம் எடுத்துக்காட்டப்பட்ட குறைபாடுகள் மீண்டும் அவை நிகழ்வதைத் தடுப்பதற்கும் சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் கலந்துரையாடல்.

- உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் போதுமை பற்றி முகாமைத்துவம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து மீளாய்தல்

- நிதியியல் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமான எடுத்துரைத்தலை உறுதி செய்வதற்கு நிதி அறிகையிடல் செயன் முறையினை மேற்பார்வை செய்தல்.
- ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை இணங்கானுதல் நட்டமேற்படும் அலகுகளைத் திசைதிருப்புவதற்கும் வேறு இலாபகரமிக்க வர்த்தக முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் முன்மொழிவதற்கு அல்லது பொருத்தமான உடனடி நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும் பிரிவுசார் பகுப்பாய்வுகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.
- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம், முக்கிய கணக்காய்வு காண்புகள், மற்றும் செயல்திட்ட மீளாய்வு.
- இடர் அடையாளப்படுத்தபடுத்தலும் இடர்களை ஏறபு மட்டத்திற்கு தணிப்பதற்கான பரிகார நடவடிக்கைகளும்.

## முகாமைத்துவக் குழு

முகாமைத்துவக் குழு இரண்டு நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்களில் ஒருவர் முகாமைத்துவக் குழுாவின் ஒருவர் முகாமைத்துவக் குழுவின் தவிசாளாராவார். பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்ட அனைத்து விடயங்களையும் கலந்துரையாடுவதற்கு மாதாந்தம் சபை கூடுவதற்கு முன்னர் மாதமொரு முறை முகாமைத்துவக் குழு கூடுகின்றது. குழு அதன் அறிக்கைகளை இறுதி அனுமதிக்காக சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கின்றது. அனைத்து சிரேஷ்ட முகாமையாளர்களும், பிரிவுத் தலைவர்களும் முகாமைத்துவக் குழுவில் பங்கேற்கின்றர்.

## கையிருப்பு மீளாய்வுக் குழு

சிபெஸ்ரேலி பதவியினர் மற்றும் இலங்கை மின்சாரக் சபை அத்துடன் இந்தியன் ஒயில் கம்பனி பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இவை வாராந்தம் நடாத்தப்படுகின்றன. களஞ்சிய நிலை மீளாயப்பட்டு மூன்றுமாத எதிர்காலத் தேவைக்கான தேவைப்பாடுகள் திட்டமிடப்படுகின்றன. சுத்திகரிப்புச் சாலை உற்பத்திக்கு எதிரான நாட்டின் தேவையினைக் கருத்திற் கொண்டு இறக்குமதி செய்யவேண்டிய அளவு இனங்காணப்படுகின்றது அத்துடன் கிடைக்கப் பெறுகின்ற தாங்கி களஞ்சியக் கொள்ளளவினைக் கருத்திக் கொண்டு கப்பற் சரக்குகள் திட்டமிடப்படுகின்றன. கிரமமான நெருங்கிய் அவதானிப்புக்கள் நாட்டில் தடங்கலற்ற எரிபொருள் விநியோக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினை இயலச் செய்கின்றது.

## பெறுகைக் குழுவும் தொழினுட்ப மதிப்பீடுக் குழுவும்

உற்பத்திகள், பொருட்கள், சேவை மற்றும் பணிகளைத் கொள்வனவு செய்வதற்காக தேசிய கொள்வனவு முகவர் நிலையம் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. வெளிப்படைத் தன்மையினை உறுதிசெய்தல், தாமதங்களைத் குறைத்தல் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நிதியியல் ரீதியாக அனுகூலமிக்க, சிறந்த தரமிக்க சேவைகள் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தினால் வெளிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொர்புடைய கேள்வி மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு என்பன செயற்படுகின்றன.

## நிதியியல் வெளிப்படுத்தல்கள்

கூட்டுத்தாபனம் பற்றி உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வழங்குகின்ற நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும். இக்கூற்றுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள், நிதிச் சட்டம் மற்றும் கூட்டுத்தாபனச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைவாக தயாரிக்கப்படுகின்றன.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

செயற்பாடுமிக்க கட்டுப்பாட்டு முறையொன்றினைப் பேணுவதும் அதன் செயல்திறனை மீளாய்வதும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். இம்முறைமையானது கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப்

பாதுகாப்பதற்கும் முறையான பதிவேடுகள் பேணப்படுகின்றது மற்றும் நம்பத்தகுந்த தகவல்கள் உருவாக்கப்படுகின்றது என்பதனை உறுதி செய்வதனையும் நோக்காக கொள்கின்றது. இப் பொறுப்புடைமையானது நிதியியல், தொழிற்பாட்டு மற்றும் இணங்கியொழுகுதல் கட்டுப்பாடுகள் அத்துடன் இடர் முகாமைத்துவம் அடங்கலாக அனைத்து வகையான கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும் ஏதேனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை, தவறுகள் மற்றும் ஒழுங்கீனங்கள் நியாயமான காலப்பகுதியொன்றினுள் எடுத்துரைக்க அல்லது கண்டுபிடிக்கப்படும் என நியாயமான அல்லது முழுமையற்ற உத்தரவாதத்தினை மாத்திரம் உறுதி செய்ய முடியும் என்பதை குறிப்பிடுவது முக்கியமானதாகும்.
கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முறைகளின் போதிய தன்மையினை உறுதி செய்வதற்கு பொறுப்பாகவுள்ளதுடன் கிரமமான உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்தவதற்கு பரிந்துரைகளையும் ஆக்குகின்றது.

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு, நிதியியல், தொழிற்பாட்டு நடைமுறை மற்றும் கட்டுப்பாடுகளின் செயல்திறன்தன்மையினை மதிப்பிடுவதற்கு தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் நோக்கெல்லையினை மீளாய்வு செய்து தீர்மானிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தொழில்சார் ரீதியாக தகமை பெற்ற பட்டயக் கணக்காளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. உள்ளக கட்டுப்பாடுக்கான பெறுவழி, தனிப்பட்ட தொழிற்பாடுகளின் இடர் பிரதேசத்தினை புரிந்து கொள்ளல், இணங்கியொழுகுதல் மற்றும் பொருன்மை பரிசோதனைகளைப் பயன்படுத்தி முகாமைத்துவ கட்டுப்பாட்டு மதிப்பிடுதலுக்காக கணக்காய்வுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது உள்ளக கணக்காய்வுப் பிரிவு, வழக்கமான கணக்காய்வு பணிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தியது.

- உற்பத்தி நட்டங்கள், வருவாய் நட்டங்கள் மற்றும் தகவல் முறைமை தொடர்தல் விடயங்களுடன் தொடர்புடைய இடர்களை அடையாளப்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் மூலவளப் பாவனையினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மூலோபாய வியாபார அலகுகளின் வினைத்திறனை
- தற்போது காணப்படுகின்ற நடைமுறைகளில் உள்ள பலவீனங்களை இனங்காணலும் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்மொழிதல் மற்றும் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தல்.
- உள்ளக கணக்காய்வினால் எடுத்துக்காட்டப்பட்ட பிரதான விடயங்களின் மீதான செயல்திட்ட முன்னேற்றம் மீளாய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டது.
- தொழில் முயற்சி வளத்திட்டமிடல் ஒன்றினை முகாமை செய்வதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் போதுமையினை மதிப்பிடுவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் தகவல் முறைமை பொறிமுறை மீளாயாப்பட்டது.
- தொழில் முயற்சி வளத்திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ உதவி மட்டம் மீதான பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணுதலும் பணித்தலும்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய கலந்துரையாடலும் கணக்காய்வு வினவல்களக்கான பதில்களும்.
- உண்மையாக ஆற்றப்பட்ட பணிகளை அடிப்படையாக கொண்டு வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளக கண்காய்வு பிரவின் செயலாற்றுகை என்பவற்றின் காலமுறை ரீதியான மீளாய்வு.

### பொதுத்திறைசேரி மற்றும் மத்திய வங்கி என்பவற்றுடனான உறவு

கூட்டுத்தாபனமானது மத்திய வங்கி மற்றும் பொது திறைசேரி என்பவற்றுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் திறைசேரி தொழிற்பாடுகளை முகாமை செய்யும் போது அவர்களது செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றது. பிரதான விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கடன் பெறுதல் போன்றவற்றுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் கூட்டுத்தாபனம் நாடுகின்றது.

# நிதியியல் கூற்றுகள்

- விரிவான வருமானக் கூற்று
- நிதியியல் நிலைக் கூற்று
- பங்குமூலதன மாற்றக் கூற்று
- காசுப் பாய்ச்சல் கூற்று
- நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

# விரிவான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | இ.பெ.கூ 2013 ரூபா. மில் | இ.பெ.கூ 2012 ரூபா. மில் | குழு 2013 ரூபா. மில் | குழு 2012 ரூபா. மில் |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 1 | 490,381.492 | 512,910.308 | 490,966.235 | 514,546.562 |
| விற்பனைச் செலவுகள் | 2 | (467,637.933) | (573,692.045) | (474,085.894) | (580,519.808) |
| **மொத்த இலாபம் / (நட்டம்)** | | 22,743.559 | (60,781.737) | 16,880.341 | (65,973.246) |
| ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் | 3 | 321.978 | 246.328 | 452.324 | 543.118 |
| முதலீட்டு ஆதனம் மீதான வருமானம் | 3.1 | 52.015 | 38.976 | 52.015 | 38.976 |
| விற்பனை விநியோகச் செலவு | 3.2 | (11,965.252) | (12,633.096) | (1,600.652) | (2,773.532) |
| நிருவாகச் செலவுகள் | 3.3 | (3,600.151) | (5,800.737) | (6,660.359) | (8,801.501) |
| **தொழிற்படுத்தல் இலாபம் / (நட்டம்)** | | **7,552.148** | **(78,930.266)** | **9,123.669** | **(76,966.185)** |
| நிதிக் கட்டணங்கள | 3.4 | (18,539.848) | (18,359.678) | (18,539.848) | (18,360.200) |
| நிதி வருமானம் | 3.5 | 3,254.882 | 7,720.769 | 3,279.401 | 7,592.272 |
| **வருமான வரிக்கு முன்னர் நட்டம்** | | **(7,732.818)** | **(89,569.175)** | **(6,136.778)** | **(87,734.112)** |
| வருமான வரிச் செலவுகள் | | | | (216.017) | (75.914) |
| **அதி விஷேட செயற்பாடுகளுக்கு பின்னர் வரிக்கு பிந்திய நட்ட** | | (7,732.818) | (89,569.175) | (6,352.795) | (87,810.026) |
| கழி: ஹெட்ஜிங் செலவுகள் | | (214.491) | (7,611.600) | (214.491) | (7,611.600) |
| **அதி விஷேட செயற்பாடுகளுக்கு பின்னர் ஆண்டுக்கான நட்டம** | | **(7,947.309)** | **(97,180.775)** | **(6,567.286)** | **(95,421.626)** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | |
| முதலீடு மீதான நட்டம் | | (14.500) | (51.500) | (14.500) | (51.500) |
| கணிப்பீட்டு நட்டம் | | (22.416) | (76.098) | (64.452) | (76.098) |
| **ஆண்டுக்கான ஏனைய விரிவான நட்டம்** | | (36.916) | (127.598) | (78.952) | (127.598) |
| **ஆண்டுக்கான ஏனைய மொத்த விரிவான நட்டம்** | | **(7,984.225)** | **(97,308.373)** | **(6,646.238)** | **(95,549.224)** |
| கழி: கட்டுப்பாடாத வட்டி | | | | (445.995) | (586.383) |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | | **(7,984.225)** | **(97,308.373)** | **(7,092.233)** | **(96,135.607)** |

பக்கம் 51 தொடக்கம் 60 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதியியல் கூற்றுக்களின் உள்ளார்ந்த பக்கமொன்றினை தோற்றுவிக்கின்றன.

# நிதியியல் நிலைக் கூற்று

| திகதியில் உள்வாறு | குறிப்பு | இ.பெ.கூ 31.12.2013 ரூபா மில் | இ.பெ.கூ 31.12.2012 ரூபா மில் | குழு 31.12.2013 ரூபா மில் | குழு 31.12.2012 ரூபா மில் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | 4 | 13,110.644 | 9,572.201 | 31,083.696 | 28,627.947 |
| முதலீட்டு ஆதனம் | 4.5 | 26.166 | 26.970 | 26.166 | 26.970 |
| புலனாகச் சொத்துக்கள் | 4.7 | - | | 139.293 | 229.428 |
| துணை நிறுவனங்களில் முதலீடுகள் | 5.1 | 5,000.000 | 5,000.000 | - | - |
| ஏனைய முதலீடுகள் | 5.2 | 38.626 | 53.126 | 38.626 | 53.126 |
| நிலையான வைப்புக்களில் முதலீடுகள் | | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| வணிக கிடைக்கப் பெறத்தக்கவையும் ஒரு | 6 | 34,841.091 | 16,110.986 | 34,841.091 | 14,682.463 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்தக்கள் | | - | - | - | - |
| | | **53,021.527** | **30,768.283** | **66,133.872** | **43,624.935** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 7 | 65,032.200 | 62,189.825 | 65,428.440 | 62,550.296 |
| வணிக, ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை- ஒரு வருடத்தனு | 6 | 55,331.858 | 101,403.011 | 57,083.429 | 104,303.415 |
| மீள அறவிடத்தக்க வருமான வரி | | 713.641 | 246.990 | 999.059 | 628.057 |
| நிலையான வைப்புக்களில் முதலீடுகள் | 5.3 | 6,801.651 | - | 6,801.651 | - |
| காசும் காசுக்கு சமமானவையும் | 8 | 6,134.526 | 11,623.634 | 11,385.099 | 12,085.561 |
| | | 134,013.876 | 175,463.460 | 141,697.678 | 179,567.329 |
| மொத்தச் சொத்துக்கள் | | **187,035.403** | **206,231.743** | **207,831.550** | **223,192.264** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 9 | 1,000.000 | 1,000.000 | 1,000.000 | 1,000.000 |
| சிபெஸ்ரேலி இல் உள்ள பங்குகள் | | 2,500.000 | 2,500.000 | 2,500.000 | 2,500.000 |
| மூலதன் ஒதுக்கு | 10 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 |
| திரட்டுதல் மீதான ஒதுக்கு | | | - | 2,485.643 | 2,485.643 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | | (245,021.426) | (237,037.201) | (240,716.589) | (233,748.588) |
| கட்டுப்படுத்தப்படாத வட்டி | | - | - | 5,895.239 | 5,387.128 |
| மொத்த ஒப்புரவு | | **(236,528.740)** | **(228,544.515)** | **(223,843.021)** | **(217,383.131)** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| ஒய்வூதிய நலப் பொறுப்புக்கள் | | 538.109 | 546.935 | 1,755.131 | 1,652.777 |
| பிற்போடப்பட்ட வரி | | | | 394.660 | 366.065 |
| கடன்கள் மற்றும் கொடுத்துவுதல்கள் கொண்டுள்ள வட்டி | 11 | 1,350.850 | 1,998.218 | 3,725.301 | 4,521.422 |
| | | **1,888.959** | **2,545.153** | **5,875.092** | **6,540.265** |
| **நடை முறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தகமும் ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்கவையும் | 12 | 194,096.925 | 220,897.351 | 197,561.868 | 221,848.494 |
| கடன்கள் மற்றும் கொடுத்துவதல்கள் கொண்டுள்ள | 13 | 227,407.568 | 211,163.063 | 228,066.919 | 212,015.945 |
| கருத்தப்பட்ட பங்கிலாப வரிச்செலவுகளுக்கான ஏற்பாடுகள் | | 170.691 | 170.691 | 170.691 | 170.691 |
| | | | | - | |
| | | 421,675.184 | 432,231.105 | 425,799.479 | 434,035.130 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புளும்** | | **187,035.403** | **206,231.743** | **207,831.550** | **223,192.264** |

பக்கம் 51 தொடக்கம் 60 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதியியல் கூற்றுக்களின் உள்ளார்ந்த பக்கமொன்றினை தோற்றுவிக்கின்றன.

இந் நிதியியல் கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் 2013.12.31 அன்று உள்ளவாறான விவகார நிலை மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நட்டம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை தருகின்றன்

டப்லிவ் சரத் பெரேரா
**பதில். பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**

ஆர்.ரி.எம். தாபரே
**நிதி முகாமையாளர்**

இந் நிதிக் கூற்றுக்களை தயாரித்து எடுத்துரைப்பதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபையினைச் சார்ந்ததாகும். சபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

எஸ் . அமரசேகர
பதில் தவிசாளர்

எல். ஈ.சுதாந்த சில்வா
முகாமைத்துவப் பணிப்பாளர்

# பங்கு மூலதன மாற்றக் கூற்று

| | பங்களிப்புச் செய்யப் மூலதனம் ரூபா.மில் | சிபெஸ்ரேலிய இன் பங்குகள் | மூலதன ஒதுக்கு ரூபா.மில் | காப்புறுதி ஒதுக்கு ரூபா.மில் | திரட்டுதல் மீதான ஒதுக்கு ரூபா.மில் | பிடித்து வகைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா.மில் | பங்குதாரர்கள் நிதியம் ரூபா.மில் | கட்டுப்படாத வட்டி ரூபா.மில் | மொத்த ஒப்பு ரூபா.மில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2010.12.31 இல் மீதி** | 1,000.000 | 2,500.000 | 4,992.686 | 619.432 | 2,485.643 | (46,051.496) | (34,453.735) | 3,957.423 | (30,496.312) |
| **விரிவான வருமானம்** | | | | | | | | | |
| ஆண்டுக்கான நட்டம் | | | | | | (93,297.165) | (93,297.165) | | (93,297.165) |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | | | | | | (146.803) | (146.803) | | (146.803) |
| **2011 இற்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | | (93,443.968) | (93,443.968) | | (123,940.280) |
| ஆண்டின் போதான சேர்த்தல் | | | | | | | - | | - |
| ஆண்டின் போதான மிகை | | | | 0.776 | | 635.108 | 635.884 | | 635.884 |
| பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு புறமாற்றுதலுக்கு மாற்றப்பட்டவை | | | | (620.208) | | 620.208 | - | | - |
| **2011டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | 1,000.000 | 2,500.000 | 4,992.686 | - | 2,485.643 | (138,240.148) | (124,776.176) | 4,487.162 | (122,774.657) |
| **விரிவான வருமானம்** | | | | | | | | | |
| ஆண்டுக்கான நட்டம் | | | | - | | (96,008.009) | (96,008.009) | | (96,008.009) |
| ஏனைய விரிவான வருமானம் | | | | | | (127.598) | (127.598) | | (127.598) |
| சரிப்படுத்துதல்கள் | | | | | | 627.167 | 627.167 | | 627.167 |
| **2012 ஆம்ஆண்டுக்கானன மொத்த வருமானம்** | | | | - | | (95,508.440) | (95,508.440) | | (95,508.440) |
| **2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | **1,000.000** | **2,500.000** | **4,992.686** | **-** | **2,485.643** | **(233,748.588)** | **(222,770.259)** | **5,387.128** | **(217,383.131)** |
| **விரிவான வருமானம்** | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் ∴நட்டம் | | | | | | (7,092.233) | (7,092.233) | 445.995 | (6,646.238) |
| 2012 இல் திரட்டிய சரிப்படுத்தல் | | | | | | 124.232 | 124.232 | 62.116 | 186.348 |
| சிபெஸ்ரேலி பிடித்து வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கான சரிப்படுத்தல் | | | | | | | - | - | - |
| **2013 ஆம்ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | - | | (6,968.001) | (6,968.001) | 508.111 | (6,459.890) |
| **2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **1,000.000** | **2,500.000** | **4,992.686** | **-** | **2,485.643** | **(240,716.589)** | **(229,738.260)** | **5,895.239** | **(223,843.021)** |

பக்கம் 51 தொடக்கம் 60 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதியியல் கூற்றுக்களின் உள்ளார்ந்த பக்கமொன்றினை தோற்றுவிக்கின்றன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | இ.பெ.சு 2013 ருபா.மில | இ.பெ.சு 2012 ருபா.மில | குழு 2013 ருபா.மில | குழு 2012 ருபா.மில |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | | |
| தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட காசு | 14 | 5,152.809 | (50,699.387) | 11,611.005 | (49,807.884) |
| செலுத்தப்பட்ட வட்டி | | (18,539.848) | (18,359.678) | (19,195.078) | (19,084.230) |
| செலுத்தப்பட்ட ஒய்வூதிய பனிக்கொடை | | (65.859) | (39.000) | (143.538) | (102.938) |
| செலுத்தப்பட்ட வருமான வரி ∴ பி.வை வ | | (466.651) | 689.623 | (466.651) | 574.622 |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு** | | **(13,919.549)** | **(68,408.442)** | **(8,194.263)** | **(68,420.429)** |
| **முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | | | |
| ஆதனம் பொறித்தொகுதி, உபகரணம் விற்பனை வரவு | | 23.728 | (1,280.428) | 36.589 | (1,356.747) |
| ஆதனம் பொறித்தொகுதி, உபகரணம் பெற்றுக் கொள்ளல் | | (4,023.521) | 15.762 | (4,080.894) | 16.098 |
| முதலீட்டிலிருந்து வருமானம் | | 0.007 | 0.003 | 0.007 | 0.003 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | | 3,254.882 | 2,413.145 | 3,279.401 | 2,472.059 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (6,801.651) | - | (6,801.651) | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **(7,546.556)** | **1,148.481** | **(7,566.548)** | **1,131.413** |
| **நிதியிடல் செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | | | |
| காலத்தின் போது பெறப்பட்ட கடன்கள் | | | | 339.047 | 1,135.400 |
| நீண்டகாலக் கடன் மீள் கொடுப்பனவு | | 7,231.628 | 62,539.945 | 6,172.419 | 61,480.735 |
| கட்டுப்படாத வட்டீ | | | | - | |
| **நிதியிடல் செயற்பாடுகளில் இருந்து (பயன்படுத்தப்பட்ட) தேறி** | | **7,231.628** | **62,539.945** | **6,511.465** | **61,480.735** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/ (குை** | | (14,234.477) | (4,720.016) | (9,249.346) | (4,672.888) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | 6,935.086 | 11,655.102 | 7,031.931 | 11,704.819 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான | 8 | **(7,299.391)** | **6,935.086** | **(2,217.415)** | **7,031.931** |

பக்கம் 51 தொடக்கம் 60 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதியியல் கூற்றுக்களின் உள்ளார்ந்த பக்கமொன்றினை தோற்றுவிக்கின்றன.

# முக்கிய கணக்கீட்டுக் கொள்ளைகள்

## 1. நிறுவனத் தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தபானம், 1961 ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையை அதன் வாழிடமாக கொண்டுள்ளது. கூட்டுத்தபானத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 609 கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு 09 என்ற முகவரியில் அமையப் பெற்றுள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் வியாபாரத்தின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள், இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை சுத்திகரித்தல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் கண்டறிதல் ஆய்வு என்பனவாகும்.

### 1.3 தாய்க் குழுமம், சிறப்புத் தாய்க் குழுமம் மற்றும் துணைக் கமபனி

கூட்டுத்தாபனம், பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்ளது. பணிப்பாளர்கள் கருத்தில் கூட்டுத்தாபனத்தின் சிறப்பு நிறுவன பொறுப்பளாரும் கட்டுபடுத்தும் திறத்தவரும் இலங்கை அரசாங்கமாகும். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2/3 பங்கு உரித்துக்கொண்டுள்ளது.

### 1.4 விநியோகத்திற்கான அங்கீகாரத் திகதி

2013 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர்கள் சபையின் 2014 மார்ச் 07 ஆம் திகதிய தீர்மானத்திற்கமைய விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது.

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

### 2.1. தயாரித்தலுக்கான அடிப்படை

நிதியியல் கூற்றுகள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள்/இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ.நி/இ.க.நி) மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வரலாற்று கிரய அடிப்படையின் கீழ் (மீள் விலைமதிப்பிடல் தவிர) தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 திரட்டுதலுக்கான அடிப்படை

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் ¾ பங்குகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உரிமை கொண்டுள்ளதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான முக்கிய பாகமொன்றாகவுள்ள சிபெஸ்ரேலி நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்களின் திரட்டுதலினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன நிதிக் கூற்றுகள் உள்ளடக்குகின்றது.

### 2.1.2 விநியோகிக்கப்பட்ட ஆனால் பின்பற்றப்படாத கணக்கீட்டு நியமங்கள்

(அ) வழங்கப்படுகின்ற புதிய நியமங்கள், திருத்தங்கள் மற்றும் பொருள் கோடல்கள் 2012 ஜனவரி 1 இல் ஆரம்பிக்கின்ற நிதியாண்டிற்காக செயற்பாட்டில் அல்லாதவையும் ஏற்கனவே பின்பற்றப்படாதவையுமாகும்.

(i) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13, ''நியாப் பெறுமதி அளவீடு'' முரணற்ற தன்மையினை மேம்படுத்துவதற்கும் நியாயப் பெறுமதியில் சுருக்கமான வரையிலக்கணம் மற்றும் நியாய பெறுமதி அளவீட்டின் தனி ஒரு மூலம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் பரந்த பயன்பாட்டிற்கான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றை வழங்குவதனூடாக சிக்கல்களை குறைப்பதனையும் நோக்காக கொள்கின்றது.

(ii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9, 'நிதியியல் சாதனங்கள்' நிதியியல் சொத்துக்களின் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல், அளவீடு மற்றும் அடையாளப்படுத்தலினை எடுத்தாளுகின்றது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9, நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடுத்தலுடன் தொடர்புபடுகின்ற இலக்கங்களை கணக்கீட்டு நியமங்கள் 39 இன் பகுதிகளை மாற்றீடு செய்கின்றது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 நிதியில் சொத்துக்கள் இரண்டு அளவீட்டு வகுப்புகளாக வகைப்படுத்தப்பட வேண்டும் என தேவைப்படுத்துகின்றது அதாவது நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை மற்றும் பெறுமதி கழிவு கிரயத்தில் அளவிடப்பட்டவை. நிர்ணயித்தல், ஆரம்ப அடையாளப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றில் நிறுவனத்தின் வியாபார மாதிரியினைச் சார்ந்தது மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டுத்தாபனம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இன் முழுமையான தாக்கத்தினையும் இன்னும் மதிப்பிட வேண்டியுள்ளது.

(iii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 12, ''வேறு நிறுவனங்களில் உள்ள நலன்களை வெளிப்படுத்தல்'' வேறு நிறுவனங்களில் உள்ள அனைத்து வடிவிலான நலன்களுக்குமான தேவைப்படுத்தல்களை வெளிப்படுத்தல் உள்ளடங்களாக, இணைந்த ஒழுங்கமைப்புக்கள், இணைப்புக்கள் போன்றவை உள்ளடங்களாக.

கூட்டுத்தாபனத்தின் மீது முக்கிய தாக்கமொன்றினை கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படக்கூடிய இது வரை செயற்பாட்டில் அல்லாத இலங்கை நிதி அறிக்கையிடல் வேறு நியமங்கள் எனவும் காணப்படவில்லை.

### 2.1.3 இணங்கியொழுகுதல் கூற்று

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் இலங்கை கணக்காய்வு நியமங்கள் (இ.நி.அ.நி/இ.க.நி) மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்களினால் எடுத்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டள்ளன.

### 2.1.4 தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

கூட்டுதாபனம் தொடர்ந்து இயங்குதல் என்ற ஊகத்தின் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன அதாவது முன்னறிகின்ற எதிர்காலத்தின்போது அதன் தொழிற்பாட்டினை தொடரும். 2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுகளுக்கு அமைய கூட்டுத்தாபனம் ரூபா 7,092 மில் நட்டமடைந்து ரூபா 223,843 எதிர்மறை ஒப்புரவு நிலையொன்றினை காண்பிதிதிருந்த போதிலும் கூட்டுத்தானம் அதன் தொழிற்பாட்டின் முக்கிய பாகங்களை இல்லாதொழிக்கவோ அன்றில் குறைக்கவோ உத்தேசிக்கவில்லை என ஊகிக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கிக்கான அ.டொ. 1000 மில். மற்றும் மக்கள் வங்கிக்கான அ.டொ. 650 மில் வெளிநாட்டு நாணயக் கடன்களாக உருவாகுவதற்கு இலங்கைக் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சார்பில் பொது திறைசேரி உத்தரவாதமொன்றினை வழங்கியுள்ளது. அனைத்து நாணயக் கடிதங்களும் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி உடாக தொழிற்படுத்தப்படுகின்றன.

### 2.1.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

2.1 இல் குறிப்பிட்டது போன்று இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றியதிலிருந்து (இ நி அநி/ இ.க.நி) நடைமுறை ஆண்டில் எடுத்துரைப்பில் உள்ள மாற்றத்துடன் இணங்ககூடியவாறு அவசியமான இடங்களில் ஒப்பீடுகள் சரி செய்யப்பட்டுள்ளன.

## 2.2 முக்கிய கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களின் சாரம்சம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் சில மாறுநிலை கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்துவதனை தேவைப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு கொள்கை பிரயோக செயன்முறையில் முகாமைத்துவத்தின் தீர்ப்பினை பிரயோகிப்பதற்கும் முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உயர் மட்டத்தில் தீர்ப்பொன்று அல்லது சிக்கலொன்று ஈடுபட்டுள்ள விடயம் அல்லது நிதியில் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் உள்ள விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஓய்வூதிய கடப்பாடுகள் (பணிக்கொடை)**

ஒய்வூதிய கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி, பல எண்ணிக்கையான ஊகங்களைப் பயன்படுத்தி காலப் பங்களிப்பொன்றினை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற பல காரணிகளில் தங்கியுள்ளது. இவ் ஊகங்கள், கழிவு வீதங்கள் உள்ளடங்களாக ஓய்வூதிய கிரயத்தினை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்பட்டவை. இவ் ஊகங்களில் உள்ள ஏதேனும் மாற்றம் ஓய்வூதிய கடப்பாடு கொண்டுள்ள தொகையில் தாக்கமேற்படுத்தும்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பொருத்தமான கழிவு வீதமொன்றினை முகாமைத்துவம் நிர்ணயிக்கின்றது. ஓய்வூதிய கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு வேண்டப்பட்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதியினைத் நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்பட வேண்டியது என்ற வட்டி வீதம் இதுவாகும். கழிவு வீதத்தினை நிர்ணயிக்கும் போது முகாமைத்துவம், இலங்கையில் உள்ள நிறுவன முறிகளுக்கான ஆழமான சந்தை கிடைக்கப்பெறாமல் இருக்கின்ற போது அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களைக் கருத்தில் கொள்கின்றது.

ஒய்வூதிய கடப்பாட்டிற்கான ஏனைய முக்கிய ஊகங்கள் நடைமுறை சந்தை நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டன.

**விற்பனைக்காக விடப்பட்டுள்ள ஒப்புரவு சாதனங்களின் பெறுமதிக் குறைப்பு**

விற்பனைக்கு விடப்பட்டுள்ள ஒப்புரவு சாதனம் ஒன்று பெறுமதிக் குறைப்பு செய்யப்படும் போது நிர்ணயம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் இ.க.நி 39 ஐப் பின்பற்றுகின்றது. இந்நிர்ணயம், முக்கிய தீர்மானங்களை வேண்டுகின்றது. இத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது முகாமைத்துவம், ஏனைய காரணிகளுக்கு மத்தியில் காலம் மற்றும் முதலீடு ஒன்றின் நியாயப் பெறுமதி அதன் கிராயத்தினை விட குறைவாக இருக்கின்றது என்ற அடிப்படை அத்துடன் கைத்தொழில் மற்றும் துறைச் செயலாற்றுகை, தொழில்நுட்பங்களில் மாற்றங்கள் மற்றும் தொழிற்பாட்டு, நிதியளித்தல் காசுப் பாய்ச்சல்கள் போன்ற காரணிகள் உள்ளடங்களாக முதலீட்டாளருக்கான நிதியில் ஆரோக்கியம் மற்றும் குறியகால வாய்ப்பு வளங்களை மதிப்பீடு செய்கின்றது.

## 2.3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

### 2.3.1 வெளிாட்டு நாணய மாற்றுதல்கள்

நிதியியல் கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மற்றும் எடுத்துரைப்பு நாணயமான இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் திகதியில் தொழிற்படுகின்ற நாணய மாற்று வீதத்தில் ஆரம்பத்தில் பதியப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புகளும் ஐந்தொகை திகதியன்று நிலவிய தொழிற்படு நாணய விகிதத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுக் கிரய நியமங்களுக்கு அமைவாக அளவீடு செய்யப்பட்ட நிதியமல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல் வாங்கல் திகதியில் உள்ளவாறான நாணய மாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்ட்டுள்ளன. வெளிநாட்டு நாணயமொன்றில் உள்ள நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதியமல்லாத பொருட்கள் நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறான நாணய மாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 2.3.2 வரிவிதிப்பு

**நடைமுறை வரி**

நடைமுறை மற்றும் முந்திய காலங்களுக்கான வருமானவரி சொத்துக்களும் பொறுப்புகளும் வரி விதிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகளில் அளவீடு செய்யப்பட்டுள்ளது. தொகையினை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் ஐந்தொகை திகதியன்று சட்டமாக்கப்பட்ட அல்லது முக்கிய மாற்றங்களுடன் சட்டமாக்கப்பட்டவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடுகள் நிதியியல் கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டுள்ளதுடன் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதனோடிணைந்த திருத்தங்களுக்களுக்கமைவாக கணக்கிடப்பட்டுள்ளன. எனினும், நடைமுறை ஆண்டின்போது கூட்டுத்தாபனம் நட்டமடைகின்ற நிலையில் காணப்பட்டதால் நடைமுறை ஆண்டில் வரிப்பொறுப்பு தோன்றவில்லை அத்துடன் 2011/2012 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் ஐந்து வருட வரி விடுமுறை வழங்கப்பட்டது.

**பிற்போடப்பட்ட வரிவிதிப்பு**

சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கத்திற்காக அவை கொண்டுள்ள தொகைகளுக்கான வரி அடிப்படைகளில் ஐந்தொகை திகதியன்றுள்ளவாறு தற்காலிக வேறுபாடுகள் மீதான பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமானவரிச் பொறுப்புக்கள், கொடுக்கல் வாங்களின் போது கணக்கீட்டு இலாபத்தினை அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கமானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கெதிராக கிடைக்கத்தக்க வரி விதிக்க கூடியதாக நிகழக்கூடியதானவை என்ற ரீதியில் பயன்படுத்தப்படாத வரிச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் முன் கொண்டு செல்லப்பட்ட அத்துடன் வியாபார இணைப்பொன்றானதல்லாத மற்றும் கொடுக்கல் வாங்களின் போது கணக்கீட்டு இலாபத்தினையோ அல்லது வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் ஆகிய இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றாக ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புறுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் உள்ளவை தவிர பயன்படுத்தக் கூடிய முன் கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தாத வரிச்சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தாத வரி இழப்புகளின் அனைத்து கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் கொண்டுள்ள தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியன்றும் மீளாயப்பட்டு பயன்படுத்தப்படுவதற்கு பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தினை முழுமையான அல்லது பகுதியாக அனுமதிப்பதற்கு போதிய வரிவிதிப்பு இலாபம் கிடைக்கப்பெறும் என்பது இனிமேலும் சாத்தியமற்றது என்ற ரீதியில் குறைக்கப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஐந்தொகைத் திகதியன்று உள்ளவாறு சட்டமாக்கப்பட்டட அல்லது தொடர்ந்த முக்கிய மாற்றங்களுடன் சட்டமாக்கப்பட்ட வரி விகிதங்கள் (மற்றும் வரிச்சட்டம்) இனை அடிப்படையாக கொண்டு சொத்து தேறிய அல்லது பொறுப்பு கொடுத்து தீர்க்கப்பட்ட போதான ஆண்டிற்கு பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி விகிதத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்புரவில் நேரடியாக அடையாளப்படுத்தப்பட்ட பிற்போடப்பட்ட வருமான வரியுடன் தொடர்புடைய விடயங்கள் வருமானக் கூற்றில் அன்றி ஒப்புரவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**விற்பனை வரி**

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் என்பன விற்பனைகள் வரி உள்ளடக்கப்பட்டுள்ளது எனக்குறிப்பிடப்பட்ட பொருத்தமான, கிடைக்கப்பெறத்தக்க மற்றும் செலுத்தப்படத்தக்கவையாக சொத்துச் செலவு பகுதியொன்றாக அல்லது செலவு வகையொன்றின் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட விற்பனைகள் வரியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சொத்துக்களின் அல்லது சேவையின் கொள்வனவொன்றின் மீது உறபட்ட விற்பனைகள் வரி வரிவிதிப்பு அதிகார சபைகளிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ள முடியாதவை தவிர விற்பனைகள் வரியினுள் நிகரத் தொகை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வரிவிதிப்பு அதிகாரசபைகளுடன் தொடர்புடைய மீளப் பெறத்தக்க அல்லது செலுத்தப்படத்தக்க விற்பனைகள் வரித் தொகை ஐந்தொகையில் மீளப்பெறத்தக்க அல்லது செலுத்தப்படத்தக்கவைகளின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2.3.3 கடன்பெறுதல் செலவுகள்

சொத்துகள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயார்படுத்துவதற்கு கணிசமான காலப்பகுதியின் அவசியமாக எடுக்கின்ற சொத்துகளாக தகைமை பெறுகின்ற சொத்துகளை பெற்றுக் கொள்வதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது உற்பத்தி செய்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க பொது அல்லது குறித்த கடன் பெறுதல் செலவுகள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனை செய்வதற்கு சொத்துக்கள் கணிசமான அளவு தயாராக உள்ள அத்தகைய காலம் வரை அச்சொத்துக்களின் செலவுகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளன.

## 2.3.4. பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள், பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதல் மற்றும் மெதுவாக அசையும் பொருட்கள் என்பவற்றிற்கான போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதன் பின்னர் குறைந்த விலையில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நிகர தேறத்தக்க பெறுமதியானது விற்பனை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பனவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டுப் பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய விலையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய அமைவிடத்திற்கும் நிலைக்கும் பதிவேட்டுப் பொருட்களை கொண்டு வருவதற்கு உறப்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது:

| | |
|---|---|
| மூலப் பொருட்கள் | - முதலில் உள்வந்தது முதலில் வெளிச் செல்லல் அடிப்படையில் கொள்வவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள்<br>அ) சுத்திதிகரிக்கப்பட்ட உற்பத்திகள்<br><br>ஆ) இறக்குமதிகள் | - நேரடி பொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்ளனவு அடிப்படையினை கொண்டு தயாரித்தல் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் கடன் பெறல் செலவுகள் உள்ளடங்காது.<br>- முதலில் உள்வந்தது முதலில் வெளிச் செல்லல் அடிப்டையில் கொள்வனவுச் செலவில் |
| அ)சுத்திகரிப்பட்ட உற்பத்திகள்<br><br>ஆ) இறக்குமதிகள் | - நேரடிபொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்ளனவு அடிப்படையான கொண்டு தயாரித்தல் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் இரவல் கொடுத்தல் செலவுகள் உள்ளடக்காது.<br>- முதலில் உள்வந்தது முதலில் வெளிச் செல்லல் அடிப்டையில் கொள்வனவுச் செலவில் |
| ஏனைய முடிவுப் பொருட்கள் | - நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வளவுச் செலவில் |
| நுகரத் தக்கவையும் உதிரிப் பாகங்களும் | - நிறையிடப்பட்ட சரசரி அடிப்படையில் கொள்வளவுச் செலவில் |

### 2.3.5 வணிக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை

வணிக கிடைக்கப்பெறத்தக்கவைகள், எரிபொருள் விற்பனைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கத்தக்க நிலுவைத் தொகைகளாகும். வணிக கிடைக்கப் பெறத்தக்கவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அடையாளப்படுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து செயற்பாட்டு வட்டி முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் கழிவில் அளவிடப்பட்டது.

தொடர்புடைய திறந்தவர்களிடமிருந்தான ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகளும் நிலுவைகளும் பெறுமதிக் கழிவிற்கான ஏற்பாட்டினை கழித்து கிரயத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.6 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, கேள்வி கையிருப்புக்களும் குறுகிய கால உயர் திரவத் தன்மை கொண்ட முதலீடுகளும் பெறுமதி மாற்றத்தில் முக்கியமற்ற ஆபத்துக்குட்பட்ட அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றக் கூடியன என்பனவாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக கையிலுள்ள காசு, நிகர வங்கி மேலதிக பற்று நிலுவைகளின் வங்கிகளில் உள்ள வைப்புகளை காசு மற்றும் காசுக்கு சமமானவை உள்ளடங்குகின்றன.

குறுகிய முதிர்வுகளுடனான மதலீடு அதாவது பெற்றுக்கொள்ளல் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதனை விடக் குறைந்த காலம் கொண்டவையும் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்பட்டுள்ளன.

### 2.3.7 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

பொறித் தொகுதியும் உபகரணங்களும் நாளாந்த சேவைகள் செலவு உள்ளடங்காது பெறுமதியின் ஒன்று சேர்ந்த தேய்மானம் மற்றும் குறைபாடுகள் கழிக்கப்படட விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய விலைகளானது அடையாளப்படுத்தல் மூலப்பிரமானங்களுக்கு அமைவானதாக தொகை இருப்பின் பொறித்தொகுதி மற்றும் உபகரணப் பாகங்களை மாற்றீடு செய்யும் போது உறப்பட்ட செலவினையும் உள்ளடக்குகின்றது.
காணியும் கட்டிடங்களும் கட்டிடங்கள் மீதான தேய்மானம் கழித்த விலைவில் மதிப்பீடு செய்ப்பட்டுள்ளன.

சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைமைகள் ஒவ்வொரு நிதி ஆண்டும் பொருத்தமானதாக மீளாயப்பட்டு சரி செய்யப்படுகின்றது.

### 2.3.8 அளவீடு

சொத்தொன்றாக அடையாளப்படுத்துவதற்கான தகைமை பெறுகின்ற ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் வகையொன்று சொத்தினை அல்லது நிர்மாணத்தினை அல்லது பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க கொள்வனவுச் செலவில் அதனோடிணைந்த இடைநேர் விளைவான, ஏதேனும் செலவுகளுடன் சேர்த்து ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் செலவு, பொருட்களுக்கான செலவு, நேரடியான ஊழியம், அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டு நிலைக்கு சொத்தினை கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏனைய ஏதேனும் செலவுகள் மற்றும் பாகங்களைப் பிரித்தல் மற்றும் அகற்றுதல் அத்துடன் அவை அமையப்பெற்றுள்ள இடத்திற்கு மீள்பொருத்துவதற்கான செலவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### 2.3.9 செலவு மாதிரி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு செலவு மாதிரியினை பிரயோகிக்கின்றதுடன் ஒன்று திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் ஒன்று திரட்டிய குறைபாட்டு இழப்புகளை கழித்து, அவற்றுடனான ஏதேனும் இடைநேர் விளைவான செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவில் பதிவு செய்கின்றது.

### 2.3.10 தொடர் செலவுகள்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண பொருளொன்றின் பாகம் மாற்றுதல் செலவு அப்பாகத்தினுள் அமையப் பெற்ற எதிர்கால நலன்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுள் செல்லும் என்ற நிகழ்வுத் தன்மை இருக்குமிடத்தும் அதன் செலவு நம்பத்தகுந்தவாறு அளவிடக் கூடியதாகவிருப்பின் பொருள் கொண்டுள்ள தொகை அடையாளப்படுத்தப்படுகின்றது.

### 2.3.11 மீளமைத்தல் செலவு

மீளமைத்தல் அல்லது எதிர்கால பொருளாதார நலன்களை பேணுதல் நோக்கத்திற்காக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகளுக்காக உறப்பட்ட செலவு உறப்பட்டவாறு வருமானக் கூற்றில் அறவிடப்பட்டுள்ளது.

### 2.3.12 அடையாளப்படுத்தாது விடல்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணமொன்று கொண்டுள்ள தொகை பயன்பாட்டிலிருந்து அகற்றுதல் அல்லது அதன் பயன்பாட்டில் அல்லது அகற்றுதலிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் இல்லாமையின் பேரில் அடையாளப்படுத்தாது விடப்படுகின்றது ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணமொன்றின் அடையாளப்படுத்தாமையிலிருந்து தோன்றுகின்ற பெறுகை அல்லது இழப்பு பொருள் அடையாளப்படுத்தாது விடப்பட்ட போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.3.13 பெறுமானத் தேய்வு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது வேறுபட்ட வகையான சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்விற்கு பொருத்தமான காலப்பகுதியின் மீது நேர்நிலை அடிப்படையில் பெறுமானத் தேய்வு வழங்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மான ஏற்பாடுகள் விகிதமுறை அடிப்படையினைப் பயன்படுத்தி ஆக்கப்பட்டுள்ளன.
தேய்மானம் பயன்பாட்டு ஆயுளை மீது நேர் நிரை அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.
தேய்மான விகிதம் பின்வருமாறு:

| சொத்துகளின் வகை | | வீதம் |
|---|---|---|
| நிரந்தரக் காணி | | இல்லை |
| கட்டிடங்கள் | | 2.5 |
| புதிய தலைமை அலுவலக கட்டிடம் | | 2 |
| சுத்திகரிப்பு பிரிவு தாங்கிகளும் குழாய்களும் | | 2.5 |
| சுத்திகரிப்பு பிரிவு பொறித் தொகுதியும் இயந்திரங்களும் | | 10 |
| ஏனைய அமைவிடத் தாங்கிகள் | | 2.5 அல்லது 5 |
| ஏனைய அமைவிட குழாய்கள் | | 10 அல்லது 20 |
| பொறித் தொகுதியும் இயந்திரமும் | | 10 அல்லது 20 |
| பவுசர்கள், தாங்கி லொறிகள் | | 20 |
| வேன்களும் வாகனங்களும் | | 25 |
| தளபாடங்கள் பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 98/12/31 வரை | | 100 |
| தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 99/12/31 இலிருந்து | | 33 1/3 |
| எஸ்பீஎம் வசதி – | தாங்கி களம் | 2.5 |
| | - குழாய்கள் | 5 |
| | - மிதவை | 10 |

### 2.3.14 முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி, செலவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை கட்டிட நிர்மாணம், பிரதான பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் முறைமை வடிவமைப்பு, முதலீடாக்ககளில் காத்திருப்பவற்றில் நேரடியாக உறப்பட்ட மூலதனத் தன்மையிலான செலவுகளாகும்.

### 2.3.15 நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிக்கழிவு

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அவை கொண்டுள்ள தொகை அறவிடப்படமுடியாது என்று குறித்துக் காட்டப்படும் சந்தர்ப்பத்தில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படும் போது பெறுமதிக்கழிவுக்காக மீளாயப்படுகின்றன. பெறுமதிக் கழிவுக்கான இழப்பொன்று, சொத்துகள் கொண்டு தொகை அதன் அறவிடப்படுகின்ற தொகை விஞ்சுகின்ற தொகைக்காக அடையாளப்படுத்தப்படுகின்றது. அறவிடப்பட்ட தொகையானது விற்பனை செய்வதற்கும் பயன்பாட்டில் உள்ள பெறுமதிக்குமான செலவினை கழித்து சொத்தின் உயர்வான நியாயப் பெறுமதியாகும்.

பெறுமதிக் கழிவினை மதிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்கள் வேறாக இனங்காணதக்க காசுப்பாச்சல்களாக (காசு ஈட்டும் அலகுகள்) இருக்கின்றன என்ற மட்டங்களில் சொத்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெறுமதிக்கழிவைக் கொண்ட நிதியல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதிக்கும் பெறுமதிக்கழிவில் சாத்தியமாக பின்நோக்கி செல்லல் மீளாயப்படுகின்றன.

### 2.3.16 கடன்பெறும் செலவுகள்

கடன் பெறுதல் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (உறப்பட்ட தேறிய கொடுக்கல் வாங்கல் செலவு) கடன் பெறுதல்கள், அதனைத் தொடர்ந்து செலவுகள் கழிப்பில் இடம்பெற்றுள்ளன: விற்று வரவுகள் (தேறிய கொடுக்கல் வாங்கல் செலவுகள்) மற்றும் மீட்டல் பெறுமதி என்பவற்றுக்கு இடையில் உள்ள ஏதேனும் வேறுபாடு செயற்பாட்டில் உள்ள வட்டி முறையினைப் பயன்படுத்தி கடன் பெறுகின்ற காலப்பகுதிக்கு விரிவான வருமானக் கூற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடன் வசதியொன்றினை தாபித்தல் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணம், சில அல்லது அனைத்து வசதிகளும் பெற்றுக் கொள்ளப்படும் என்ற நிகழக்கூடிய தன்மையில் உள்ளது என்ற ரீதியில் கடன்களின் கொடுக்கல் வாங்கல் செலவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடயத்தில், கட்டணம், மீளப் பெறல் நிகழும் வரை பிற்போடப்படுகின்றது. சில அல்லது அனைத்து கடன் வசதிகளும் மீளப்பெறும் என்ற நிகழ்கூடிய தன்மை இருக்கின்றது என்ற சான்று இல்லை என்ற ரீதியில் கட்டணம் திரவத்தன்மை சேவைகளுக்கான முற்கொடுப்பனவொன்றாக மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்புடைய கடன் வசதிக் காலத்தின் மீது கடன் கழிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 2.3.17 முதலீடுகள்

#### 2.3.17.1 துணை நிறுவனங்களில் முதலீடு

துணை நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் திரட்டிய மற்றும் தனியான நிதியின் கூற்றுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைவாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகளில் கணக்கீட்டு செலவு முறையின்கீழ் கணிக்கப்படுகின்றன.

அதற்கமைய, துணை நிறுவனங்களிலான முதலீடுகள் ஏதேனும் குறைபாட்டு இழப்புகள் இருப்பின் கழித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.3.18 முதலீட்டு ஆதனங்கள்

#### 2.3.18.1 அடையாளப்படுத்துதல் அடிப்படை

வாடகை உழைக்கின்ற அல்லது மூலதன அதிகரித்தலுக்கான அல்லது இரண்டுக்குமான அத்துடன் முதலீட்டு ஆதனங்களுடன் இணையப்பெற்ற எதிர்கால பொருளாதார நலன்கள் ஆனால் சாதாரண வியாபாரத்தில் விற்பனைக்காக அல்லாத ஆதனம் முதலீட்டு ஆதனமாகும்.

#### 2.3.18.2 அளவீடு

முதலீட்டு ஆதனம் நிதியியல் கூற்றுக்களில் செலவு முறையின் கீழ் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சொத்தொன்றாக அடையாளப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆதனமானது ஒன்று திரட்டிய தேய்மானம் மற்றும் குறைபாட்டு இழப்புகளை கழித்து செலவில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

#### 2.3.18.3 தேய்மானம்

தேய்மானமானது கொள்வனவுத் திகதியிலிருந்து பயன்பாட்டில் இருந்து அகற்றும் திகதி வரை சொத்து வகுப்புக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் மீது நேர் நிரை அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

#### 2.3.18.4. அடையாளப்படுத்தாது விடல்

முதலீட்டு ஆதனங்கள், எதிர்கால நலன்கள் எதிர்பார்க்கப்படாமையினால் அகற்றப்பட்டு அல்லது நிரந்தமாக மீளப் பெறப்படும் போது அடையாளப்படுத்தப்படாது விடப்பட்டுள்ளது. பயன்பாட்டில் மாற்றங்கள் உள்ளபோது மாத்திரம் முதலீட்டு ஆதனங்களுக்கு அல்லது ஆதனங்களிலிருந்து இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

## 3. ஏற்பாடுகளும் பொறுப்புகளும்

### 3.1 ஏற்பாடுகள்

கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை தன்னகத்தே கொண்ட வள வெளிப்பாச்சல்லொன்று தேவைப்படும் என்றும் கடப்பாடுகளின் தொகைகளுக்கு நம்பத்தகுந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட முடியும் என்றும் நிகழத்தக்க கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக கூட்டுத்தாபனம் தற்போது கடப்பாடு (சட்ட அல்லது பயன்மிகு) கொண்டுள்ளபோது ஏற்பாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சில அல்லது அனைத்து ஏற்பாடுகளும் மீள் நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கும் போது நிரப்பலானது அந்த மீள் நிரப்பல் அநேகமாக நிச்சயமாக இருப்பின் மாத்திரம் வேறான சொத்தொன்றாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய செலவு ஏதேனும் தேறிய மீள் நிரப்பலுக்காக வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பணப் பெறுமதின் காலத்தாக்கம் முக்கியமானதாக இருப்பின் பணப் பெறுமதிக் காலத்தில் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற வரி விகிதத்திற்கு முந்திய எதிர்கால காசுப்பாய்ச்சலில் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் பொருத்தமாயின், பொறுப்பிற்கான ஆபத்துக்களில் விலைக்கழிவு மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. விலைக் கழிவு பயன் படுத்தப்பட்டபோது காலப் பெயர்ச்சியின் காரணத்தினால் ஏற்பாடுகளில் உள்ள அதிகரிப்பு வட்டிச் செலவுவொன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 பணிக்கொடை ஏற்பாடு

அனைத்து ஊழியர்களுக்குமென சேவையின் முதல் வருடத்திலிருன்து ஓய்வுப் பணிக் கொடைககளுக்காக நிதியியல் கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்படுகின்றது. பணிக் கொடையானது அறிக்கையிடும் கால இறுதியில் உள்ள கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை கணக்கீட்டு நியமம் - 19 இல் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி ஓய்வு நலன்களைக் கணித்துள்ளது. வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி, இலங்கையில் நிறுவன முறிகளுக்கான மதிப்பிடப்பட்ட ஆழ்ந்த சந்தையொன்று இல்லாமையின்போது அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால

காசுப்பாய்ச்சல்களை தள்ளுபடி செய்வதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. இடம்பெற்ற சரிப்படுத்தல்களில் இருந்து தேன்றுகின்ற காப்பீட்டுக் கணிப்பு பெறுகை/இழப்பு அத்துடன் காப்பீட்டுக் கணிப்பு ஊகங்களில் உள்ள மாற்றங்கள் அவை தோன்றுகின்ற காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானத்தில் அறவிடப்பட்டுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன. கடந்த சேவைகள் கிரயங்கள் விரிவான வருமானக் கூற்றில் உடனடியாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

இடம்பெற்ற சரிப்படுத்தல்களில் இருந்து தேன்றுகின்ற காப்பீட்டுக் கணிப்பு பெறுகை/இழப்பு அத்துடன் காப்பீட்டுக் கணிப்பு ஊகங்களில் உள்ள மாற்றங்கள் அவை தோன்றுகின்ற காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானத்தில் அறவிடப்பட்டுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன. கடந்த சேவைகள் கிரயங்கள் விரிவான வருமானக் கூற்றில் உடனடியாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

### 3.3 வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழிய சேமலாப நிதியம் மற்றும் ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதியம்

தொடர்புடைய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக ஊழியர்கள் ஊழிய சேமலாப மற்றும் ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரித்துடையவராவர். கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் மொத்த வேதனத்தில் முறையே 15% மற்றும் 3% இனை ஊழிய சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

### 3.4 மூலதன ஒதுக்கு

அரசாங்க திரட்டு நிதியத்தில் இருந்து கிடைக்கப்பட்ட பெற்ற குறித்துரைத்த தொகைகள் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பின் உரிமையாளரின் விநியோகிக்கப்பட்ட மூலதனத்தை இறுதியாக தோற்றுவிக்கும் மீள்கட்டமைக்கும் விற்பனை விற்று வரவுகளின் தேறிய பெறுமதி மூலதன ஒதுக்குயொன்றுக்கு வரவுவைக்கப்பட்டுள்ளது.

### 3.5 காப்புறுதி ஒதுக்கு

இடமாற்றின் போது மூன்றாம் திறத்தவரொருவருடன் காப்புறுதி செய்யப்படாத இறக்குமதிகள் மீதான உண்மைக் காப்புறுதிச் செலவுக்கு சமமான தொகையொன்று காப்புறுதி ஒதுக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 3.6 வர்த்தகரீதியாக கொடுப்பனவு செய்யத்தக்கவை

வணிகரீதியான கொடுப்பனவு செய்யப்படதக்கவை, சாதாரண வியாபார நடவடிக்கைகளில் கூட்டுத்தாபனத்தின் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடுகளாகும். கொடுப்பனவு செய்யத்தக்கவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அடையாளப்படுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து பெறுமதி கழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

### 3.7 நிதியியல் சாதனங்கள்

கூட்டுத்தாபனம், சாதனமொன்றின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான திறந்தவர் ஒருவராக உருவாகும் போது நிதிசொத்துகளும் பொறுப்புகளும் அடையாளப்படுத்தப்படுகின்றன. சொத்துகள் காலவதியாவதிலிருந்து அல்லது இடமாற்றப்பட்டத்திலிருந்து காசுப்பாய்ச்சல் கிடைப்பதற்கான உரிமையின்போதும் அத்துடன் கூட்டுத்தாபனம் அனைத்து உரிமைத்துவ இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமான அளவு இடமாற்றி உள்ள போதும் நிதியியல் சொத்துகள் அடையாளப்படுத்தப்படாது விடப்படுகின்றன. ஒப்பபந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளபோது, இரத்துச் செய்யப்பட்டுள்ளபோது அல்லது காலவதியாகும்போது நிதியியல் பொறுப்புக்கள் அடையாளப்படுத்தாது விடப்படுகின்றன.

ஆரம்ப அடையாளப்படுத்தலில், பின்வரும் வகைகளில் கூட்டுத்தாபனம் அதன் நிதியியல் சாதனங்களை வகைப்படுத்துகின்றது.

**(i) விற்பனை முதலிடுகளுக்காக கிடைக்கப்பெறுபவை**

விற்பனை முதலீடுகளுக்காக கிடைக்கப்பெறுபவை வகுப்பில் பெயர் குறிக்கப்பட்டவையோ அன்றில் ஏதேனும் வேறு வகுப்பில் வகைப்படுத்தப்படாதவையாக இருக்கின்ற பெறுமதி வடிவமற்ற சாதனங்களாகும். கூட்டுத்தாபனத்தின் விற்பனை சொத்துகளுக்காக கிடைக்கப்பெறுகின்றவை ஒப்பரவு பிணைகளில் உள்ள முதலீடுகள் (பட்டியல் இடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத ஆகிய இரண்டும்) காசுக்கு சமமானவைகளாக தகைமை பெறுப்பவை தவிர்ந்தவற்றை உள்ளடக்கின்றது.

**(ii) கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும்**

கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும், செயற்பாடுடைய சந்தையில் கோரப்படாதவையாகவுள்ள நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனான வடிவமற்ற நிதியில் சொத்துகளாகும். கூட்டுத்தாபனத்தின் கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும், வணிகரீதியான கிடைக்கப்படத்தக்கவை, பதவியினர் கடன்கள் மற்றும் காசுக்கு சமமானவை ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், நடைமுறை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் இரண்டிலும் உள்ளக்கப்பட்டுள்ளன. கடன்களும் கிடைக்கப்பெற்றத்தக்கவையும் நியாயப் பெறுமதிக்கு தள்ளுபடியொன்றினைக் கழிப்பதற்கு முக்கியம் உள்ள போது கழித்து மீளாயப்படுத்தற்கு எதிர் பார்க்கப்பட்ட தொகையில் ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றன அதனைத் தொடர்ந்து, கடன்களும் கிடைக்கப் பெறத் தக்கவையும், பெறுமதிக் கழிப்பிற்கான ஏற்பாடொன்றினைக் கழித்த செயற்பாட்டு வட்டி முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக்கழிவில் அளவிடப்படுகின்றன.

**(iii) பெறுமதி கழிக்கப்பட்ட கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள்**

பெறமதி கழிக்கப்பட்ட கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள், வணிக கொடுப்பனவு செய்யப்படத்தக்கவை, வங்கிக் கடன்கள் அத்துடன் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்குகின்றன. வணிகரீதியான கொடுப்பனவு செய்யத்தக்கவை, நியாயப் பெறுமதிக்கு கொடுப்பனவு செய்யத்தக்கவையின் தள்ளுபடியொன்றினை கழிப்பதற்கு முக்கியம் ஏற்படும் போது கழித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தேவைப்பட்ட தொகையில் ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றன (அடையாளப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்காக 2.3.5 மற்றும் 4.6 ஐப் பார்க்க).

**நிதிச் சொத்துக்கள் பெறுமதிக் கழிவு**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், நிதிச் சொத்தொன்று பெறுமதி இழந்துள்ளது என்ற புரவய சான்று உள்ளதா என கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. பெறுமதி கழிவு இழப்பொன்றின் புறவயச் சான்றிருப்பின் நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பிரமாணம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

(i) கடப்பாடுடையவரின் முக்கிய நிதியியல் கஸ்டநிலை

(ii) கோட்பாட்டு கொடுப்பனவு நலன்களில் கடமைத்தவறுதல்

(iii) கடன் பெறுப்பவர் வங்குரோத்து அல்லது ஏனைய நிதியியல் மீள் ஒழுங்கமைத்தலுக்கு உட்படுவார் என்ற நிகழும் தன்மை உருவாதல்

ஒப்புரவு பிணைகளுக்காக பிணையின் கிரயத்துக்கு கீழான அதன் நியாயப் பெறுமதியில் முக்கியமானதொரு அல்லது நீடித்த வீழ்ச்சி, சொத்துக்கள் மதிப்புக் குறைந்துள்ளது என்பதற்கான சான்றாகும். அத்தகைய சான்றுகள் இருக்குமாயின், கூட்டுத்தாபனம் மதிப்பு குறைந்த இழப்புக்களை பின்வருமாறு அடையாளப்படுத்துகின்றது.

(i) பெறுமதிகழித்த கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட நிதிச் சொத்துக்கள்: இழப்பு, கடன் அல்லது கிடைக்கப்பெறத்தக்கவையின் பெறுமதி கழிக்கப்பட்ட செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான சாதனத்தின் மூல செயற்பாட்டு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி தள்ளுபடி செய்யப்பட வேறுபடாகும். சொத்து கொண்டுள்ள தொகை கொடுப்பனவு

கணக்கொன்றினை பயன்படுத்துவதன் ஊடாக நேரடியாகவோ அல்லது நேரடியின்றியோ இத்தொகையினால் குறைக்கப்பட்டதாகும்.

(ii) விற்பனை நிதியியல் சொத்துக்காக கிடைக்கப்பெறுபவை: மதிப்புக்குறைத்தல் இழப்பு, சொத்தொன்றின் மூல செலவு மற்றும் விரிவான வருமானக் கூற்றில் ஏதேனும் மதிப்புக் குறைப்பு இழப்பு முன்னர் அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் அதனை கழித்து அளவீட்டுத் திகதியில் அதன் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடொன்றாகும். இத்தொகை, தேறிய வருமானத்திற்கு மீள்வகைப்படுத்தப் பட்டுள்ள ஒன்று திரட்டிய ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள இழப்பினை பிரதி நிதித்துவப் படுத்துகின்றது.

பெறுமதி கழிக்கப்பட்ட செலவில் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் சொத்துகள் மீதான மதிப்புக் குறைப்பு இழப்புகள், இழப்புக்களின் தொகை குறைவடையுமாயின் அதனைத் தொடரும் காலங்களில் நேர்மாறாக்கப்படுகின்றன. அத்துடன் குறைதல், மதிப்புக் குறைதல் அடையாளப்படுத்தப்பட்டதன் பின்னர் இடம் பெறுகின்ற நிகழ்வொன்றுக்கு பொருட்டாக தொடர்புபடுத்தக்கூடியதாகவிருக்கும்.

விற்பனை ஒப்புரவு சாதனங்களுக்காக கிடைக்கப்பெறத்தக்கவைக்கானவை மீதான மதிப்புக் குறைத்தல் இழப்புகள் நேரமாறாக்கப்படவில்லை.

## 4. வருமானக் கூற்று

### 4.1 வருமானம் அடையாளப்படுத்தல்

வருமானம், ஒப்புரவு பங்காளிகளிலிருந்தான பங்களிப்பு தொடர்புபடுகின்ற அதிகரிப்புகள் தவிர அவ் உட்பாய்ச்சல்கள் ஒப்புரவில் விளைவினை ஏற்படுத்தும் போது நிறுவனமொன்றின் சாதரண செயற்பாடுகளில் தோன்றுகின்ற காலத்தின் போதான பொருளாதார நலன்களின் மொத்த உட்பாய்ச்சலாகும்.

வருமானம், கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்கப்பெறத்தக்க தேறிய விற்பனை விலைக்கழிவுகள் மற்றும் வியாபார வரிகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்டுள்ளது. வருமான அடையாளப்படுத்தல் நோக்கத்திற்காக பின்வரும் குறித்துரைத்த மூலப்பிரமாணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4.2 பொருட்கள் விற்பனை

பொருட்கள் விற்பனையிலிருந்தான வருவாய் வழமையாக பொருட்கள் அனுப்பப்பட்டதன் மீது முக்கிய மற்றும் வெகுமதிகள் பொருட்களின் உடமை கொள்வனவாளர்களுக்கு மாற்றப்பட்ட போது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 4.3 வட்டி வருமானமும் செலவுகளும்

வட்டிச் செலவுகள் மற்றும் வருமானம் என்பன ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன

### 4.4 பங்கு இலாபம்

பங்கிலாப வருமானம், ஏற்படுத்தப்பட்ட கொடுப்பனவினை பெறுவதற்கான பங்குதாரர்களின் உரிமையின் போது அடையாளப்பபடுத்தப்பட்டது.

## 4.5 வாடகை வருமானம்

வாடகைக் காலத்தின் மீதான நேர்-நிரை அடிப்படையொன்றில் வாடகை வருமானம் கணக்கிற் கொள்ளப்பட்டுள்ளது.

## 4.6 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனையிலிருந்து இலாபம்/(நட்டம்) மற்றும் ஏனைய வருமானம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனையிலிருந்து இலாபம்/(நட்டம்) விற்பனை நிகழ்ந்த காலப்பகுதியில் அடையாளப்படுத்தப்பட்டு ஏனைய வருமானமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 4.7 முதலீட்டு பிணைகளில் இருந்து தோன்றுகின்ற வருவாய்கள் அல்லது நட்டங்கள்

ஒப்புரவுப் பங்குகள் மற்றும் நிதியியல் சாதனங்களின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற வருவாய்கள் அல்லது நட்டங்கள், கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த திகதியில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4.8 தொழிற்படுத்தல் செலவுகள்

கொடுப்பனவு செய்யத்தக்க அனைத்து தொழிற்படுத்தல் செலவுகளும் அவை தொடர்புபட்ட காலப்பகுதிக்காக வருமானக் கூற்றில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுளளன.

## 5. வருநிகழ்வுப் பொறுப்புக்கள்/ செயற்பொறுப்புக்கள் மற்றும் வழக்காடல்

வருநிகழ்வுப் பொறுப்புக்கள் என்பது பொருளாதார நலன் மாற்றம் நிகழாத அல்லது நம்பத்தகுந்தவாறு அளவிட முடியாதுள்ள ஸ்திரமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்கால கடப்பாடுகள் மூலம் மாத்திரம் அவை நிலைத்திருத்தல் உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாகும். வருநிகழ்வுப் பொறுப்புகள் ஐந்தொகையில் அடையாளப்படுத்தப்படவில்லை ஆனால் அவை சேய்மையில் இல்லாதவிடத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நடைமுறை வழக்காடல்கள் பிரதானமாக நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக கடன்களை அறவிடும் நோக்குடன் செலுத்த தவறிய வாடிக்கையாளர்களுக்கெதிராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழக்கு தாக்கல் செய்யும் விடயங்களுடன் தொடர்புபடுகின்றது.

தொழில் நியாய சபைகளுக்கு முன் கொண்டு வரப்படுகின்ற பணியாள் பிணக்குகள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு, பாராளுமன்ற குறைகேள் அதிகாரி போன்ற ஏனைய முகவரகங்கள் முன்கொண்டு வரப்படும் பிணக்குகளை வழக்காடல்கள் உள்ளடக்குகின்றன. அநேகமான தொழிலாளர் பிணக்குகள் சமரசமாக தீர்க்கப்பட்டன அல்லது அநேகமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சாதகமாக தீர்மானிக்கப்பட்டன. ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படுத்தப்பட்டவைகளுக்கானவை தவிர, அவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஸ்திரத் தன்மை மீது முக்கிய தாக்கம் எதனையும் செலுத்தவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அபிப்பிராயம் கொண்டுள்ளதுடன் அதனால் தொடர்புபட்ட ஏற்பாடுகள் ஏதும் செய்யப்படவில்லை.

கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டவாறு வரியுடன் தொடர்புபட்ட கருமங்கள் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்று வழக்குகளை கோவைப்படுத்தியது.

**(i)** 997/98 வரி மதிப்பீட்டு ஆண்டுடன் தொடர்புடைய கருதப்பட்ட பங்கிலாப கருமங்கள் கருதப்பட்ட பங்கிலாப வரி கணிப்பு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் முடிவுறாதுள்ளது.
மீளாய்வுச் சபைத் தீர்மானமானது கூட்டுத்தாபனத்தின் பதியப்பட்ட இலாபத்தின் மீது கருதப்பட்ட பங்கிலாப வரி கணிக்கப்படல் வேண்டும் என்பதாக அமைந்திருந்தது.

மீளாய்வுச் சபையின் தீர்மானத்திற்கெதிராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேன்முறையீடு செய்தது.

(i) மீளாய்வுச் சபையினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழக்கொன்றை கோவைப்படுத்தியது. மீளாய்வுச் சபை தீர்மானம் ஏற்றுமதி விற்பனைகளுக்காக 1994.02.31 தொடக்கம் 1997.12.31 இல் முடிவுற்ற காலாண்டுகளுக்காக கப்பல் எரிபொருள் விற்பனைக்கு புரள்வு வரி பொறுப்புடையது என்பதாகவிருந்தது இது கருத்திற்கொள்ளப்பட முடியாதது.

(iii) 2007/08 ஆண்டிற்கான கருதப்பட்ட பங்கிலாப வரி கணித்தல் அடிப்படை தொடர்பில் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முன் மேன்முறையீடொன்று முடிவுறாதுள்ளது.

## 6. ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நலன்கள்

கீழே குறிப்பிடப்பட்டவை தவிர இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்துடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவரும் நேரடியான அல்லது நேரடியற்ற நலன்கள் கொண்டிருக்கவில்லை.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2/3 பங்கு நலன்களை கொண்டுள்ள இலங்கை பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் சபைக்கு பின்வரும் பணிப்பாளர்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நியமித்தது.

திரு. எல் ஈ சுசந்த சில்வா - பணிப்பாளர்
திரு. டி. சமன் குமார - பணிப்பாளர்
திருமதி. சந்தயா விஜேபண்டார - பணிப்பாளர்

திரு. எல் ஈ சுசந்த சில்வா, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவருமாவார்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் (CPSTL) இலங்கையினுள் திரவ பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் செய்தலில் ஈடுபடுகின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது செயல்விதத்திற்கான கட்டணமாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்திற்கு 2013 ஆண்டில் ரூபா 8.4 பில் தொகையினை கொடுப்பனவு செய்தது. 2011.04.29 ஆம் திகதிய பீஈடி 58 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக பணிப்பாளர் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்படுகின்றன.

## 7. ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல்கள்

(i) **ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி எதிர் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கொதிராக லண்டன் வார்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. லண்டன் வர்த்தக மேல் நீதிமன்றம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஐஎஸ்டிஏ பிரதம ஒப்பந்த நியதிகளுக்கிணங்க உடன்பட்ட மன்றாகவிருந்தது. 2008 டிசம்பர் 12 மற்றும் 2009 ஆகஸ்ட 14 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கு ஒன்பது கொடுப்பனவுகள் செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறுப்புடையது என ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி கோரியிருந்ததுடன் உயர் நீதி மன்றம், ஸ்ரோலிங் பவுன் 2,967,546 செலவுடன் சேர்த்து அ.டொ 166,476,281 தொகையினை 2011 ஆகஸ்ட் 08 அளவில் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கு கொடுப்பனவு செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தரவிட்டது. 2011 செப்டம்பர் மாதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்முறையீட்டு தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான

அடிப்படைகளைக் குறிப்பிட்டு மேன்முறையீட்டாளர் அறிவித்தலொன்றினை கோவைப்படுத்தியது. 2011 ஒக்டோபர் 31 அன்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கியின் மேன் முறையயீட்டுச் செலவுகளுக்காக ஸ்ரேலிங் பவுன் 500,000 தொகையினை பிணை வடிவத்தில் நிதிமன்றத்திற்கு கொடுப்பனவு செய்தது. 2012 ஜுலை 27 அன்று இங்கிலாந்து மேன்முறையீட்டு நீதிமன்றம் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கு சார்ப்பாக தீர்ப்பு வழங்கியது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தரணிகள் மற்றும் கௌரவ சட்டமா அதிபர் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் பேரில் இங்கிலாந்து உயர் நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பமொன்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சார்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

முழுமையான மற்றும் இறுதித் தீர்ப்பனவாக அ.டொ 60 மில் தொகையொன்றினை ஏற்றுக் கொள்வதனூடாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கொதிரான கோரிக்கையினை இணங்கித் தீர்ப்பதற்கு ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி தனது சட்டத்தரணிகள் ஊடாக சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளது எனவும் பிரித்தானிய உயர்நிதிமன்றத்திற்கான மேன்முறையீட்டின் பெறுபேறு நிச்சயமற்று இருப்பதனால் இவ் இணக்கத்திற்கு உடன்படுவது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அனகூலமிக்கதாக அமையலாம் எனவும் சட்டமா அதிபர் அபிப்பிராயப்படுவதாக கௌரவ சட்டமா அதிபர் தனது 2013.02.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்தார். இணக்க முன்மொழியினை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சபை தீர்மானித்ததுடன் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கியின் வரைவு ஒப்புதலுக்கு கைசாத்திடுவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 2013.04.04 அன்று அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டது. அமைச்சரவை தீர்மானித்தவாறு பிரேரனை உறுதி இணக்கத்திற்காக சட்டமா அதிபரின் இசைவும் பெறப்பட்டது.

திறைசேரியின் ஆலோசனையின் பேரில் 1971இன் 39 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச்சட்டத்தின் பிரிவு 24 (ii) (2) நியதியதிகளின் படி வரைவு இணக்க உறுதியின் கீழ் முழுமையான மற்றும் இறுதி தீர்ப்பனவாக ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கு கொடுப்பனவு செய்வதற்கு மக்கள் வங்கியிடமிருந்து அ.டொ. 60 மில்லின் கடன் பெறுவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபனத்தினால் அனுமதி பெறப்பட்டது.

2013.05.29 அன்று வரைவு இணக்க உறுதியினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கைச்சாத்திட்டது. 2013.06.03 அன்று உடன்பட்ட இணக்க உறுதியின் கீழ் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கிக்கு அ.டொ 60 மில் கொடுப்பனவு செய்யப்பட்டது.

## 8. ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

அவசியப்படுமிடத்து, ஐந்தொகை திகதிக்கு பிந்திய அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதியல் கூற்றுக்களில் ஏற்புடைய சரிப்படுத்தல்கள் / வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 9. பணிப்பாளர்களின் பொறுப்புடமைக் கூற்று

இந்நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலுக்கும் எடுத்துரைத்தலுக்குமான பொறுப்பு பணிப்பாளர்கள்சபையினை சார்ந்தது.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | இபெகூ 2013 ரூபா.மில் | இபெகூ 2012 ரூபா.மில் | குழு 2013 ரூபா.மில் | குழு 2012 ரூபா.மில் |
|---|---|---|---|---|
| **1. வருமானம்** | | | | |
| பெற்றோலிய உற்பத்திகள் விற்பனை | 490,381.492 | 512,910.308 | 490,528.617 | 512,910.308 |
| ஏனைய கட்டணங்களும் ஏனைய வருமானமும் | - | - | 437.618 | 1,636.254 |
| | **490,381.492** | **512,910.308** | **490,966.235** | **514,546.562** |
| | | | - | |
| **2. விற்பனைச் செலவுகள்** | | | | |
| மொத்த இலாப கூற்றுக்கமைய | 463,990.551 | 540,114.897 | 463,996.620 | 540,114.897 |
| தொழிற்பாட்டு இழப்பு ∴பெறுகை | 383.616 | 324.297 | 383.616 | 324.297 |
| பரிமாற்று வேறுபாடு மசகு மொத்த ) | 3,263.767 | 33,252.851 | 3,263.767 | 33,253.812 |
| நேரடிச் செலவுகளும் ேனையவையும் | | | 6,441.892 | 6,826.802 |
| | **467,637.933** | **573,692.045** | **474,085.894** | **580,519.808** |
| | | | - | |
| **3. ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்** | | | | |
| பங்கு இலாபம் வரமானம் | 0.007 | 0.003 | 0.007 | 0.003 |
| சில்லறை வருமானம் | 289.214 | 239.709 | 411.523 | 518.139 |
| வாடகை வருமானம் | 32.757 | 6.616 | 40.794 | 24.976 |
| | **321.978** | **246.328** | **452.324** | **543.118** |
| **3.1 முதலீட்டு ஆதனம் மீதான வருமானம்** | | | | |
| பிளர் வீதி, தேர்ஸ்டன் வீதி, நிரப்பு நிலைய வாடகை | **52.015** | **38.976** | **52.015** | **38.976** |
| **3.2 விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்** | | | | |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவு | 10,336.419 | 11,159.293 | 836.987 | 1,299.729 |
| விமானத்துறைச் செலவுகள் | 1,264.878 | 1,077.129 | 399.710 | 1,077.129 |
| தேய்மானம் | 363.955 | 396.674 | 363.955 | 396.674 |
| | **11,965.252** | **12,633.096** | **1,600.652** | **2,773.53** |
| **3.3 நிருவாகச் செலவுகள்** | | | | |
| நிருவாகச் செலவுகள் | 3,600.151 | 5,800.737 | 6,660.359 | 8,801.501 |
| | | | | - |
| | **3,600.151** | **5,800.737** | **6,660.359** | **8,801.501** |
| **3.4 நிதிச் செலவுகள்** | | | | |
| நீண்டகாலக் கடன்கள் மீதான வட்டி | | | | |
| வங்கி மேலதிகப் பற்று மீதான வட்டி | 82.416 | 188.769 | 82.416 | 188.769 |
| செலுத்தப்படத்தக்க வெளிநாட்டு உண்டியல் மீதான வட்டி | 37.898 | 0.35 | 37.898 | 0.35 |
| ஏனையவை | 18,419.534 | 18,170.557 | 18,419.534 | 18,170.557 |
| | | - | 0.000 | 0.522 |
| | **18,539.848** | **18,359.678** | **18,539.848** | **18,360.200** |
| **3.5 நிதி வருமானம்** | | | | |
| திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் | | | | |
| வ. வெ நா. குணக்கு மீதான வட்டி | 917.616 | 2,394.101 | 942.135 | 495.065 |
| கடன் விற்பனை பட்டடியல் மீதான வடடி | 18.707 | 19.044 | 18.707 | 19.044 |
| இமிச.∵.சுசஉ_∴. விமானத்துறை வாடிக்கையாளர் வட்டி | 65.944 | 187.411 | 65.944 | 1,957.950 |
| | 2,252.615 | 5,120.213 | 2,252.615 | 5,120.213 |
| | **3,254.882** | **7,720.769** | **3,279.401** | **7,592.272** |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| 4.3 சொத்துக்களும் முன்னெடுக்கப்படும் செயற்திட்ட மூலனமும் | இபெகூ | | குழு | |
|---|---|---|---|---|
| | **2013** | **2012** | **2013** | **2012** |
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| சுத்திகரிப்பு பிரிவு விரிவாக்க கருத்திட்டம் | 837.454 | 809.102 | 837.454 | 809.102 |
| கட்டிடங்கள் | 18.163 | 15.888 | 18.163 | 15.888 |
| பொறித் தொகுதியும் இயந்திரங்களும் | 2,197.081 | 15.004 | 2,197.081 | 15.004 |
| களஞ்சிய வசதி | 168.539 | 2,185.169 | 168.539 | 2,185.169 |
| எரிபொருள் நிலையங்கள் மீள்கட்டமைப்பு | 3.736 | 3.736 | 3.736 | 3.736 |
| ஏனையவை | 4,528.225 | 1,114.717 | 4,594.279 | 1,175.338 |
| | **7,753.198** | **4,143.615** | **7,819.252** | **4,204.237** |

| **4.4 தேறிய புத்தகப் பெறுமதி** | | | | |
|---|---|---|---|---|
| ஆதனம் பொறித் தொகுதி உபகரணங்கள் | 5,357.446 | 5,428.585 | 23,264.444 | 24,423.710 |
| சொத்துக்களும் முன்னெடுக்கப்படும் மூலதன கருத்திட்டங்களும் | 7,753.198 | 4,143.615 | 7,819.252 | 4,204.237 |
| **ஆதனம் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொண்டுள்ள பெறுமதி** | **13,110.644** | **9,572.201** | **31,083.696** | **28,627.947** |

**4.ஆதனம் பொறித் தொகுதி உபகரணங்கள்**

| | இ.பெ.கூ | | | | | | குழு |
|---|---|---|---|---|---|---|---|
| **செலவு** | *காணி கட்டிடங்கள்* | தெளிக்கப்பட் | *பொறித் தொகுதி உபகரணங்கள்* | *எஸ்பீஎம் வசதிகள்* | *மோட்டார் வாகனங்கள்* | *.ம், பொருத்துத்தல்கள் உபகரணங்கள் சொத்துக்கள்* | |
| | *ரூபா.மில்* | *ரூபா.மில்* | *ரூபா.மில்* | *ரூபா.மில்* | *ரூபா.மில்* | *ரூபா.மில்* | *ரூபா.மில்* |
| **2013.01.01 இல் மீதி** | 3,227.526 | 1.016 | 4,015.381 | 2,142.422 | 385.017 | 1,894.327 | 38,768.838 |
| சேர்தல்கள் | 27.641 | | 254.573 | | 98.638 | 34.104 | 465.373 |
| அகற்றல்கள் | | | (1.357) | | (4.986) | (1.992) | (34.855) |
| **2013.12.31 இல் மீதி** | **3,255.167** | **1.016** | **4,268.597** | **2,142.422** | **478.669** | **1,926.439** | **39,199.356** |
| **4.2 தேய்மானம்** | | | | | | | |
| 2013.01.01 இல் மீதி | 313.142 | 0.389 | 3,111.455 | 1,290.634 | 234.671 | 1,286.814 | 14,345.128 |
| ஆண்டுக்கான அறவீடு | 66.762 | 0.008 | 272.408 | | 22.663 | 124.252 | 1,624.638 |
| அகற்றல் | | | (1.357) | | (4.986) | (1.992) | (34.855) |
| **2013.12.31 இல் மீதி** | **379.904** | **0.397** | **3,382.506** | **1,290.634** | **252.348** | **1,409.074** | **15,934.911** |
| **2013.12.31 இல் தேறிய புத்தகப்** | **2,875.263** | **0.619** | **886.091** | **851.788** | **226.321** | **517.365** | **23,264.444** |
| **2012.12.31 இல் தேறிய புத்தகப்** | 2,914.384 | 0.627 | 903.926 | 851.788 | 150.346 | 607.513 | 24,423.710 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

**4.5 முதலீட்டு ஆதனம்**

| | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | **2013** ரூபா.மில் | **2012** ரூபா.மில் | **2013** ரூபா.மில் | **2012** ரூபா.மில் |
| **கொண்டுள்ள மொத்த தொகை** | | | | |
| **செலவு** | | | | |
| 1.1 இல் மீதி | 33.570 | 32.344 | 33.570 | 32.344 |
| கூட்டுக: சேர்தல்கள் | - | 1.226 | - | 1.226 |
| 31.12 இல் மீதி | 33.570 | 33.570 | 33.570 | 33.570 |
| **தேய்மானம்** | | | | |
| 1.1 இல் மீதி | 6.600 | 5.653 | 6.600 | 5.653 |
| கூட்டுக: ஆண்டுக்கான அறவீடு | 0.804 | 0.947 | 0.804 | 0.947 |
| 31.12 இல் மீதி | 7.404 | 6.600 | 7.404 | 6.600 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **26.166** | **26.970** | **26.166** | **26.970** |

ஐந்தொகை திகதியன்று நியாயப் பெறுமதி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அத்துடன் 2013 இல் தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**4.6 சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட்காலம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது. .**

| | **2013** | **2012** |
|---|---|---|
| நிரந்தரக் காணி | இல்லை | இல்லை |
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் | 40 வருடங்கள் |
| புதிய தலைமை அலுவலகக் கட்டிடம் | 50வருடங்கள் | 50வருடங்கள் |
| சுத்திகரிப்பு தாங்கிகளும் குழாய்களும் | 40வருடங்கள் | 40வருடங்கள் |
| சுத்திகரிப்பு பொறித் தொகுதியும் இயற்திரங்களும் | 10வருடங்கள் | 10வருடங்கள் |
| ஏனைய அமைவிட தாங்கிகள் | 40 அல்லது 20வருடங்கள் | 40 அல்லது 20வருடங்கள் |
| ஏனைய அமைவிட குழாய்கள் | 10 அல்லது 5வருடங்கள் | 10 அல்லது 5வருடங்கள் |
| பொறித் தொகுதியும் இயந்திரங்களும் | 10 அல்லது 5வருடங்கள் | 10 அல்லது 5வருடங்கள் |
| பவுசர் மற்றும் தாங்கி லொறியும் | 5வருடங்கள் | 5வருடங்கள் |
| வேகன் மற்றும் வாகனங்களும் | 4 வருடங்கள் | 4 வருடங்கள் |
| 31.12.1998 வரை தளபாடங்கள் பொருத்துகள் மற்றும் உபகரணங்கள் | முழுமையான | முழுமையான |
| 31.12.1999 வரை தளபாடங்கள் பொருத்துகள் மற்றும் உபகரணங்கள் | 3 வருடங்கள் | 3 வருடங்கள் |
| எஸ்.பீ.எம். வசதிகள் - தாங்கிப்பண்ணை | 40வருடங்கள் | 40வருடங்கள் |
| - குழாய்கள் | 20வருடங்கள் | 20வருடங்கள் |

**4.7 புலப்படாத சொத்துக்கள்**

| | SAP ERP பயன்பாட்டாளர் பெறுமதிக் கழிவு | | | |
|---|---|---|---|---|
| | ERP கருத்திட்ட | உ. பத்திரம் | ரதாண்டிய குழா | மொத்தம் |
| **பெறுமதி மதிப்பிட்டு கிரயம்** | | | | |
| 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 410.974 | 9.380 | 37.794 | 458.148 |
| சேர்தல்கள் | 1.522 | | | 1.522 |
| இடமாற்றங்கள் | - | - | - | - |
| 2013.12.31 இல் உள்ளவாறான மீதி | 412.497 | 9.380 | 37.794 | 459.670 |
| **ஒன்று திரட்டிய தேய்மானமும் பெறுமதி கழித்தலும்** | | | | |
| 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 226.317 | 0.482 | 1.921 | 228.720 |
| இவ் வருட மாற்றம் | 91.658 | | | 91.658 |
| இடமாற்றங்கள் | | | | - |
| 201312.31 அன்று உள்ளவாறு | 317.975 | 0.482 | 1.921 | 320.377 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | | | |
| **2013 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு** | **94.522** | **8.898** | **35.873** | **139.293** |
| **2012 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு** | **184.657** | **8.898** | **35.873** | **229.428** |

## 5. முதலீடுகள்

| | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| **5.1 நடைமுறையற்றவை** | | | | |
| **கோரப்படாதவை** | | | | |
| சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் | 5,000.000 | 5,000.000 | - | - |
| முதலீடுகளுக்கான சேர்த்தல்கள் | | | - | - |
| | **5,000.000** | **5,000.000** | **0.000** | **0.000** |
| **ஆ) ஏனைய முதலீடகள்- விற்பனை முதலீடுகளுக்காக கிடைக்கத்தக்கவை** | | | | |
| **கோரப்படாதவை** | | | | |
| லங்கா சிமெந்து லிமிடட் ஒவ்வொன்றும் ரூபா 10 கொண்ட 5,000.000 சாதாரண பங்குகள் | 47.500 | 99.000 | 47.500 | 99.000 |
| ஒப்பபுரவிற்கான நியாயப்பெறுமதி இடமயற்றம் | (14.500) | (51.50) | (14.500) | (51.500) |
| | **33.000** | **47.500** | **33.000** | **47.500** |
| **கோரப்படாதவை** | | | | |
| **அசோசியேடட் நியுஸ்போப்பர் சிலோன் லிமிடட்** | | | | |
| ஒவ்வொன்றும் ரூபா 10 ஏற்றுமதியான 61,206 சாதாரண பங்குகள் முழமையான கொடுப்பனவு செய்யப்பட்டவை | 0.539 | 0.539 | 0.54 | 0.539 |
| **லங்கா லேலன்ட் லிமிடட** | | | | |
| ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 100 சாதாரண பங்குகள் முழமையான கொடுப்பனவு செய்யப்பட்டவை | 0.001 | 0.001 | 0.00 | 0.001 |
| **சர்வதேச கூட்டுறவு பெற்றோலிய அமையம்** | | | - | |
| ஒவ்வொன்றும் அ.டொ 100 பெறுமதியான முழுமையாககொடுப்பனவு செய்யப்பட்ட | | | - | |
| 5,499 பங்குகள் ஐக்கிய அமெரிக்காவில் கூட்டிணைக்கப்பட்டது. | 5.086 | 5.086 | 5.09 | 5.086 |
| | **5.626** | **5.626** | **5.626** | **5.626** |
| **5.2 மொத்தம்** | **38.626** | **53.126** | **38.626** | **53.126** |

விற்பனை முதலீடுகளுக்கான கிடைக்கப்பெறத்தக்கவையாக வகைகப்படுத்தப்பட்ட கோரப்படாத முதலீடுகள் கிரயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.
அறிக்கையிடும் திகதியில் உள்ள கடன் இடருக்கான அதிகூடிய வெளிப்பாடு
விற்பனைக்காக கிடைக்கப்பெறத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்டவை ஒப்புரவு பிணையங்கள் கொண்டுள்ள பெறுமதியாகும்.
விற்பனைக்காக கிடைக்கப்பெறத்தக்கவைமயாக வகைப்படுத்தப்பட்ட சொத்துக்களும் எதுவும் கடந்த கால நிலுவையோ அல்லது பெறுமதி

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 6. வணிக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை

| | இ.பெ.கூ | | இ.பெ.கூ | | குழு | | குழு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | 2013 | | 2012 | |
| | ரூபா.மில் ஒரு ஆண்டினுள் | ரூபா.மில் ஒரு ஆண்டின் பின | ரூபா.மில் ஒரு ஆண்டினுள் | ரூபா.மில் ஒரு ஆண்டின் பின | ரூபா.மில் ஒரு ஆண்டினுள் | ரூபா.மில் ஒரு ஆண்டின் பின | ரூபா.மில் ஒரு ஆண்டினுள் | ரூபா.மில் ஒரு ஆண்டின் பின |
| வணிக கிடைக்கப்பெறத்தக்கவை | 53,147.185 | | 97,378.525 | - | 53,945.433 | | 97,763.121 | - |
| ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவை | 1,585.849 | 32,338.40 | 3,251.512 | 13,684.29 | 157.740 | 32,338.40 | 3,280.734 | 12,255.76 |
| வைப்புக்கள் | 13.685 | 260.13 | 12.297 | 697.32 | 300.808 | 260.13 | 12.297 | 697.32 |
| முற்பணம் | 375.128 | | 499.601 | - | 375.128 | - | 591.565 | |
| முற்கொடுப்பனவு | 178.206 | | 221.211 | - | 178.206 | - | 221.211 | - |
| ஊழியர்களுக்கான கடன்களும் முற்பண | 31.806 | 2,242.56 | 39.865 | 1,729.38 | 2,126.114 | 2,242.56 | 2,434.487 | 1,729.38 |
| | **55,331.858** | **34,841.091** | **101,403.011** | **16,110.986** | **57,083.428** | **34,841.091** | **104,303.415** | **14,682.463** |

| | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **7.பதிவேட்டுப்பொருட்கள்** | | | | |
| மசகு எண்ணெய் | 24,231.471 | 13,955.461 | 24,231.471 | 13,955.461 |
| ஏனைய மூலப்பொருட்கள் | 909.535 | 1,002.053 | 909.535 | 1,002.053 |
| முடிவுப் பொருட்கள் | 37,869.639 | 45,577.306 | 37,869.639 | 45,577.577 |
| ஏனைய பொருட்களும் வழங்கலும் | 2,363.479 | 1,997.516 | 2,931.560 | 2,529.557 |
| கழி: அசையாத பொருட்களுக்கான ஏற்பாடு | (341.924) | (342.511) | (513.765) | (514.352) |
| | **65,032.200** | **62,189.825** | **65,428.440** | **62,550.296** |
| **8. காசும் காசுக்கு சமமானவையும்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமான கூறுகள் | | | | |
| காசும் வங்கி மீதியும் | 6,134.526 | 11,623.634 | 11,385.099 | 12,085.561 |
| | **6,134.526** | **11,623.634** | **11,385.099** | **12,085.561** |

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திந்காக காசு மற்று காசுக்கு சமமானவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 6,134.526 | 11,623.634 | 11,385.099 | 12,085.561 |
| வங்கி மேலதிக பற்று | (8,365.51) | - | (8,537.06) | (365.08) |
| | **(2,230.984)** | **11,623.634** | **2,848.037** | **11,720.479** |
| கூட்டு:கழி: வெளிநாட்டு நாணயமாற்றுக்கான சரிப்படுத்தல் | (5,068.406) | (4,688.55) | (5,068.406) | (4,688.55) |
| | (7,299.390) | 6,935.086 | (2,220.369) | 7,031.931 |

## 9. பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம்

| | | | | |
|---|---|---|---|---|
| பின்வரும் சட்டபிரிவுகளில் மூலம் ஆரம்ப பங்களிப்பு | | | | |
| 1961 இன் 28 ஆம் சட்டத்தின் 31 ஆம் | 10.000 | 10.000 | 10.000 | 10.000 |
| 1964 இன் 28 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் | 4.000 | 4.000 | 4.000 | 4.000 |
| 1967 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் | 20.000 | 20.000 | 20.000 | 20.000 |
| 1976 இல் மூலதனத்துக்கான பங்களிப்பு | 60.000 | 60.000 | 60.000 | 60.000 |
| 1979 இல் மூலதனத்துக்கான பங்களிப்பு | 13.110 | 13.110 | 13.110 | 13.110 |
| 1980 இல் மூலதனத்துக்கான பங்களிப்பு | 10.710 | 10.710 | 10.710 | 10.710 |
| இலங்கை அரசாங்கத்தின் மொத்தப் பங்களிப்பு | 117.820 | 117.820 | 117.820 | 117.820 |
| 1987 இல் பொது ஒதுக்கில் இருந்து இடமாற்றப்பட்டது. | 750.000 | 750.000 | 750.000 | 750.000 |
| 1987 இல் பிடித்து வைக்கப்பட்ட இலாபத்திலிருந்து இடமாற்றம் ' | 132.180 | 132.180 | 132.180 | 132.180 |
| | **1,000.000** | **1,000.000** | **1,000.000** | **1,000.000** |

(பாரளுமன்றத்தினால் அதிகாரமளிக்கப்படாத மூலதனம் இணைக்கப்படவில்லை.)

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | இபெகூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| **10. முலதன ஒதுக்கு** | | | | |
| ஜனவரி 01.இல் உள்ளவாறு மீதி | 4,992.686 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 |
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | **4,992.686** | **4,992.686** | **4,992.686** | **4,992.686** |

* 2003இ இல் சிபெஸ்ரெலி நிறுவனத்திற்கு சொத்து மாற்றம் புத்தகப் பெறுமதி அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது அதனைத் தொடர்ந்து தனியார்மயப்படுத்தல் மீது உடன்பட்டிருந்த பெறுமதியிலனை அடிப்படையாக கொண்டு மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது மேற்குறித்த கொடுக்கல் வாங்கல் தாக்கம் தேறிய மீள் கட்டமைப்பு விற்பனை வரவாயின் கீழ்" சரிசெய்யப்பட்டிருந்தது.

**11. கடன்கள் மற்றும் கொடுத்துதவுதல் மட்டும் வட்டி**

| | 2013 | 2012 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| **11.1 திறைசேரி (ஆஅ,வங்கிக் கட்ன ஆண்டுக்கு** | | | | |
| 14%வட்டி 1/2 நாற்பது கால மீள்செலுத்தப்படத்தக்கது ஒவ்வொன்றும் | 493.736 | 569.695 | 493.736 | 569.695 |
| ஜுலை 1இல் ஆரம்பிக்கின்ற ரூபா 37.977 மில் கொண்ட வருடாந்த தவணைக் கொடுப்பனவு | | | | |
| **11.2 சிபெஸ்ரெலி நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்பட்ட நீ கா கடன்கள்** | | | | |
| திறைசேரி(எக்ஸிம் வங்கி) கடன் (வட்டி ஆண்டுக்கு 12%) | 857.114 | 1,428.523 | 857.114 | 1,428.523 |
| இறுதிக் கடன் பெறுமதியின் 24 சமமான 1.'.2 வருட தவணைக் | | | | |
| கடன்களின் 2004 ஒக்டோபரில் ஆரம்பிக்கின்ற மீள் கொடுப்பனவு | | | | |
| **11.4 மக்கள் வங்கி நீண்ட காலக் கடன்** | | - | 2,374.451 | 2,523.204 |
| | **1,350.850** | **1,998.218** | **3,725.301** | **4,521.422** |

| | 2013 | 2012 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| **12. வணிக மற்றும் ஏனைய செலுத்தத் தக்கவை** | | | | |
| செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு பட்டியல்கள் | 179,457.390 | 189,355.413 | 179,457.390 | 189,355.413 |
| ஏனைய கடன் கொடுநர் | | | | |
| - உ.இ.தி மற்றும் சுங்க திணைகள நிலுவை | 1.016 | 2,213.257 | 223.588 | 2,213.257 |
| - ஒன்றுசேர்ந்த செலவுகள் | 1,260.938 | 3,338.666 | 2,216.130 | 3,456.338 |
| - மீளளிக்கத்தக்க வைப்புகளும் ஏனையவையும் | 11,397.417 | 16,943.900 | 11,419.523 | 18,311.032 |
| - தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவைத் தொகை | 1,980.164 | 1,434.516 | 4,245.237 | 900.854 |
| - ஸ் சா. வங்கிக்கு செலுத்த டிவண்டியது | 0.000 | 7,611.600 | 0.000 | 7,611.600 |
| | **194,096.925** | **220,897.351** | **197,561.868** | **221,848.494** |

**13. ஒரு வருடகாலத்தினுள் உள்ள கடன்களும் கடன்பெறலும கொண்டுள்ள வட்டியும்**

| | 2013 | 2012 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| வங்கி மற்றும் ஏனைய கடன்கள் | | | | |
| - ஒரு வருடத்தினுள்ள முழமையான மீள் செலுத்தக்கவை | 219,042.059 | 211,163.063 | 219,529.859 | 211,650.863 |
| - வங்கி மேலதிக பற்றுக்கள் | 8,365.509 | | 8,537.060 | 365.082 |
| | **227,407.568** | **211,163.063** | **228,066.919** | **212,015.945** |

### 14. தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட காசு

| | இபெகூ | | குழு | |
|---|---|---|---|---|
| | **2013** | **2012** | **2013** | **2012** |
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| தொடர்ச்சியான தொழிற்பாடுகளில் இருந்து வரிக்கு முந்திய இலபாமம்.ஃ. | (7,984.225) | (97,308.373) | (6,388.19) | (95,473.31) |
| | | | - | |
| **சீராக்கங்களுக்காக:** | | | - | |
| பெறுமானத் தேய்வு | 485.882 | 516.994 | 1,624.43 | 1,672.827 |
| பெறுமதிகழிவு | | | 91.66 | 84.597 |
| வெளிநாட்டு நாணயமாற்று | (379.872) | (3,656.660) | (379.87) | (3,656.660) |
| முதலீட்டு வருமானம் | 0.007 | (0.003) | 0.01 | (0.003) |
| பெறப்பட்ட வட்டி | (3,254.882) | (2,413.145) | (3,279.40) | (2,472.059) |
| சந்தை பெறுமதிக்கான சீராக்கள் (கோரப்பட்ட பங்கு) | 14.500 | 51.500 | 14.50 | 51.500 |
| களங்சியசாலை அசையாத பொருட்களுக்கான ஏற்பாடு | | 21.602 | - | 21.602 |
| வரா, ஐயக் கடன்கள் மற்றும் அறவீடுகளுக்கான ஏற்பாடு | (0.511) | (0.396) | (0.51) | (0.396) |
| வட்டி செலவுகள் | 18,539.848 | 18,359.678 | 19,195.08 | 19,084.230 |
| பணிக்கொடை மீதான வட்டி | | | 77.08 | - |
| ஓய்வூதியக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | 57.032 | (40.731) | 126.78 | 274.635 |
| பெறுமதிக் கழிவு- பதவியினர் கடன்கள் | | | (2.98) | 0.820 |
| பெறுமதிக் கழிவு- கடன்படுநர் | | | 120.53 | - |
| ஆதன பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனையிலிருந்தான வருப | (23.728) | (1.130) | (36.59) | (1.466) |
| பிளாட்டினாம் ஒதுக்கு | | 97.520 | - | 97.520 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இ** | 7,454.051 | (84,373.144) | 11,162.523 | (80,316.164) |
| பணிளாற்று மூலமன மாற்றம் | | | | |
| பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு).ஃ. | (2,842.375) | (25,230.461) | (2,878.144) | (25,219.390) |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு.ஃ. (கு | 27,341.560 | 5,039.874 | 25,418.555 | 3,038.106 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்படுத்தவைகள் அதிகரிப்பு.ஃ. (குறைவு0 | (26,800.426) | 53,864.343 | (22,091.929) | 52,689.564 |
| **தொழிற்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து (பயன்படுத்திய) ஈட்டப்ப** | **5,152.809** | **(50,699.388)** | **11,611.005** | **(49,807.884)** |

## 15. தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆறு பணிப்பாளர்கள் (கீழ் குறிப்பிட்டது போன்று) ஒப்புரவு உரிமைத்துவத்தின் காரணமாக சிலோன் பெற்றோலியம் ஸ்ரோஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக தொடர்ந்தும் கடமையாற்றினர்.

1. எல்.ஈ. சுகந்த சில்வா
2. மேஜர் ஜெரனல் எம்.ஆர்.டப். டி சொஸ்சா
3. திருமதி எஸ். விஜயபண்டார
4. திரு. பந்துல சமன் குமார
5. திருமதி ஆர்.எம்.டி.கே. ரத்நாயக
6. திரு.எம்.விஜேகுணவர்த்தன

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்தின் முதன்மைக் குறிக்கோள் களஞ்சிய மற்றும் கொண்டு செல்லல் செயற்பாடுகளை வழங்குவதும் தகவல் தொழிநுட்ப சேவைகளை வழங்குவதுமாகும். மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 8,366.62 மில் செய்வீதக் கட்டணத்தினையும் (2012- ரூபா 9,443.96 மில்) மற்றும் ரூபா 1,997.98 மில் (2012- ரூபா 1,549.66 மில்) போக்குவரத்துக் கட்டணங்களாகவும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்துள்ளது.

## 16. நிதியியல் இடர் காரணிகள்

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பல்வகைப்பட்ட நிதியியல் இடர்களை புறங் காட்டுகின்றன. அதாவது: சந்தை இடர் (நாணய இடர் உள்ளடங்களாக), கடன் இடர் மற்றும் திரவத்தன்மை இடர் அத்துடன் விலை இடர் பணிப்பாளர்கள் சபையால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் இடர் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. முகாமைத்துவம், கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற நிதியியல் இடர்களை முகாமைத்துவம் இனங்கான்பதுடன் மதிப்பிடுகின்றது. கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள், கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றுகை மீது சாத்தியமான பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கே நாடுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் அடிப்படை நிதியியல் சாதனங்கள் குறுகியகால நிலையான வைப்புக்கள், பணச்சந்தை முதலீடுகள், அமெரிக்க டொலர் வைப்புக்கள் மற்றும் காசு ஆகியவற்றை கொண்டுள்ளது. இந் நிதிச் சாதனங்களின் பிரதான நோக்கு, கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மையினை மேம்படுத்துவதும் பேணுவதும் அத்துடன் முதலிடப்பட்ட நிதியங்கள் மீது நிதியில் வருவாய்யினை உச்சப்படுத்துவதுமாகும். கூட்டுத்தாபனத்தின் வியபார நடவடிக்கைகளில் இருந்து நேரடியாகத் தோன்றுகின்ற வணிக கிடைக்கப்பெறத்தக்கவை மற்றும் வணிக கொடுப்பனவு செய்யத்தக்கவை போன்ற பல்வேறு ஏனைய நிதியியல் சாதனங்களையும் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

### (அ) சந்தை இடர்

#### (i) வெளிநாட்டு நாணயமாற்று இடர்

கூட்டுத்தாபனம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்யும் போதும் முதன்மையாக அமெரிக்க டொலர் தொடர்பில் நாணயவெளிப்பாட்டிலிருந்து தோன்றுகின்றவை வெளிநாட்டு நாணய மாற்று இடருக்கான வெளிப்படுத்தலாகும். கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நாணயம் இலங்கை ரூபா ஆகும். அநேகமான உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் இந்நாணயத்திணைக் கொண்டு இடம்பெறுகின்றன. அத்துடன் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக அனைத்து வேறு நாணயங்களும் வெளிநாட்டு நாணயங்களாக கருதப்படுகின்றன. சில வங்கி மீதிகள், வணிக கிடைக்கப்பெறத்தக்கவை மற்றும் வணிக கொடுப்பனவு செய்யத்தக்கவை வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்படுகின்றன.

இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுக்கள் மாற்று இடர் மற்றும் கொடுக்கல் வாங்கல் ஆகிய இரண்டின் ஊடாகவும் வெளிநாட்டு நாணயமாற்று தளம்பல் மூலம் தாக்கத்திற்குள்ளாகின்றது. வெளிநாட்டு நாணய மாற்று வீதத்திலுள்ள மாற்றங்கள் பொருட்களின் செலவு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் பல்வேறு தரப்பினரிடமிருந்தான கொள்வனவுகள் மற்றும் சேவைகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான பெறுமதி இறக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய கொள்வனவுகளின் செலவு மீதான அதன் தாக்கத்தின் ஊடாக தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் பெறுபேறு மீது நேரடியான தாக்கத்தினைக் கொண்டுள்ளது.

2012 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக அனைத்து மாறுபடுகின்ற இடம்பெற்ற மாறிலிகளுடனும் 1% இனால் மதிபிறக்கம் செய்யப்பட்டிருப்பின் ரூபா 3,991,994,046 வெளிநாட்டு நாணயமாற்று இழப்பினை தோற்றுவிக்கும்.

### (i) வட்டி வீத இடர்

கூட்டுத்தாபனத்தின் வட்டி வீத இடர்கள், கடன் பெறுதல் மற்றும் மீள் வணிகம் மற்றும் தவணை வைப்புக்கள் என்ற வடிவில் உள்ள முதலீடுகளில் இருந்து பிரதானமாக தோன்றுகின்றன. நிலவுகின்ற சந்தை வீதங்களில் இருந்து வழங்குநர் வட்டி வீதம் பாரியளவு மாறுபடும் சந்தர்ப்பங்களில் இரண்டு அரச வங்கிகளிலும் இருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள், கூட்டுத்தாபனம் தொடர்ச்சியான அடிப்படையொன்றில் வட்டி வெளிக்காட்டலினை பகுப்பாய்வு செய்து லண்டன் வங்கிகளுக்கிடையிலான அளிப்பு வீதம் மற்றும் பணச் சந்தை வீதங்களை கண்காணித்து வட்டிவீதம் பேசித்தீர்க்கப்பட்ட அடிப்படையில் அமைத்தனவாகவுள்ளன.

### (ஆ) கடன் இடர்

கடன் இடர் என்பது வாடிக்கையாளர் ஒரு தனது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்ற தவறுகின்றபோது கூட்டுத்தாபனத்திற்கான நிதிசார்ந்த இழப்பு இடராகும். கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர்களில் அநேகமானோர் சுயதீனமாக தரப்படுத்தப்பட்டவர்கள் அல்ல. எனவே வாடிக்கையாளர்களின் தரம், கணக்குகளின் நிதியியல் நிலைமை, கடந்தகால அனுபவம் மற்றும் ஏனைய பண்பியல் காரணிகளை கவனத்திலெடுப்பதன் ஊடாக கருத்திக் கொள்ளப்படுகின்றது. கூட்டுத்தாபன கடன் கொள்கைமொன்றினைத் தாபித்துள்ளது. இதன் கீழ் புதிய வாடிக்கையாளர்களுக்கு கடன் எல்லை வழங்குப்படுவதற்கு முன்னர் கடன் தகுதிக்காக தனிப்பட்ட ரீதீயில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றனர். கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கையினை நிறைவேற்றத் தவறுகின்ற வாடிக்கையாளர்கள் பண அடிப்படையில் மாத்திரம் கூட்டுத்தாபனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருப்பர்.

காசு மற்றும் காசுக்கு சமமானவை, வங்கி அத்துடன் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புக்கள் அதேபோன்று நிலுவையாக உள்ள கிடைக்கப்பெறத்தக்கவை மற்றும் ஏற்கப்பெற்ற கொடுக்கல் வாங்கல் உள்ளடங்களாக வாடிக்கையாளர்களுக்கான கடன் வழங்கல் என்பவற்றிலிருந்தும் கடன் இடர் தோன்றுகின்றது.

### (இ) திரவத்தன்மை இடர்

காசுப் பாய்ச்சல் திட்டமிடலும் எதிர்வுகூறலும் கூட்டுத்தாபனத்தின் நிதிப்பிரிவினால் செயலாற்றப்படுகின்றது. பல்வேறு நிதிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த வருவாய்க்காக குறுகியகால நிதி வளங்கள் பயன்பாட்டினை உச்சப் படுத்துத்துவதற்கும் கிடைக்கப்பெறும் நிதியங்களை நிதிப்பிரிவு தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது.

பணியாற்று மூலதன முகாமைத்துவத்திற்காக வேண்டப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட மேலதிக மற்றும் மிஞ்சிய மிகை, சேமிப்புக் கணக்குகள், குறுகிய கால வணிக உடன்படிக்கை தவணை வைப்புகள் போன்ற வட்டியுடைய நிதிச்சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அறிக்கையிடும் திகதியன்று கூட்டுத்தாபனம், ரூபா 4,055.87 கொண்ட ஏனைய திரவ சொத்துக்கள் (தவணை வைப்புக்கள்)

ஆகியவற்றைக் கொண்டிருந்ததுடன் அவை திரவத்தன்மை இடரினை முகாமை செய்வதற்காக காசுப்பாய்ச்சல்களை உடனடியாக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

ஐந்தொகை திகதியில் இருந்து ஒப்பந்த முதிர்வு திகதியில் எஞ்சியிருக்கின்ற காலத்தினை அடிப்படையாக கொண்டு தொடர்புடைய முதிர்வு தொகுப்புக்களுக்கான கூட்டுத்தாபன வழித்தோன்றாத பொறுப்புக்களை கீழ்வரும் அட்டவணை பகுப்பாய்வு செய்கின்றது.

| | டிசம்பர் 2013 (ரூபா மில்) | | | |
|---|---|---|---|---|
| | 03 மாதங்களை விடக் குறைந்தது | 03 மாதங்கள் தொடக்கம் 2 வருடங்கள் | 3-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் |
| வங்கி கடன் பெறுல்கள் | 227.407 | - | - | - |
| நீண்டகால படுகடன்கள் | - | 685.348 | 437.623 | 227.878 |

(ஈ) **விலை இடர்**

அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய நாணயங்களில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய மூலப் பொருட்களின் விலை இடருக்கு கூட்டுத்தாபன ஆட்படுகின்றது. சர்வதேச எரிபொருள் விலை அசைவுகளுக்கு ஏற்ப பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விற்பனைகளை தீர்மானிப்பதில் செலவுப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறையொன்று செயற்பாட்டில் இல்லை. கூட்டுத்தாபனம், வராந்த கையிருப்பு கூட்டங்களை கிரமமாக நடாத்துகின்றது அதில் வேண்டப்பட்ட எதிர்கால இறக்குமதிக்கான எதிர்கால உற்பத்தி தேவைப்பாடுகள் கலந்தாலோசிக்கப்பட்டு திட்டமிடப்படுகின்றன. அதேவேளை கூட்டுத்தாபனம், பொருத்தமான உரிய நேரத்திலான முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு பெற்றோலிய உற்பத்திகளின் நிதியியல்த் தகவல்களை வழங்குவதன் ஊடாக பொதுத் திறைசேரியுடன் தொடர்ச்சியக கலந்துரையாடுகின்றது.

## 17. மூலதன முகாமைத்துவம்

மூலதன முகாமைத்துவத்தின் அடிப்படைக் குறிக்கோள் ஒப்புரவு பங்குதாரர்களுக்காக இலாபத்தினை வழங்குவதற்கும் ஏனைய பங்குகளுக்கான நலன்களாக வழங்குவதற்கும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செயலாற்றும் இயலுமையினை பாதுகாப்பதற்காக உறுதி செய்வதாகும். கூட்டுத்தாபனம், நடைமுறை ஆண்டின் போது ரூபா 7,924.225 மில் (வரி சரிப்படுத்தல்கள் இன்றி) நட்டமடைந்திருந்ததுடன் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான ஒன்று திரட்டிய நட்டங்களின் காரணமாக 2013 இன் இறுதியில் உள்ளவாறு ரூபா 236,528.740 மில் எதிர்மறை தேறிய சொத்து நிலைமையொன்றினைக் கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி இன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செயலாற்றும் நிலை சந்தேகத்திற்குரியதாகயிருந்தது என புற கணக்காய்யவாளர்கள் குறிப்பிட்டு இருந்தார்.

கூட்டுத்தாபனத்தினால் கூறப்பட்ட பாரிய நட்டங்கள், சில்லறை விலைகள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு அதிகளவான மானிய விலையில் ஒட்டோ டீசல் மண்ணெண்ணெய், படிக எண்ணெய் விற்பனை மீது பாரிய அளவில் சார்ந்திருக்கின்றது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி அத்தகைய நட்டங்களை சமாளிப்பதற்கு கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையது. மானியங்கள் கிடைக்கப்பெறுமாயின் கூட்டுத்தாபனத்தின் எதிர்மறையான சொத்து நிலை வெற்றி கொள்ளப்படக் கூடியதாகவிருக்கும்.

මගේ අංකය / எனது இல. / My No. ஈஎச்/வீ/சீபீசீ/1/13/01    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date 2015 ஏப்ரல் 08

தலைவர்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபீசீ) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபீசீ) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34  +94-11-2887223  oaggov@sltnet.lk  www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

#### (அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### (ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பங்குகளில் மூன்றில் இரண்டினை வைத்துள்ள கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுத்த சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் (சீபீஎஸ்ரீஎல்) கம்பனியின் கணக்காய்வாளர் பின்வரும் விடயங்களின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை தெரிவித்திருந்தனர்.

(i) 2008 முதல் நிலுவையாகவுள்ள முறையே ரூபா 1,065,397,574 மற்றும் ரூபா 120,238,623 தொகையான மிகை இறங்குதுறைக் கட்டணங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கும் (எல்ஐஓசீ)

மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், இத் தொகைகளை தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனத்திடமிருந்தும் எல்ஜஓசீ இடமிருந்தும் கிடைத்திருந்த தொடர்புடைய தரப்பினர் உறுதிப்படுத்தல்கள் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள தொகைகளுடன் இணங்கியிருக்கவில்லை. அத்துடன், கூட்டுத்தாபனத்திடமிருந்தும் எல்ஜஓசீ இடமிருந்தும் பெறப்பட வேண்டிய ரூபா 221.34 மில்லியன் மற்றும் ரூபா 3.35 மில்லியன் மறுக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவையின் கீழ் உள்ளடங்கியிருந்த துணைக் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 461,046,341 தொகை, ஒன்றிணைப்பின் போது நீக்கப்பட்டிராமையின் விளைவாக தொகுதியின் நிதிக்கூற்றுக்களில் ஒரு ஆண்டிற்கும் மேலாக காண்பிக்கப்பட்டுள்ள வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள்

#### 2.2.2.1 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

2013 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனம் ரூபா 7,984 மில்லியன் தேறிய நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 236,529 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்து நிலையைக் கொண்டிருந்த விடயத்தின் மீது எனது கவனம் திரும்பியிருந்ததுடன் மேலும், "இடர் குறைப்பு" (ஹெட்ஜிங்) கொடுக்கல்வாங்கல் மீது கூட்டுத்தாபனத்தால் 2012 இல் தாங்கிக்கொள்ளப்பட்ட நட்டங்களின் எதிர்மறையான தாக்கம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை அதிகரிப்பதற்கு காரணமாகியது. மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டம் முன்னயை ஆண்டின் ரூபா 97,308 மில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 7,984 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும், 2008 முதல் ஏற்பட்ட பாரிய நட்டத்தின் விளைவாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்து நிலைமை மேலும் தேய்வடைந்திருந்தது. ஆகையால் இலங்கை அரசாங்கத்தின் உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை ஐயத்திற்குரியதாகும்.

**2.2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எல்கேஏஎஸ்) இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 சனவரி 01 இற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட முன்னைய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி (எஸ்எல்ஏஎஸ்) குழு சீபீஎஸ்ரீஎல் (துணைக்கம்பனி) இனை கையேற்றலின் மீதான இலாபத்தினை இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக அங்கீகரித்தல் வேண்டும். இருப்பினும், வணிகக் கையேற்றலுடன் தொடர்புடைய ரூபா 2,485.6 மில்லியன் இலாபம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் மாறாக 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக குழுவின் நிதி நிலைமைக்கூற்றில் ஒன்றிணைத்தலின் மீதான ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் விதந்துரைக்கப்பட்ட 3.2 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் படி, சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி எதிர்வுகூறப்பட்ட அலகுச் செலவிடல் முறையினைப் பிரயோகித்து கூட்டுத்தாபனம் ஓய்வூதிய நலன்களை கணிப்பிட்டிருந்தது. அதன்படி, **எல்கேஏஎஸ் 19 – ஊழியர் நலன்கள்** இன் பிரகாரம் பணிக்கொடை ஏற்பாட்டுத் தேவைப்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டில் இறுதியில் 216 தீர்வு காணப்படாத நீதிமன்ற வழக்குகள் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 36,948,819, யூஎஸ்டொலர் 13,309,645 மற்றும் ஜீவீபீ 90,812 எதிர்பார்க்கப்பட்ட தொகைகளுடன் கூடிய 112 வழக்குகள் கூட்டுத்தாபனத்திற்கு எதிரானதாகவும் 18 வழக்குகள் ரூபா 5,643,991,774 யூஎஸ்டொலர் 5,175,203 மற்றும் ஜீவீபீ 13,901 எதிர்பார்க்கப்பட்ட தொகைகளுடன் கூட்டுத்தாபனத்தினால் தொடரப்பட்டவையாகவும் காணப்பட்டன. அத்துடன் மேற்படி 216 நீதிமன்ற வழக்குகளில் 189 வழக்குகள் இவ் அறிக்கைத் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் வெளியாருக்கு எதிராக கூட்டுத்தாபனத்தினால் தொடரப்பட்டிருந்த மூன்று (03) வழக்குகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களின் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொருத்தமான ஏற்பாடொன்று அல்லது சட்டரீதியான கடப்பாடுகளுக்கான வெளிப்படுத்தல்கள் **எல்கேஏஎஸ் 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்** இனால் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வேறுபடுத்திக் காண்பிக்கப்படாத மற்றும் பிளாற்றினம் இருப்புக்களின் முன்னர் விலைமதிப்புச் செய்யப்பட்ட மீதிக்கு பொருத்தமற்ற சீராக்கல்களை மேற்கொண்டு பிளாற்றினம் இருப்பை விலைமதிப்பிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கையினை கூட்டுத்தாபனத்தினால் மாற்றியமை காரணமாக சுத்திகரிப்பு ஆலையின் தளப் பகுதியின் முக்கிய கூறொன்றான புதிய வடிகட்டுதல்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பிளாற்றினம் இருப்பு (அதிக பெறுமதியுடைய உலோகம்) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,463,682 மறை (செலவு) மீதியை பிரதிநிதித்துவப்படுத்தியது. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆண்டிறுதி மீதி நியாயமாக காண்பிக்கப்படாததுடன் கணக்காய்விற்கு தகவல்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக உண்மையான தாக்கத்தினை நிச்சயிக்க முடியவில்லை.

(ஆ) எல்ஜஓசீ இற்குச் சொந்தமான ரூபா 7,346,782 தொகையான எண்ணெய் இருப்பை கூட்டுத்தாபனம் பயன்படுத்தியிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஏனைய பெறவேண்டியவைகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஏனைய பெறவேண்டியவையும் எண்ணெய் இருப்பு மீதியும் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபன "இடர் குறைப்பு" (ஹெட்ஜிங்) கொடுக்கல்வாங்களிற்காக ஏற்பட்ட செலவினம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு (சீபீஎஸ்எல்) செலுத்தவேண்டிய ரூபா 383,114,031 தொகை மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,565,829 சம்பளம் என்பன பொருத்தமற்ற விதத்தில் தொடர்புடைய தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டிய தொகையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், "இடர் குறைப்பு" கொடுக்கல் வாங்கல்களிற்காக சீபீஎஸ்எல் இற்கு மீள்நிரப்பல் செய்யப்பட்ட சட்டக் கட்டணமான ரூபா 50 மில்லியன் தொகை சீபீஎஸ்எல் செலுத்த வேண்டிய கணக்கிற்கு தாக்கல் செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான சட்டக் கட்டணமாக பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக, சீபீஎஸ்எல் செலுத்த வேண்டிய கணக்கும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சட்டக் கட்டணமும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) துணைக்கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 875 மில்லியன் தொகையான பங்கிலாபம் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக ஒன்றிணைத்தலின் போதும் அது கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறவேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிலுவையான மீதிக்கும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக சீஈபீ இன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஒத்த தொகைக்குமிடையே ரூபா 796 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இருப்பினும், மேற்படி தொகையில் உள்ளடங்கியிருந்த கொடுப்பனவு தாமதத்தின் வட்டியாக விதிக்கப்பட்ட ரூபா 766 மில்லியன் தொகையை சீஈபீ மறுத்திருந்ததுடன் அந்த மறுப்பினை கருத்திற்கொள்ளாது கூட்டுத்தாபனம் அதனை பெறுவனவாக கணக்கீடு செய்திருந்தது.

### 2.2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மற்றும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொடர்புடைய தரப்பு மீதிக்கும் துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த அதனையொத்த மீதிக்குமிடையே முறையே ரூபா 2,196.19 மில்லியன் மற்றும் ரூபா 3,371.95 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அவ்வாறே, எண்ணைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக சேவைகள் தொடர்பில் முறையே 2012 மற்றும் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளிற்காக கூட்டுத்தாபனத்தினதும் துணைக் கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களிற்கிடையே ரூபா 2,297.82 மில்லியன் மற்றும் ரூபா 652.28 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நேரொத்த மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. அதன்படி, அந்த நிதிக்கூற்றுக்களுக்கிடையே முறையே ரூபா 1,202 மில்லியன் மற்றும் ரூபா 34 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**2.2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்**

அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட வேண்டிய முறையே ரூபா 15,415,734,805 மற்றும் ரூபா 37,773,941,383 அடங்கலாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார பெறவேண்டியவை ரூபா 53,189,676,188 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 339,877,818 தொகை 02 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் நிலுவையாகவிருக்கின்ற மீதிகளின் விபரங்கள் வருமாறு.

| வகை | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | |
|---|---|---|
| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
| விநியோகத்தர் | 1,017,123,765 | 947,723,789 |
| விமானச்சேவை | 34,725,218,564 | 29,887,871,353 |
| மின்வலு பொறிகள்-சீசுபீ | 7,154,095,254 | 27,823,749,142 |
| மின்வலு பொறிகள்-தனியார் | 5,412,175,605 | 17,064,591,449 |
| அரசாங்க பாவனையாளர்கள் | 2,617,900,530 | 20,776,542,402 |
| தனியார் பாவனையாளர்கள் | 1,709,489,885 | 574,893,541 |
| விவசாய இரசாயனம் | 23,639,740 | 26,534,377 |
| உராய்வு நீக்கி | 527,351,340 | 535,322,865 |
| ஏனையோர் | 2,681,505 | 74,544 |
| **மொத்தம்** | **53,189,676,188** | **97,637,303,460** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 53,189,676,188 தொகையான மொத்த நிலுவை மீதியில் ரூபா 280,420,496 தொகை 03 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 231,027,426 தொகையான

நிலுவைகளைக் கொண்டுள்ள அநேக வாடிக்கையாளர்களிற்கு பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஆ) எனது முன்னைய ஆண்டுகளிற்கான கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இரண்டு விமானச்சேவை வாடிக்கையாளருக்கு வங்கி உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளாது கடன் வசதிகளை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. இது தொடர்பில் முகாமைத்துவம் கருத்துத் தெரிவிக்கையில் "பெட்றொனாஸ் (ஒரு விமானச்சேவை வாடிக்கையாளர்) அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு விமானசேவைக் கம்பனியாக இருப்பதனால் எந்தவொரு ஏய்ப்புச்செய்தலுமின்றி அதன் நிலுவைகளை தீர்க்கும் என்பதாகும்'' இருப்பினும், இந்தக் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,603,910 தொகைக்காக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முழுமையானதோர் ஏற்பாட்டை கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்தது.

(இ) நான்கு விமானசேவை வாடிக்கையாளர்களிற்கு வங்கி உத்தரவாதத்திற்கும் மேலாக கடன் வசதிகளை வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. வங்கி உத்தரவாத்திற்கும் மேலாக வழங்கப்பட்டிருந்த கடன் வசதிகள் 50 சதவீதத்திற்கும் 121 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஈ) யுத்த காலத்தில் வழங்கப்பட்டிருந்த விசேட கடன் வசதிகளின் அடிப்படையில் 5 – நாள் கடன் விநியோகத்தர் ஒருவருக்கும் முறைப்படியான அங்கீகாரமின்றி அவரால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கையின் மீது மேலுமொரு 5 – நாள் கடன் விநியோகத்தருக்கும் கூட்டுத்தாபனம் விசேட கடன் வசதிகளை வழங்கியிருந்தது. அத்துடன், இக் கடன் வசதிகள் மின்சார பொறி வாடிக்கையாளர் ஒருவருக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போது நிலவுகின்ற சுற்றாடல் மாற்றங்களைக் கருத்திற்கொள்ளாதும் தேவையான அங்கீகாரமின்றியும் நீண்ட காலமாக இக்கடன் வசதி தொடரப்படுதல் கணக்காய்வில் கேள்விக்குரியாக உள்ளது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படாது நிலுவையாக உள்ள மொத்தத் தொகை ரூபா 1,863.7 மில்லியனாகும்.

(உ) 2006 ஆகஸ்ட் 08 ஆந் திகதி சபைத் தீர்மானம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பிரதி நிதி முகாமையாளர் (வருமானம்) அவர்களின் 2008 மார்ச் 24 ஆந் திகதிய கடிதம் என்பவற்றின் பிரகாரம் வெளி நிலுவையாகவுள்ள வாடிக்கையாளர்களின் மீதிகளின் மீது ஆண்டிற்கு 24 சதவீத வட்டி தாக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், கூட்டுத்தாபனத்தினால் தரவுச்

செயன்முறைப்படுத்தலுக்கும் இருப்பு மட்டங்களை கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்ற துணைக்கம்பனியினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமையின் முறைமைப் பிரயோகமும் உற்பத்திப் பொருட்கள் (எஸ்ஏபீ) முறைமையும், கடன் காலப்பகுதியில் தீர்க்கப்படாதுள்ள விலைப் பட்டியல்களின் மீது வட்டிக் கட்டணத்தை கணிப்பீடு செய்வதற்கான வசதியினை வழங்குவதில்லை. ஆகையால், தீர்க்கப்படாதுள்ள விலைப்பட்டியல்கள் மீதான வட்டியினைக் கணிப்பதற்கும் எஸ்ஏபீ முறைமையினை நாளதுவரையாக்குவதற்கும் கூட்டுத்தாபனம் கைக் கணிப்பீட்டு முறையை பயன்படுத்தியிருந்தது. அதன்படி வெளிநிலுவையாகவுள்ள மீதிகளின் மீது வட்டிக் கட்டணங்களின் செம்மை மற்றும் பூரணத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமான முறைமையொன்று வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிலுவைகளை சேகரிப்பதன் மீது பொருத்தமான கடன் கட்டுப்பாடு இன்மையால் பெறவேண்டிய தொகையினை சேகரிக்காது காசோலை மீதான விநியோக வாடிக்கையாளர்களுக்கு (சீஓடீ) வன் ரொக்க அடிப்படையில் தொடர்ந்தும் பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாக: 2013 இலும் 2012 இலும் கடன் ஏய்ப்புச்செய்திருந்த சீஓடீ இனரின் பெறுமதி முறையே ரூபா 64,942,385 மற்றும் ரூபா 58,399,795 ஆகக் காணப்பட்டன. 2012 ஆம் ஆண்டின் ரூபா 1,388,713,962 பெறுமதியான 1,579 சந்தர்ப்பங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் கூடிய தொகையாக கருதப்படத்தக்க ரூபா 1,413,402,939 பெறுமதியான 1,489 காசோலை மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் 2013 இல் காணப்பட்டன. இது தொடர்பில் பொருத்தமான கட்டுப்பாடு இன்மையால், வாடிக்கையாளர்கள் அவர்களது தொழிற்படு மூலதனத்தை முகாமை செய்வதற்கு இந்த நடைமுறையை பயன்படுத்திக் கொண்டிருந்தமை வெளிப்பட்டது.

(எ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 53,189.7 மில்லியன் மொத்த வியாபார பெறவேண்டியவைகளில் 856 கடன்பட்டோர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 44,556.5 மில்லியன் தொகையினை அவர்கள் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், பேரேட்டு மீதிகளுக்கும் கடன்பட்டோர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 821.4 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டிற்காக கணக்கிணக்கக் கூற்றொன்று அல்லது முகாமைத்துவ விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.6 "இடர் குறைத்தல்" (ஹெட்ஜிங்) கொடுக்கல் வாங்கல்கள்

இடர் குறைத்தல் கொடுக்கல்வாங்கல்களின் படி, பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இடர் குறைத்தல் ஒப்பந்தங்கள் தொடர்பான நடுவர் தீர்ப்பு செயற்பாடுகளில் கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாகக் கலந்துகொண்டிருந்தது. ஆகையால் தரப்பினர்களிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த தீர்ப்பனவு உறுதியின் கீழ் ஸ்ரான்டர்ட் சார்டட் வங்கிக்கு (எஸ்சீபீ) யூஎஸ்டொலர் 60 மில்லியன் (ரூபா 7,612 மில்லியன்) தொகையினை 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தியிருந்தது. கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி சட்ட மற்றும் ஏனைய கட்டணங்களள் உள்ளடங்கலாக 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 9,780 மில்லியன் ஆகும்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக டச் வங்கியினால் தொடரப்பட்டிருந்த நடுவர்தீர்ப்பு விவாதங்களில் பங்குபற்றிய வெளிநாட்டு வழக்கறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக 2014 திசெம்பர் 31 வரை இலங்கை மத்திய வங்கியினால் ரூபா 378.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இந்த நிலைமையும் தொகையும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரிவு 3.2 | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை பெற்றோலிய தொழிற் துறையைச் சேர்ந்த ஒரு உறுப்பினரையாவது உள்ளடக்கியிருக்கவில்லை. |
| (ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க சுற்றுநிருபம். | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை 02 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான வீச்செல்லைக் |

காலமாக வெற்றிடமான பதவிகளிற்கான பணிகளை கவனிப்பதற்காக 16 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 7,733 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய நட்டமான ரூபா 89,569 மில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 81,836 மில்லியனான முன்னேற்றமொன்று காட்டப்படுகின்றது. இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு | | மாற்றம் சாதகமானது/(பாதகமானது) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வருமானம் | 490,381 | 512,910 | (22,529) | (4.4) |
| விற்பனைக் கிரயம் | (467,638) | (573,692) | 106,054 | 18.5 |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | **22,743** | **(60,782)** | **83,525** | **137.4** |
| ஏனைய வருமானம் | 374 | 285 | 89 | 31.2 |
| விற்பனை விநியோக செலவினம் | (11,965) | (12,633) | 668 | 5.29 |
| நிர்வாக செலவினம் | 3,600 | 5,801 | 2,201 | 37.9 |
| **செயற்பாட்டு இலாபம்** | **7,552** | **(78,930)** | **86,482** | **109.6** |
| நிதிக் கட்டணங்கள் | (18,540) | (18,360) | (180) | (1) |
| நிதி வருமானம் | 3,255 | 7,721 | (4,466) | (57.8) |
| **வருமான வரிக்கு முந்திய நட்டம்** | **(7,733)** | **(89,569)** | **81,836** | **91.4** |
| இடர் குறைத்தல் செலவினம் | (214) | (7,612) | 7,398 | 97.2 |
| **ஆண்டுக்கான நட்டம்** | **(7,984)** | **(97,308)** | **89,324** | **91.8** |

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் 4.86 இலாப எல்லையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டின் 10.59 சதவீத எதிர்மறையான இலாப எல்லையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் 15.45 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் ரூபா 60,782 மில்லியன் நேரொத்த மொத்த நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 83,525 மில்லியன் அல்லது 137 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பெற்றோல் (ஒக்டேன் 92 மற்றும் 95), லங்கா ஒடோ டீசல், கைத்தொழில் மண்ணெண்ணெய் போன்ற சில பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் லங்கா மண்ணெண்ணெய், லங்கா பர்னஸ் எண்ணெய் (3500), மற்றும் விமானச்சேவை டேர்பைன் எரிபொருள்-எல்ஓசீ போன்ற நட்டத்தை ஏற்படுத்தும் உற்பத்திப் பொருட்களின் விற்பனை தொகையில் ஏற்பட்ட குறைவு போன்றன கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியின் தொழிற்பாடுகள் மீளாய்வாண்டில் விளைவித்திருந்த ரூபா 1,596 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபமான ரூபா 2,193 மில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 597 மில்லியனான குறைவொன்று காட்டப்படுகின்றது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு


பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கூட்டுத்தாபனத்தின் மூலதனம் தேய்வடைதல்

2013 ஆம் ஆண்டிற்கும் கடந்த ஆறு ஆண்டுகளிற்குமான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் தேறிய சொத்து நிலைமை என்பன கீழே உள்ள அட்டவணையிலும் வரைபிலும் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | தேறிய இலாபம்/(நட்டம்) | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் நிலைமை |
|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். |
| 2007 | 3,984 | 13,568 |
| 2008 | (14,952) | (1,416) |
| 2009 | (11,353) | (13,038) |
| 2010 | (26,923) | (39,952) |

| | | |
|---|---|---|
| 2011 | (94,503) | (131,324) |
| 2012 | (97,308) | (228,545) |
| 2013 | (7,984) | (236,529) |




குறைந்த எல்லை, நலிவான உற்பத்தி மற்றும் அடிக்கடி தடைப்படுதல்களுடன் கூடிய சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனின்மையின் விளைவாக உள்நாட்டுக் கேள்வியை சமாளிப்பதற்காக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுதல், நப்தா மற்றும் பர்னஸ் எண்ணெய் 1500 ஏற்றுமதி செய்யப்படல், வரையறுத்த ஸ்ரீ லங்கன் விமானச் சேவைக்கும் மிஹின் லங்கா (தனியார்) கம்பனிக்கும் ஒப்பந்த வாடிக்கையாளர் விலையிலும் குறைவான சகாய விலையில் எரிபொருள் வழங்கப்படுதல், இடர் குறைத்தல் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெருமளவு நட்டம் ஏற்பட்டிருந்தமை, தனது எண்ணெய்ச் சிட்டைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கித் துறையிலிருந்தான கூட்டுத்தாபனத்தின் கடன்பெறுதல்களின் அதிகரிப்பு, கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கொள்வனவுச் செயன்முறையிலுள்ள வினைத்திறனின்மைகள், சீஈபீ இற்கு மானிய விலையில் சுத்திகரித்த எண்ணெயை வழங்குதல், முறையான இருப்பு மட்டங்களை பேணும் வேலைத்திட்டம், களஞ்சிய வசதிகள் போன்றன இல்லாமை காரணமாக இழப்பீடுகளைச் செலுத்துகின்றமையுமே கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிதிசார் நட்டங்களுக்கும் மூலதனக் குறைவிற்கும் தாக்கமளித்துள்ள பிரதான காரணிகளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இந்த நிதிப் பிரச்சினைகளைத் சமாளிப்பதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் எரிபொருள் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள்

அதிகரிக்கப்பட்டிருந்தன. அதேநேரம், மின்சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபையால் பயன்படுத்தப்படுகின்ற உயர் கந்தக மற்றும் குறைக் கந்தக எரிபொருள் எண்ணையின் விலைகள் 2013 ஏப்ரல் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் முறையே ரூபா 90 மற்றும் ரூபா 100 மட்டத்தினை அடையும் வகையில் ரூபா 25 ஆல் அதிகரிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகளிற்கு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பிரதான மாற்றங்கள் கீழே தரப்படுகின்றன.

| பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் | லீற்றருக்கான விலை (அமுலாகும் திகதி) | | ஆண்டில் விலை அதிகரிப்பு (லீற்றரொன்றிற்கு) | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 திசெ. 14 | 2013 பெப். 22 | 2012 | | 2013 | |
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் | ரூபா | சதவீதம் |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 167.00 | 170.00 | 12.00 | 7.7 | 3.00 | 1.8 |
| பெற்றோல் 90/92 ஒக்டேன் | 159.00 | 162.00 | 22.00 | 16.1 | 3.00 | 1.9 |
| லங்கா ஒடோ டீசல் | 115.00 | 121.00 | 31.00 | 36.9 | 6.00 | 5.2 |
| லங்கா சுபர் டீசல் | 142.00 | 145.00 | 35.70 | 33.6 | 3.00 | 2.1 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் | 111.00 | 115.00 | 35.00 | 46.1 | 4.00 | 3.6 |

### (ஆ) முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2013 | 2012 |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்த இலாப விகிதம் (ஜீபீ) (%) | 4.64 | (11.85) |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | 1.54 | (15.39) |
| தேறிய இலாப விகிதம் (என்பீ) (%) | (1.63) | (18.97) |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.32:1 | 0.41:1 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.16:1 | 0.26:1 |
| தொழிற்படு மூலதனம் (ரூபா மில்லியன்) | (287,661) | (256,768) |

**முதலீட்டு விகிதங்கள்**

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | (4.27) | (47.18) |
| ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான திரும்பல் (ஆர்ஓசீஈ) (%) | (3.38) | (42.58) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப விகிதமும் தேறிய இலாப விகிதமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 139 சதவீதத்தினாலும் 91 சதவீதத்தினாலும் முன்னேற்றமடைந்திருந்தன. மேலே குறிப்பிட்டவாறு 2013 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் சர்வதேச விலை போக்குகளுடன் இணைந்ததாக மசகு எண்ணையின் இறக்குமதிக் கிரயத்தில் ஏற்பட்ட குறைவு என்பன இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ii) விரைவுச் சொத்து விகிதத்தைப் போன்றே நடைமுறைச் சொத்து விகிதமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தன. அதன்படி, 2013 இல் கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதன நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேய்வடைந்திருந்தது. காசினதும் காசுக்கு சமமான விடயங்களினதும் குறைவும் வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் பெறுவனவுகளின் அதிகரிப்பும் இதற்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, 2013 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் (மசகு எண்ணை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள்) மொத்த இறக்குமதிக் கிரயம் ரூபா 535 பில்லியனாக காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் நடப்புச் சந்தை விலைகளில் பெறுமதியிடப்பட்ட ரூபா 8,674 பில்லியன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜீடீபீ) ஏறத்தாழ 6.2 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. மேலும், 2013 இன் ரூபா 2,323 மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 23 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மேற்படி இறக்குமதிகளுக்காக கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்த மொத்த பங்களிப்பு ரூபா 460 பில்லியனாகும்.

இறக்குமதிசெய்யப்பட்ட மசகு எண்ணையின் சராசரி விலை குறைவடைந்து பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் அதிகரித்திருந்த போதிலும்,

பின்வரும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிலிருந்து கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவித்திருந்தது. இது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| துறை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபங்கள் /(நட்டங்கள்) | | |
|---|---|---|---|
| | 2013<br>ரூபா மில். | 2012<br>ரூபா மில். | 2011<br>ரூபா மில். |
| **போக்குவரத்து** | | | |
| லங்கா ஒடோ டீசல் | (6,235) | (29,654) | (62,045) |
| **மின்வலு உற்பத்தி** | | | |
| நப்தா | (1,081) | (1,048) | (798) |
| எரிபொருள் எண்ணெய் - 3500 | (1,184) | (8,718) | (9,206) |
| எரிபொருள் எண்ணெய் - 1500 | (1,231) | (23,223) | (18,313) |
| எரிபொருள் எண்ணெய் - 1500 (எல்/எஸ்) | (9) | (11,733) | (5,764) |
| **விமானச்சேவை** | | | |
| "எவ்சுவர்" சர்வதேசம் | (1,251) | 122 | 114 |
| **கைத்தொழில்** | | | |
| எரிபொருள் எண்ணெய் - 1500 | (350) | (2,003) | (4,248) |
| எரிபொருள் எண்ணெய் - 800 | (333) | (904) | (1,790) |
| கைத்தொழில் மண்ணெண்ணெய் | (126) | (364) | (832) |
| உராய்வு நீக்கிகள் மற்றும் கிரீஸ் | (271) | 46 | 217 |
| **உள்நாடு** | | | |
| எல்பீ எரிவாயு (கே.ஜீ) | (436) | (377) | (224) |
| மண்ணெண்ணெய் | (2,449) | (3,525) | (6,886) |
| **விவசாயிகள்** | | | |
| விவசாய இரசாயனங்கள் | (70) | (2) | (5) |
| **ஏற்றுமதி** | | | |
| நப்தா ஏற்றுமதி | (976) | (43) | (675) |
| பர்னஸ் 1500 ஏற்றுமதி | (2,690) | (70) | (329) |
| **நிலக்கீழ்** | | | |
| டீசல் | (67) | - | - |
| எரிபொருள் எண்ணெய் - 1500 | (729) | - | - |

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நட்டமீட்டியிருந்த உற்பத்திப்பொருட்கள் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதன்படி, விமானச்சேவை துறையிலுள்ள "எவ்சுவர்" சர்வதேசம், கைத்தொழில் துறையிலுள்ள உராய்வு நீக்கி எண்ணெயும் மற்றும் கிரீஸ் அத்துடன் நிலக்கீழ் துறையிலுள்ள டீசல் மற்றும் எரிபொருள் எண்ணெய் 1500 இனைத் தவிர்த்து, ஏனைய சகல உற்பத்திப் பொருட்களும் தொடர்ச்சியாக நட்டத்தினை ஏற்படுத்தியிருந்த அதேவேளை ஏற்றுமதித்துறையிலுள்ள நட்டங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தொழில் முயற்சி வளத்திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமை

கூட்டுத்தாபனத்தின் பாரிய தொழிற்துறைப் போட்டியாளரான இந்தியன் எண்ணெய்க் கம்பனியின் (தாய்க் கம்பனி) உதவியுடனான இலங்கை பெற்றோலியக் குத இறங்குதுறை மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில் முயற்சி வளத்திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமைக்கு கூட்டுத்தாபன தரவு அடிப்படையை ஈடுபடுத்துவதிலான ஆபத்து பற்றி முறையான மதிப்பாய்வு எதுவும் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நோக்கத்திற்காக தனது வளங்களின் (மூலதனம் மற்றும் மனித இரண்டும்) குறிப்பிடத்தக்க அளவை ஈடுபடுத்தும் கடப்பாட்டை கூட்டுத்தாபனம் கொண்டிருந்தமையால், இந்த முறைமை ஒருங்கிணைப்பினூடாக எழக்கூடிய பயனுறு விளைவு பற்றி முறையான மற்றும் ஆழமான பகுப்பாய்வுகள் தொழில்முயற்சி வளத் திட்டமிடல் முறைமைகளின் துறையிலான நிபுணர்களின் உதவியுடன் மேற்கொண்டிருத்தல் வேண்டும். மேலும் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் அதன் அமுலாக்கலின் முன்னர் அவரவர்களுக்கு உரிய பொறுப்புக்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறை மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்முயற்சி வளதிட்டமிடல் முறைமையுடன் ஒத்திருக்க வேண்டிய கூட்டுத்தாபனத்தால் அதன் உபகரணங்கள் முதலியவற்றை மேம்படுத்துவதற்காக செய்யப்பட்ட மூலதன மற்றும் மனிதவளங்களிற்கு அப்பால் குறிப்பிடத்தக்களவான செலவைக் கவனத்தில் கொண்டு முற்பாதுகாப்பு

நடவடிக்கையாக உடன்படிக்கை/புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை வைத்திருப்பது மிக முக்கியமானதாகும்.

**(ஆ) ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவற்றிற்கு சகாய விலையில் எரிபொருளை வழங்குதல்**

ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவை ஒப்பந்த வழங்குனர்களாக காணப்பட்ட போதிலும் மேற்படி கம்பனிகளுக்கு அசாதாரண சகாய விலையில் விமாணச் சேவை எரிபொருள் வழங்கப்பட்டமையால் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 669.77 மில்லியன், ரூபா 456.6 மில்லியன் மற்றும் ரூபா 2,009.68 நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு.

| கம்பனியின் பெயர் | ஆண்டின் போது ஏற்பட்ட நட்டத் தொகைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | 2011 | |
| | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 14.10 | 1,866.39 | 3.29 | 423.97 | 5.47 | 627.16 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 1.08 | 143.29 | 0.25 | 32.58 | 0.38 | 42.61 |
| **மொத்தம்** | **15.18** | **2,009.68** | **3.54** | **456.55** | **5.85** | **669.77** |

சகாய விலையில் இந்த இரண்டு கம்பனிகளுக்கும் எரிபொருள் வழங்கப்படுவதனை தவிர்த்து, அவற்றினது நலிவான நிதிச்செயலாற்றல்கள் காரணமாக நிலுவையான எரிபொருள் சிட்டைகளைத் தீர்த்தல் மிகவும் பலவீனமானதாக காணப்பட்டது. உதாரணமாக: 2013 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, 2013 இல் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் ரூபா 28.6 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவுசெய்திருந்ததுடன் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ரூபா 1.5 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவுசெய்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள மீதிகளின் அதிகரித்துச் செல்லும் போக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| கம்பனியின் பெயர் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 29,519.68 | 25,890.12 | 12,351.43 | 541.54 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 4,313.68 | 3,416.10 | 1,227.02 | 361.24 |

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 53,190 மில்லியன் மொத்த வியாபார பெறவேண்டியவற்றில் 64 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை மேற்படி இரண்டு கம்பனிகளிடமிருந்தான வியாபார பெறவேண்டியவை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. இருப்பினும், இக் கம்பனிகளின் நலிவான நிதிச்செயலாற்றலைக் கருத்திற்கொள்ளாது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் இன் கடன் எல்லைகளை ரூபா 28 பில்லியனிலிருந்து ரூபா 35 பில்லியன் வரைக்கும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் இன் கடன் எல்லைகளை ரூபா 3.6 பில்லியனிலிருந்து ரூபா 5 பில்லியன் வரைக்கும் கூட்டுத்தாபனம் அதிகரித்திருந்தது.

**(இ) வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களின் அதிகரிப்பு**

தனது எண்ணெய் சிட்டைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களை கூட்டுத்தாபனம் அதிகரித்திருந்ததுடன் அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் நட்டமீட்டல் அதிகரித்து கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் நிலைமையினை மேலும் தேய்வுக்குட்படுத்தியிருந்தது. மேலும் கீழே காட்டப்பட்டவாறு அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காண்பித்து முன்னைய நான்கு ஆண்டுகளில் பாரிய நிதிக் கிரயம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கடன்கள் | சாதாரண நடவடிக்கைகள் மீதான வருடாந்த நட்டம் | நிதிக் கிரயம் | சாதாரண நடவடிக்கையிருந்தான நட்டத்தின் சதவீதமாக நிதிக் கிரயம் |
|---|---|---|---|---|
| | | ரூபா மில். | ரூபா மில். | % |
| 2010 | 168,020 | 26,923 | 6,859 | 26 |
| 2011 | 310,060 | 94,503 | 9,001 | 10 |
| 2012 | 399,520 | 89,569 | 18,360 | 21 |
| 2013 | 406,850 | 7,733 | 18,540 | 240 |

கீழே காட்டப்பட்டவாறு அண்ணியச் செலாவணிக் கடன்களுக்குப் பிணையாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சார்பில் திறைசேரி வழங்கியிருந்த உத்தரவாத எல்லையினை கூட்டுத்தாபனம் விஞ்சியிருந்தது.

| வங்கியின் பெயர் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி | | பிணை – பொதுத் திறைசேயின் உத்தரவாதம் | | பிணையினை விஞ்சிய தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். |
| இலங்கை வங்கி | 1,811 | 239,617 | 900 | 119,106 | 911 | 120,511 |
| மக்கள் வங்கி | 1,318 | 174,415 | 650 | 86,021 | 668 | 88,394 |

கூட்டுத்தாபனத்தின் தலைவர் இது குறித்து பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தர்.

*"1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் படி நிதிசார் நட்டங்களை சமாளிப்பதற்காக மானியம் கிடைக்காமையே உரிமை மூலதனத்தின் தேய்விற்கும் எதிர்மறையான தேறிய சொத்துக்களின் நிலைமைக்கும் பிரதான காரணமாக காணப்பட்டது. இந் நிலைமை நிதி திட்மிடல் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 2013 இல் பொதுத் திறைசேரியின் வேண்டுதலின் காரணமாக சீபீசீ இற்கு வட்டி வீத குறைப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2015 ஆம் ஆண்டின் பாதீட்டில் ரூபா 100 பில்லியன் உரிமை நிதியாக வழங்குவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது."*

**(ஈ) எண்ணையினை எடுத்துச்செல்வதற்காக குழாய்வழி வலையமைப்பு**

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், மற்றும் பர்னஸ் எண்ணெய் போன்ற முடிவடைந்த பெற்றோலியப் பொருட்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு போக்குவரத்துச் செய்வதற்காக பல தசாப்தங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்ட பெற்றோலியக் குழாய்வழிகள் மோசமாக சேதமடைந்துள்ளதுடன் அவற்றில் சில குழாய் வழிகள் சேதமடைந்து திருத்த முடியாத அளவில் காணப்பட்டன. நாட்டின் மொத்தக் கேள்வியில் அதிகளவிலான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கொலன்னாவை எண்ணெய் குதத்திற்கு இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாக போக்குவரத்துச் செய்யப்படுவதனால் இக் குழாய் வழிகளை நவீனமயப்படுத்தி புதுப்பித்தல் மிக அவசர தேவையாக உள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாகவே இறக்குமதி செய்யப்படுவதனால் தடங்கல்களுக்கான ஆபத்து காரணமாக நாடு முழுவதிலும் பாரிய எரிபொருள் பிரச்சினை ஏற்படுவதற்குள்ள வாய்ப்பினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

முத்துராஜவெல இலிருந்து அண்ணளவாக 7.2 கிலோ மீற்றருக்கு அப்பாலும் கடற்கரையிலிருந்து 6 கிலோ மீற்றருக்கு அப்பாலும் நடுக்கடலில் அமைந்துள்ள "சிங்ல் பொயின்ட் போய் "மூரிங்" (SPBM) ஊடாக முத்துராஜவெல தாங்கிக்கு எரிபொருள் பாய்ச்சப்படுகின்றது. கடல் கொந்தளிப்பாக இருக்கும் சந்தர்ப்பத்தல் அல்லது எஸ்பீபிஎம் பராமரிப்பிற்கு உட்பட்டிருக்கும் வேலையில் மாற்று விநியோக மூலங்கள் காணப்படவில்லை. அதேவேளை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை குதங்களுக்கிடையே மாற்றுவதற்காக முத்துராஜவெல குதத்திற்கும் கொலன்னாவ தாங்கிக்குமிடையே இணைப்புக்கள் காணப்படவில்லை. அவற்றிலுள்ள இவ்வாறான சிக்கலான தன்மைகள் காரணமாக அந்தக் குதங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.


நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்" இற்காக 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டம் இதுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சுத்திகரிப்புச் செயற்பாட்டின் வினைத்திறனின்மை

நாட்டின் தற்போதைய பெற்றோலியப் பொருட்களின் கேள்வியில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு சபுகஸ்கந்தையில் அமைந்துள்ள சீபீசீ இற்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையித்தினால் நிறைவேற்றப்படுகின்றது. நவீனமயப்படுத்தலின் தாமதம் காரணமாக ஏற்பட்ட செயற்பாட்டுக் கோளாறுகள் மற்றும் சுத்திகரிப்பு விரிவுபடுத்தலின்மை என்பன கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

2012 ஆம் ஆண்டின் 1,596,058 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தினால் (கையாளப்பட்ட) சுத்திகரிக்கப்பட்ட மசகு எண்ணையின் அளவு 2013 இல் 1,643,218 மெற்றிக் தொன்களாக அதிகரித்திருந்த போதிலும், நாளொன்றிற்கான 6,900 தொன்கள் அல்லது 2013 ஆம் ஆண்டிற்கான 2,415,000 மெற்றிக் தொன்கள் உற்பத்தி இயலளவினை செயன்முறை மட்டங்கள் அடைந்திருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்திய பத்து ஆண்டுகளிலும் ஆண்டொன்றிற்கு கையாளப்பட்ட மசகு எண்ணை அந்தந்த ஆண்டுகளின் உற்பத்தி இயலளவுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | உற்பத்திக்காக எடுக்கப்பட்ட (செயன்முறைப்படுத்தப்பட்ட) மசகு எண்ணையின் அளவு | | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | கிடைக்கக்கூடிய அளவு (மெற்றிக் தொன்) | உள்ளபடியான பயன்பாடு (மெற்றிக் தொன்) | அளவு (மெற்றிக் தொன்) | சதவீதம் |
| 2013 | 2,415,000 | 1,643,218 | 771,782 | 31.96 |
| 2012 | 2,242,500 | 1,596,058 | 646,442 | 28.83 |
| 2011 | 2,415,000 | 2,003,607 | 411,393 | 17.03 |
| 2010 | 2,242,500 | 1,752,716 | 489,784 | 21.84 |
| 2009 | 2,415,000 | 2,005,915 | 409,085 | 16.94 |
| 2008 | 2,242,500 | 1,870,237 | 372,263 | 16.60 |
| 2007 | 2,415,000 | 1,899,079 | 515,921 | 21.36 |
| 2006 | 2,415,000 | 2,140,132 | 274,868 | 11.38 |
| 2005 | 2,277,000 | 1,977,751 | 299,249 | 13.14 |
| 2004 | 2,415,000 | 2,216,646 | 198,354 | 08.21 |
| 2003 | 2,242,500 | 2,023,605 | 218,895 | 09.76 |




1969 இல் நிறுவப்பட்ட தற்போதுள்ள 45 வருடங்கள் பழமைவாய்ந்த சுத்திகரிப்பு ஆலையினால் நாட்டின் அதிகரித்துச் செல்லும் பெற்றோலியப் பொருட்களிற்கான தேவையை நிறைவேற்ற முடியாதுள்ளதுடன் உலகிலுள்ள ஏனைய நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடன் உயர் வினைத்திறனுடனும் செயற்பட்டு குறைந்த கிரயத்தில் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய சுத்திகரிப்பு ஆலைகளுடன்

ஒப்பிடுகையில் மிகக் குறைந்த எல்லையில் காணப்படுகின்றது. இருப்பினும், குறைந்த கிரயத்தில் சந்தைக்கு எரிபொருள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தீர்மானமாகியுள்ள சபுகஸ்கந்த எண்ணைச் சுத்திகரிப்பு விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (எஸ்ஓஆர்ஈஎம்) இதுவரை கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வ/ப இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறை கம்பனிக்கு 2009 முதல் 2013 வரையான ஆண்டில் செலுத்தப்பட்ட மிகை இறங்குதுறை கட்டணங்களை கூட்டுத்தாபனத்திற்கு மீளளிப்பதற்கு கம்பனி தீர்மானமொன்றை எடுத்திருக்காமையால் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் சொத்துக்கள், அந்தச் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தாது வைத்திருக்கப்பட்டிருந்தன.

(அ) வனாத்தமுல்லையிலுள்ள கலகஹ கும்புற காணி

எல்பீ எரிவாயு செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய நோக்கங்களிற்காக இந்தக் காணி ரூபா 10.6 மில்லியனிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மகென காணி

தரப்பட்ட தொடர்புகளின்படி, இந்தக் காணியின் சுவீகரிப்பிற்காகச் ரூபா 0.625 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது. எனினும் இந்தக் காணி கூட்டுத்தாபனத்தின் பதிவேடுகளில் கணக்கிடப்பட்டிருக்காததுடன் அது 1986 இலிருந்து முன்னைய சொந்தக்காரால் பயன்படுத்தப்படுகிறது.

(இ) முதலீடுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு கம்பனிகளின் விலைகூறப்பட்ட மற்றும் விலை கூறப்படாத பங்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளின் முன்கொண்டுசென்ற பெறுமதி ரூபா 38.636 மில்லியனாகும். எவ்வாறாயினும், நீண்ட காலமாக அதிலிருந்து எவ்வித பங்கிலாபமும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை. மேலும், ரூபா 5 மில்லியன் முதலீட்டை வைத்துள்ள சர்வதேச

ஒத்துழைப்பு பெற்றோலிய சங்கத்தின் உள்ளதன்மை குறித்து கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.6 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த வளங்கள்**

நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு, எந்தவொரு நிலைமையிலும் வரிசை அமைச்சு அல்லது ஏனைய எந்தவொரு அரசாங்க நிறுவனத்தினதும் சார்பாக செலவீனமொன்றை செய்வதற்கோ அல்லது வளங்களை ஈடுபடுத்துவதற்கோ இடமளிப்பதில்லை. இருப்பினும், கூட்டுத்தாபனம் பின்வரும் வளங்களை ஏனைய நிறுவனங்களிற்கு விடுவித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் பராமரித்தல் செலவுகளுக்காக ரூபா 46 மில்லியனுக்கும் அதிகமான தொகையை செலவிட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வளங்களின் வகை | எண்ணிக்கை | ஏற்பட்ட செலவினம் |
|---|---|---|
| | | ரூபா |
| மனித வளங்கள் | 44 | 41,980,142 |
| வாகனங்கள் | 07 | 4,461,920 |
| **மொத்தம்** | | **46,442,062** |

**4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை முறையே 3,284 மற்றும் 2,581 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியணி வகை | ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி | | உள்ளபடியான பதவியணி | | | | | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | | | 2012 | | | 2013 | 2012 |
| | | | நிரந்தர | ஒப்பந்த அடிப்படை | மொத்தம் | நிரந்தர | ஒப்பந்த அடிப்படை | மொத்தம் | | |
| சிரேஷ்ட | 446 | 372 | 293 | 03 | 296 | 300 | 01 | 301 | 153 | 72 |
| இரண்டாந்தர | 1,478 | 1,286 | 1,245 | 01 | 1,246 | 1,277 | 11 | 1,288 | 233 | 09 |
| ஆரம்ப | 1,360 | 1,347 | 1,033 | 06 | 1,039 | 1,060 | 10 | 1,070 | 327 | 287 |
| **மொத்தம்** | **3,284** | **3,005** | **2,571** | **10** | **2,581** | **2,637** | **22** | **2,659** | **713** | **368** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலவுகின்ற 713 வெற்றிடங்களில் 34 சதவீதமானவை சிரேஷ்ட பதிவியணியிலுள்ள (வர்த்தக முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் . சந்தைப்படுத்தல் உள்ளிட்ட) வெற்றிடங்களை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் பிரதான செயற்பாடுகளிற்கு எவ்வித தாக்கமுமின்றி அவ்வாறானதோர் பாரிய வெற்றிடத்துடன் இயங்குதல் கணக்காய்வில் கேள்விக்குரியாக உள்ளது.

(ஆ) சகல மட்டங்களிலுமுள்ள 10 வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் 2011 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ஆக பதிற்கடமை அடிப்படையில் பணியாற்றி வருகின்றார்.

(இ) 2013 திசெம்பர் 31 அளவில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபன தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை
(ஆ) வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை
(இ) கணக்கீடும் நிதி முகாமைத்துவமும்
(ஈ) கொள்வனவுகள்
(உ) வளங்களின் பயன்படுத்தல்
(ஊ) மனிதவளங்கள் முகாமைத்துவம்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 10 வருட சாரம்சம்

| மொத்த உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை<br>ரூபா மில்லியன் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) பெறுமதி** | | | | | | | | | | |
| பெற்றோல் | 28,761.37 | 28,633.66 | 36,677.34 | 46,579.62 | 66,433.73 | 60,055.14 | 65,157.91 | 90,498.78 | 132397.75 | 132,397.75 |
| ஓட்டோ டீசல் | 74,520.99 | 78,104.77 | 92,474.65 | 113,737.17 | 151,070.45 | 119,046.26 | 122,360.42 | 165,800.16 | 246441.2 | 216,419.74 |
| சுப்பர் டீசல் | 1,711.53 | 725,285 | 349.805 | 467.764 | 885.25 | 866.145 | 1,170.27 | 1,587.58 | 3539.87 | 4,151.77 |
| மண்ணெண்ணெய் | 7,775.14 | 11,430.28 | 13,209.91 | 12,459.33 | 14,000.05 | 9,754.54 | 10,711.00 | 12,804.33 | 18099.54 | 16,803.23 |
| உலை எண்ணெய் | 20,135.72 | 30,165.89 | 36,421.65 | 43,941.11 | 66,220.15 | 33,157.15 | 35,792.02 | 49,990.51 | 84790.17 | 60,651.35 |
| **மொத்தம்** | 132,904.73 | 149,059.89 | 179,133.35 | 217,184.99 | 298,609.63 | 222,879.22 | 235,191.62 | 320,681.36 | 485268.53 | 430,423.84 |
| **(ஆ) அளவு ஆயிரம் மெ. தொ.** | | | | | | | | | | |
| பெற்றோல் | 350.30 | 334.10 | 367.60 | 382.10 | 383.75 | 415.67 | 484.26 | 563.37 | 618.67 | 687.33 |
| ஓட்டோ டீசல் | 1,583.30 | 1,330.10 | 1,335.30 | 1,449.70 | 1,371.32 | 1,427.33 | 1,422.12 | 1,848.66 | 1930.4 | 1,757.39 |
| சுப்பர் டீசல் | 31.60 | 11.70 | 4.70 | 5.40 | 7.19 | 8.55 | 11.37 | 14.07 | 22.1 | 30.98 |
| மண்ணெண்ணெய் | 171.80 | 178.00 | 196.60 | 168.50 | 151.31 | 150.69 | 165.11 | 146.88 | 142.86 | 121.78 |
| உலை எண்ணெய் | 771.70 | 972.80 | 911.10 | 985.20 | 994.55 | 1,095.73 | 1,004.50 | 1,092.82 | 1187.08 | 722.3 |
| **மொத்தம்** | 2,908.70 | 2,826.70 | 2,815.30 | 2,990.90 | 2,908.11 | 3,097.97 | 3,087.35 | 3,665.80 | 3901.11 | 3,319.78 |
| **(இ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விற்பனை**<br>(டிசம்பர் 31 இல் உள்ளவாறு லீ. ஒன்றுக்கு கொழும்பு அவ்விடத்திலேயான விலை. ரூபா) | | | | | | | | | | |
| சுப்பர் பெற்றோல் | 70.00 | 80.00 | 95.00 | 92.00 | 120.00 | 115.00 | 115.00 | 125.00 | 159.00 | 162.00 |
| ஓட்டோ டீசல் | 44.00 | 50.00 | 92.00 | 60.00 | 70.00 | 73.00 | 73.00 | 76.00 | 115.00 | 121.00 |
| சுப்பர் டீசல் | 49.30 | 55.30 | 65.30 | 65.30 | 85.30 | 88.30 | 88.30 | 98.30 | 142.00 | 145.00 |
| மண்ணெண்ணெய் | 25.50 | 30.50 | 48.00 | 48.00 | 50.00 | 51.00 | 51.00 | 61.00 | 106.00 | 106.00 |
| உலை எண்ணெய் | | | | | | | | | | |
| உலை எண்ணெய் 1000" | 24.70 | 31.40 | 44.40 | 44.40 | 33.90 | 34.90 | 40.00 | 52.20 | 92.20 | 92.20 |
| உலை எண்ணெய் 1500" | 24.30 | 30.30 | 43.30 | 43.30 | 31.70 | 32.70 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 |
| உலை எண்ணெய் 3500" | 22.00 | 28.00 | 41.00 | 41.00 | 25.00 | 26.00 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 |
| **வருமானமும் செலவினமும்** | | | | | | | | | | |
| மொத்த வருமானம் | | | | | | | | | | |
| **கழி: வரிகள்** | 121,540.00 | 161,852.00 | 196,767.00 | 238.36 | 341.67 | 236,332.00 | 256,329.16 | 356,442.36 | 512,910.31 | 490,381.49 |
| **முதலீடுகளிலிருந்து வருமானம்** | - | - | - | - | - | - | - | - | - | |
| விற்பனைச் செலவுகள் | 106,750.00 | 144,501.00 | 187,231.00 | 221,724.00 | 338,514.00 | 233,250.00 | 265,603.76 | 428,070.57 | 568,572.79 | 467,637.93 |
| இலாபம் | 14,789.00 | 17,350.00 | 9,536.00 | 16,641.00 | 1,835.04 | 3,082.00 | (9,274.61) | (71,628.21) | (55,662.48) | 22,743.56 |
| அதி விஷேட விடயம் | - | - | - | - | - | - | - | | | |
| ஏனைய அறவீடுகள் உட்பட தொழிற்பாட்டு மற்றும் காபனச் செலவுகள் | 10,344.00 | 7,510.00 | 7,621.00 | 12,657.00 | 16,570.00 | 15,424.77 | 17,648.21 | 22,875.24 | 34,034.29 | 30,513.49 |
| ஹெட்ஜிங் செலவுகள் | - | - | - | | - | - | - | - | 7,611.60 | 214.49 |
| வரிக்கு முந்திய இலாபம்.'. (நட்டம்) | 4,445.00 | 9,840.00 | (1,915.00) | 3,984.00 | (14,735.00) | (12,342.64) | (26,922.82) | (94,503.45) | (97,308.37) | (7,984.23) |

** 2 002 பெப்ரவரி தொடக்கம் சூத்திரத்கேற்ப சில்லறை விலை மாதாந்தம் மீளளிக்கப்பட்டது.*

*** வரிகள் ஏற்பாட்டு*

# 10 வருட சாரம்சம்

| **மொத்த உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை**<br>ரூபா மில்லியன் | **2004** | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** | 2012 | **2013** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) பெறுமதி** | | | | | | | | | | |
| பெற்றோல் | 28,761.37 | 28,633.66 | 36,677.34 | 46,579.62 | 66,433.73 | 60,055.14 | 65,157.91 | 90,498.78 | 132397.75 | 132,397.75 |
| ஓட்டோ டீசல் | 74,520.99 | 78,104.77 | 92,474.65 | 113,737.17 | 151,070.45 | 119,046.26 | 122,360.42 | 165,800.16 | 246441.2 | 216,419.74 |
| சுப்பர் டீசல் | 1,711.53 | 725,285 | 349.805 | 467.764 | 885.25 | 866.145 | 1,170.27 | 1,587.58 | 3539.87 | 4,151.77 |
| மண்ணெண்ணெய் | 7,775.14 | 11,430.28 | 13,209.91 | 12,459.33 | 14,000.05 | 9,754.54 | 10,711.00 | 12,804.33 | 18099.54 | 16,803.23 |
| உலை எண்ணெய் | 20,135.72 | 30,165.89 | 36,421.65 | 43,941.11 | 66,220.15 | 33,157.15 | 35,792.02 | 49,990.51 | 84790.17 | 60,651.35 |
| **மொத்தம்** | 132,904.73 | 149,059.89 | 179,133.35 | 217,184.99 | 298,609.63 | 222,879.22 | 235,191.62 | 320,681.36 | 485268.53 | 430,423.84 |
| **(ஆ) அளவு ஆயிரம் மெ. தொ.** | | | | | | | | | | |
| பெற்றோல் | 350.30 | 334.10 | 367.60 | 382.10 | 383.75 | 415.67 | 484.26 | 563.37 | 618.67 | 687.33 |
| ஓட்டோ டீசல் | 1,583.30 | 1,330.10 | 1,335.30 | 1,449.70 | 1,371.32 | 1,427.33 | 1,422.12 | 1,848.66 | 1930.4 | 1,757.39 |
| சுப்பர் டீசல் | 31.60 | 11.70 | 4.70 | 5.40 | 7.19 | 8.55 | 11.37 | 14.07 | 22.1 | 30.98 |
| மண்ணெண்ணெய் | 171.80 | 178.00 | 196.60 | 168.50 | 151.31 | 150.69 | 165.11 | 146.88 | 142.86 | 121.78 |
| உலை எண்ணெய் | 771.70 | 972.80 | 911.10 | 985.20 | 994.55 | 1,095.73 | 1,004.50 | 1,092.82 | 1187.08 | 722.3 |
| **மொத்தம்** | 2,908.70 | 2,826.70 | 2,815.30 | 2,990.90 | 2,908.11 | 3,097.97 | 3,087.35 | 3,665.80 | 3901.11 | 3,319.78 |
| **(இ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விற்பனை**<br>(டிசம்பர் 31 இல் உள்ளவாறு லீ. ஒன்றுக்கு கொழும்பு அவ்விடத்திலேயான விலை. ரூபா) | | | | | | | | | | |
| சுப்பர் பெற்றோல் | 70.00 | 80.00 | 95.00 | 92.00 | 120.00 | 115.00 | 115.00 | 125.00 | 159.00 | 162.00 |
| ஓட்டோ டீசல் | 44.00 | 50.00 | 92.00 | 60.00 | 70.00 | 73.00 | 73.00 | 76.00 | 115.00 | 121.00 |
| சுப்பர் டீசல் | 49.30 | 55.30 | 65.30 | 65.30 | 85.30 | 88.30 | 88.30 | 98.30 | 142.00 | 145.00 |
| மண்ணெண்ணெய் | 25.50 | 30.50 | 48.00 | 48.00 | 50.00 | 51.00 | 51.00 | 61.00 | 106.00 | 106.00 |
| உலை எண்ணெய் | | | | | | | | | | |
| உலை எண்ணெய் 1000" | 24.70 | 31.40 | 44.40 | 44.40 | 33.90 | 34.90 | 40.00 | 52.20 | 92.20 | 92.20 |
| உலை எண்ணெய் 1500" | 24.30 | 30.30 | 43.30 | 43.30 | 31.70 | 32.70 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 |
| உலை எண்ணெய் 3500" | 22.00 | 28.00 | 41.00 | 41.00 | 25.00 | 26.00 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 |
| **வருமானமும் செலவினமும்** | | | | | | | | | | |
| மொத்த வருமானம் | | | | | | | | | | |
| **கழி: வரிகள்** | 121,540.00 | 161,852.00 | 196,767.00 | 238.36 | 341.67 | 236,332.00 | 256,329.16 | 356,442.36 | 512,910.31 | 490,381.49 |
| **முதலீடுகளிலிருந்து வருமானம்** | - | - | - | - | - | - | - | - | - | |
| விற்பனைச் செலவுகள் | 106,750.00 | 144,501.00 | 187,231.00 | 221,724.00 | 338,514.00 | 233,250.00 | 265,603.76 | 428,070.57 | 568,572.79 | 467,637.93 |
| இலாபம் | 14,789.00 | 17,350.00 | 9,536.00 | 16,641.00 | 1,835.04 | 3,082.00 | (9,274.61) | (71,628.21) | (55,662.48) | 22,743.56 |
| அதி விஷேட விடயம் | - | - | - | - | - | - | - | | | |
| ஏனைய அறவீடுகள் உட்பட தொழிற்பாட்டு மற்றும் காபனச் செலவகள் | 10,344.00 | 7,510.00 | 7,621.00 | 12,657.00 | 16,570.00 | 15,424.77 | 17,648.21 | 22,875.24 | 34,034.29 | 30,513.49 |
| ஹெட்ஜிங் செலவுகள் | - | - | - | | - | - | - | - | 7,611.60 | 214.49 |
| வரிக்கு முந்திய இலாபம்.:. (நட்டம்) | 4,445.00 | 9,840.00 | (1,915.00) | 3,984.00 | (14,735.00) | (12,342.64) | (26,922.82) | (94,503.45) | (97,308.37) | (7,984.23) |

** 2 002 பெப்ரவரி தொடக்கம் சூத்திரத்கேற்ப சில்லறை விலை மாதாந்தம் மீளளிக்கப்பட்டது.*
*** வரிகள் ஏற்பாட்டு*

# நிதியியல் கலைச் சொற்கள்

**காசு காசுக்கு சமாமானவை**- பொறுமதி மாற்றத்தின் ஆபத்துக்குட்படாத அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய குறுகிய கால முதலீடுகள்.

**எதிர்பார பொறுப்புக்கள்** - நிகழத்தக்க அல்லது நிகழமுடியாத அல்லது எதிர்கால நிகழ்ச்சி ஒன்றினால் நிர்ணயிக்கப்படுகின்றவற்றின் நிதியியல் தாக்கங்களின் ஐந்தொகை திகதியன்றுள்ள நிபந்தனைகள் அல்லது நிலைமைகள்.

**நடைமுறை விகிதசாரம்**- கிடைக்கத்தக்க நடைமுறைச் சொத்துக்களுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் செலவு செய்யப்பட்ட தொகை மீளப்பெற்றக் கொள்ளப்பட்ட கால எண்ணிக்கை அளவுகள்.

**புரள்வு கடன்படுநர்**- வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கப்பட்ட அளவு (அதாவது நாட்களில் சாரசரிக்கடன் தீர்ப்பனவுக்காலம் நாட்களில் குறிப்பிடப்பட்டால்)

**பிற்போடப்பட்ட வருமானம்**- இன்னும் தேறுவதற்கு அல்லது தேறி ஆனால் வருமானமாகப் அடையாளப்படுத்தப்டாத வருமானம்.

**வட்டி தழுவல்**- வரிக்கு முந்திய இலாபத்தினால் கவரப்பட்ட வட்டி அறவீடுகள் ரீதியிலான அளவுகள்.

**திரவத் தன்மை விகிதசாரம்-** கிடைத்தக்க நடைமுறைப் பொறுக்களுடன் செலவு செய்யப்பட்ட தொகை மீளப் பெற்றக் கொள்ளப்பட்ட சொத்துக்களின் கால எண்ணிக்கைகளின் அளவு.

**ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்**- ஐந்தொகை திகதி மற்றும் நிதியியல் கூற்றுக்கள் விநியோகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதிக்கிடையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்.

**ஏற்பாடுகள்**- நிலையற்ற கால அல்லது தொகை பொறுப்பு.

**தொடர்புடைய திறத்தவர்கள்** - கூட்டுத்தாபனத்தின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு தீர்மானங்களின் கொள்கைகளை கட்டுப்படுதுகின்ற அல்லது கனிசமான செல்வாக்கு செலுத்துகின்ற திறத்தவர்.

**பிரிவுகள்**- தொழிற்பாடுகளின் தன்மை மற்றும் ஒற்றுமை நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட வியாபார அலகுகளின் உள்ளடக்கம்.

**செயற்படு மூலதனம்**- நாளந்த தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கு தேவைப்பட்ட மூலதனம் (நடைமுறைச் சொத்துக்கள் கழிக்குக நடைமுறைப் பொறுப்புக்கள்).

# சுருக்கப் பதங்கள்

| | | |
|---|---|---|
| **Avn** | - | விமான போக்குவரத்து |
| **Bbl** | - | பீப்பா |
| **bps** | - | அடிப்படைப் புள்ளிகள் |
| **BTR** | - | பொருட்தொகுதி மாற்றம் |
| **CEB** | - | இலங்கை மின்சார சபை |
| **CIF** | - | கப்பலேற்றும் சரக்கின் கிரயக் காப்புறுதி |
| **CPC** | - | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| **EPF** | - | ஊழியர் சேமலாப நிதியம் |
| **ETFB** | - | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை |
| **FIFO** | - | முதல் வந்தவை முதல் வெளியே |
| **FOB** | - | தலத்தில் இலவசமாக |
| **FOREX** | - | அந்நிய செலாவணி |
| **GOSL** | - | இலங்கை அரசாங்கம் |
| **ICPA** | - | சர்வதேச கூட்டுறவு/ பெற்றோலிய சங்கம் |
| **Int** | - | வட்டி |
| **CPSTL** | - | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முடிவிடங்கள் |
| **LIOC** | - | வரையறுக்கப்பட்ட இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் |
| **LMS** | - | லங்கா மறைன் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட் |
| **LPG** | - | திரவப் பெற்றோலிய வாயு |
| **Ltr** | - | லீற்றர் (உள்நாட்டு பெற்றோலிய விற்பனையில் அடிப்படை அலகு) |
| **MOU** | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| **NDB** | - | தேசிய அபிவிருத்தி வங்கி |
| **OPEC** | - | எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகள் |
| **PERC** | - | பொது தொழில் முயற்சி சீர்திருத்த ஆணைக்குழு |
| **SPBM** | - | தனிமுனை மிதவை நங்கூரம் பாய்ச்சும் வசதி |
| **TT** | - | புரள்வு வரி |
| **VAT** | - | பெறுமதி சேர் வரி |
| **VRS** | - | சுயவிருப்ப ஓய்வுத் திட்டம் |